உ

சிவமயம்

# சோதிட வாசகம்

## இரண்டாம் புத்தகம்


ஆசிரியர்கள்:

த. கணபதிப்பிள்ளை — மு. சின்னப்பு

அளவெட்டி.



சாதாரண ௵ சித்திரை ௴

1970

உ

சிவமயம்

# சோதிட வாசகம்

(இரண்டாம் புத்தகம்)

★

ஆசிரியர்கள்:


த. கணபதிப்பிள்ளை — மு. சின்னப்பு

அளவெட்டி



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

135002

135002

135002 CC


★


சாதாரண வரு சித்திரை மீ.

1970.


விலை ரூபா 3/=

முதற் பதிப்பு: 1970.

13315

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை ஆசிரியர்களுக்கே உரியது



த. கணபதிப்பிள்ளை அவர்கள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## பிழை திருத்தம்

1. 40-ம் பக்கம் 5-ம் பந்தியின் இறுதியிலுள்ள நடாத்துவள் என்பதனை நடாத்துவன் எனத் திருத்துக.

2. 63-ம் பக்கத்தில் ஈற்றில் உள்ள படத்தில் தெற்கு என்பதற்குக் கீழுள்ள சதுரத்தை இரண்டாகப் பிரிக்க.

3. 65-ம் பக்கம் இறுதியிலுள்ள படத்தில் கர்க்கடகத்தில் மூதேவி பதமும் வீடும் காட்டப்பட்டிருப்பதைச் சிங்கத்தில் அமைத்துக்கொள்க.

## அறிவித்தல்

அனுபந்தம் 1 (அ) அனுபந்தம் 1 (ஆ) இந்த இரு அட்டவணையும் வசதி நோக்கிப் புத்தகத்தின் இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

# பதிப்புரை

1959-ம் ஆண்டில் எம்மால் எழுதப்பட்டு வெளி வந்த சோதிட வாசகம் முதலாம் புத்தகத்தின் தொடர்ச்சியாக இவ்விரண்டாம் புத்தகம் வெளியிடப் படுகின்றது.

ஆசிரியர் த. கணபதிப்பிள்ளை அவர்களின் பெரு முயற்சியினாலும், எனது ஒத்துழைப்பினாலும் இவ் விரண்டாம் புத்தகம் கையெழுத்துப் பிரதி வடிவிற் பூர்த்தியாகிச் சிலகாலமாக அச்சிற் பதிப்பிக்கும் வேலை தடைபட்டு வந்தது.

1969-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி குறிப் பிட்ட ஆசிரியர் த. கணபதிப்பிள்ளை அவர்கள் காலகதி யடைய இந்நாள் முதல் அன்னாரின் விருப்பினை நிறை வேற்றுவது அன்னாரின் ஆன்மசாந்திக்கு ஏதுவாகும் என்னும் பலரின் விருப்பும், குறிப்பிட்ட ஆசிரியர் த. கணபதிப்பிள்ளை அவர்களின் புத்திரன் திரு. இராச சிங்கம், அன்னாரின் தமையனாரின் புத்திரன் திரு. சி. குமாரகுலசிங்கம் ஆகியோரின் பொருளுதவி, மெய் யுதவியும் தூண்ட இந்நூலை வெளியிடலாயினேன்.

மு. சின்னப்பு.

16-4-70.

## பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. இலக்கின பாவம் | 1 |
| 2. தன பாவம் | 6 |
| 3. சகோதர பாவம் | 10 |
| 4. மாதுரு பாவம் | 14 |
| 5. புத்திர பாவம் | 18 |
| 6. சத்துரு பாவம் | 23 |
| 7. களத்திர பாவம் | 25 |
| 8. ஆயுட் பாவம் | 31 |
| 9. தன்ம பாவம் | 36 |
| 10. கன்ம பாவம் | 40 |
| 11. இலாபபாவம் | 44 |
| 12. விரயபாவம் | 47 |


உ
சிவமயம்

# சோதிட வாசகம்

## இரண்டாம் புத்தகம்

### பாயிரம்

ஒரு பிள்ளை பிறந்த நேரத்தைக் கொண்டு இராசிநிலை, நவாம்ச நிலை, செனனகால தசாபுத்தி இருப்பு ஆகியனவற்றைக் கொண்ட சாதகக் குறிப்பொன்றினைக் கணிக்கும் முறைபற்றிச் சோதிட வாசகம் முதலாம் புத்தகத்தில் விளக்கியுள்ளோம்.

இப்புத்தகத்தில் ஒரு சாதகக் குறிப்பிற் காணப்படும் கிரக ராசிநிலை, பாவநிலை ஆகியவற்றின் பலன்களையும், கிரக காரகங்களையும் ஆராய்ந்து பொதுப்பலன் காணும் முறை விளக்கப்படும்.

வேண்டிய எல்லா அம்சங்களும் சுத்தமாகக் கணித்து எழுதப்பட்ட ஒரு சாதகத்தை வைத்துப் பலன் ஆராயும் பொழுதும், பலன் தெளிந்துகொள்ள இயலாச் சந்தர்ப்பங்கள் பல குறுக்கிடக்கூடிய காரியமாயமைந்திருக்கவும், சாதகக் குறிப்பு மாத்திரம். கணிக்கக் கற்றுக்கொண்ட அளவில் பலன் காண முயல்வார்க்குப் பலன் காணும் முறையைக் கற்பிக்க எத்தனிப்பது பொருந்துமா ?

பலன்காணல் என்பதைச் சுயகரும முறையாகக் கொண்டு அதற்கு வேண்டிய சில மூலாதாரமான விதிகளை மாத்திரமே எடுத்துக் காட்ட முயல்கிறது இந்நூலென்பதைக் கருத்திலிருத்துவோரெவரும் இம்முயற்சியிற் குறைகூறுரென்னுந் துணிபுடையேம்.

சில விதிகளை மட்டும் கற்ற மாத்திரத்தே நாம் பலன் கூற வல்லேமெனக் கருதி ஏண் நாணின்றிப் பலன்களை முடிந்த முடிபாகக் கூற முனைவது பிழையென்பதனை ஈண்டு வற்புறுத்த விரும்புகின்றோம்.

'சந்திரனைச் சனிபார்த்தால் தாயும் பிள்ளையும் உடன்மாணம்' என்பது சோதிட நூல் விதிகளுள் ஒன்றாகும். சந்திரனுக்குச் சனிபார்வை அமைவதனைக் கண்டவுடன் தாய்க்கும் பிள்ளைக்கும்

# சோதிட வாசகம்

## முதலாம் பாடம்

### இலக்கின பாவம்

பன்னிரு பாவங்களுள்ளும் இலக்கினபாவமே பலன் காரியப்பாட்டிற்கு உயிர்நாடிபோன்றதாகவுள்ளது என்பதனை மனத்திலிருத்திக்கொள்க.

ஒருபிள்ளை பிறக்கும் நேரத்தில் உதயமாகிற விராசி எதுவோ அவ் விராசியே இலக்கின விராசியெனப்படும். இது கிழக்குத்திசையாகும். அவ் விராசியில் எப்பாகை அந்நேரத்தில் உதிக்கிறதோ அப்பாகை இலக்கினபாவ மத்தியமாகும். இலக்கினப்புடம் எனக்கூறுவது இப்பாகையை யேயாம். இலக்கின பாவமத்தியத்திலிருந்து முன்பதினைந்து பாகையும், பின்பதினைந்து பாகையும் சேர்ந்த முப்பது பாகையும் இலக்கினபாவ மாகும். இலக்கினபாவ மத்தியம் மேடத்திலமைந்தால் அது காரணமாக அச்சாதகம் மேடலக்கின சாதகம் எனப்படும்.

இலக்கின பாவத்திலுள்ள கிரகங்கள் எனக்கூறுவதற்கும், இலக்கின இராசியில் உள்ள கிரகங்கள் எனக்கூறுவதற்கும் வித்தியாச முண்டு. இதனை விளக்குவாம்.

மேட இராசியின் நான்காவது பாகை செனன நேரத்தில் உதிக்குமாறுவ் இலக்கினபாவமத்தியம் மேடத்தில் நான்காம் பாகையாகும். மேட இராசியின் முதல் நான்கு பாகையும், அதற்கு முன்னுள்ள மீன இராசியின் பிற் பாகத்திலுள்ள பதினொருபாகையுஞ் சேர்ந்த பதினைந்து பாகையும் இலக்கின பாவத்தின் முற்கூறுகும். அஃதாவது மீனத்தின் பத்தொன்பதாம் பாகையி லிருந்து மேடத்தின் நான்காவது பாகைவரை இலக்கின பாவத்தின் முற் கூறுகும். மேடத்தின் நான்காவது பாகை முதல் அதிலிருந்து பதினைந்து பாகைகளுக்கப்பாலுள்ள மேடத்தின் பத்தொன்பதாவது பாகை வரை இலக் கின பாவத்தின் பிற்கூறுகும். ஆகவே மீனத்தின் பத்தொன்பதாவது பாகை தொடங்கி மேடத்தின் பத்தொன்பதாவது பாகை முடியவுள்ள முப்பது பாகையும் இலக்கினபாவமாக அமையும். ஆதலின் மீனத்தின் பத் தொன்பதாம் பாகைக்கும் மேடத்தின் பத்தொன்பதாம் பாகைக்கும் இடையில் எவ்வெக்கிரகங்கள் இருக்கின்றனவோ அவை இலக்கின பாவத்தில் இருக்கும் கிரகங்களாகும். இலக்கினபாவமே முதலாம் பாவமாம். மேடத்தின் பத்தொன்பதாம் பாகைக்கு அப்பாலிருக்குங் கிரகங்கள்

இரண்டாம் பாவத்திலும், மீனத்தின் பத்தொன்பதாம் பாகை எல்லைக்கு முன்னிருக்குங் கிரகங்கள் பன்னிரண்டாம் பாவத்திலும் இருப்பனவாகக் கொண்டு பலன் ஆராய்தல் வேண்டும். மீனத்தின் பத்தொன்பதாவது பாகை இலக்கினபாவாரம்பமாகவும், மேடத்தின் நான்காவது பாகை இலக்கின பாவமத்தியமாகவும், மேடத்தின் பத்தொன்பதாவது பாகை இலக்கின பாவஅந்தமாகவும் அமையும்.

சிங்கராசியின் பதின்மூன்ருவது பாகை இலக்கினப்புடமாக அமையும் இன்ெனுரு சாதகத்தினை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இச்சாதகத்துக்கு முதலாம் பாவமாகிய இலக்கினபாவ மத்தியம் சிங்கவிராசியின் பதின்மூன்ரும் பாகையாகும். இப்பதின்மூன்று பாகை எல்லைவரை இலக்கினபாவ முற்கூற்றிற்குரிய பதினைந்து பாகை வியாபிக்கில் பாவ ஆரம்பம் கற்கடகத்தின் இருபத்தெட்டாம் பாகையாக வமையும். பிற்கூற்றிற்குரிய பதினைந்து பாகை வியாபகம் சிங்கம் பதின்மூன்ரும் பாகை முதல் சிங்கத்தின் இருபத்தெட்டாம் பாகைவரை அமையும். இவ்விருபத்தெட்டாம் பாகையே இலக்கினபாவ அந்தமாகும். எனவே கற்கடகத்தின் இருபத்தெட்டாவது பாகைமுதல் சிங்கத்தின் இருபத்தெட்டாவது பாகைவரை இலக்கின பாவமாகும். சிங்கத்தின் பதின்மூன்ருவது பாகையிலிருந்து முப்பது பாகைக்கு அப்பாலுள்ள கன்னியின் பதின்மூன்ருவது பாகை இரண்டாம் பாவமத்தியமாகும். சிங்கத்தின் இருபத்தெட்டாவது பாகை முதல் கன்னியின் இருபத்தெட்டாவது பாகைவரை இரண்டாம் பாவமாகும். கன்னியின் இருபத்தெட்டாவது பாகை முதல் துலாத்தின் இருபத்தெட்டாவது பாகைவரை மூன்ரும் பாவமாகும். இவ்வாறே எல்லாப் பாவங்களுக்கும் பாவ ஆரம்ப, மத்திய, அந்தங்கள் கணித்துக்கொள்க. நாம் இலக்கினபாவ மத்தியமாகக் கொள்வதனையே இலக்கினபாவ ஆரம்பமாகக்கொண்டு பாவாரம்ப மத்திய அந்தங்கள் கணக்கிடுவர் மேலைத்தேசச் சோதிடர்.

இலக்கின பாவத்தைக் கொண்டு எவ்வெவ்விடயங்களின் செயற்பாடுகள் அறியமுடியுமோ அவ்வவ்விடயங்கள் இலக்கினபாவகாரகங்கள் எனப்படும். இரண்டாம் பாவத்தினலறியப்படுஞ் செயற்பாடுகளுக்குக் காரணமான விடயங்கள் இரண்டாம் பாவகாரகங்கள் எனப்படும்.

எந்தக் கிரகம் என்னபலனைக் கொடுக்க அதிகாரியோ அந்தக் கிரகம் அப்பலனுக்குக் காரகன் எனப்படுவான். இவ்வாறே பன்னிருபாவங்களுக்கும் காரகங்கள் தேறப்பட்டிருக்கின்றன. ஒருபாவத்தாற் பெறப்படுவன அப்பாவத்தின் காரகங்களென நூல்கள் கூறும்.



ஒவ்வொரு பாவத்துக்கும் காரகங்கள் இருப்பதுபோல ஒவ்வொரு இராசிக்கும் காரகங்கள் உண்டு. கிரகங்களுக்கும் இவ்வாறே காரகங்கள் தேறப்பட்டிருக்கின்றன. ஒரு பலனைக் கொடுப்பதற்கு உரியபாவம் அப்பலனுக்குக் காரகபாவமாகும். காரகங்களை அறிந்தபின்பே பலன் ஆராய முடியும்.

**முதலாவது பாவத்துக்குரிய காரகங்கள் :**

ஆத்மா, தேகம், தலை, கீர்த்தி, உடம்பின் நிலை, அதன் தோற்றம், உடம்பிலுள்ள மற்சம், மறு, மனேதிடம், வசீகரசத்தி, சூழல், ஆயுள், பிணி ஆதியனவாகும்.

இவ்விடயங்களைப் பற்றிய பலன் அறிவதற்கு இப்பாவம் அமைந்திருக்கிற இராசியின் காரகங்களும், இப்பாவத்திலிருக்கிற கிரகங்களின் காரகங்களும், அவற்றின் பெலா பெலமும் அறியவேண்டும். இவற்றைவிட, குறித்த இப்பாவமாகிய இலக்கினபாவத்துக்குரிய அதிபதியும் இப்பாவம் அமைந்த இராசியின் ஆட்சிக்கிரகமும் பலமடைந்திருக்கின்றனரோ அல்லரோ என்பதனையும் ஆராய்வது அவசியமாகும்.

நாம் உதாரணமாக எடுத்துக்கொண்ட சாதகம் மேடவிலக்கின சாதகமாதலின் இப்பாவபலன் ஆராய்ச்சியில் மேடவிராசிக்குரிய காரகங்களையுஞ் செறித்துப் பலன் தெளியவேண்டும். மேடவிராசியின் காரகங்கள் சிரசு, முகம், நரை, நிறம், சுருண்டு இருண்டமயிர், ஆதியனவாகும்.

நாம் எடுத்துக்கொண்ட மேட இலக்கினத்திற் சூரியன் இருக்கிருரென வைத்துக்கொள்வோம். இவ்வாருனல் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் பெருமை, தேகசுகம், கீர்த்தி, ஆதியாக அமைந்தவிடயங்களையும் இயைபு படுத்திப் பலன் தேறவேண்டும். சூரியன் இந்த இராசிக்கு உச்சக்கிரகம். வேறுபெலவீனம் சூரியனுக்கு இல்லாவிட்டால் சூரியனின் காரகமாகிய பிதாவுக்கு நற்பலன் கூறவேண்டும். முதலாம் பாவத்தின் காரகங்களுள் ஒன்று கீர்த்தி. ஆகவே பிதாவுக்கும், சாதகிக்கும் கீர்த்தியுண்டாமெனல் பொருந்தும். சூரியன் மேடவிராசியில் உச்சமாய் நிற்பது மேடவிராசியின் காரகமாகிய சிரசுக்குப் பலத்தைக் கொடுத்துச் சிரசில் நோயில்லாத் தன்மையைக் கொடுக்கும்.

இவ்வுச்ச பெலம் தானபெலம் எனப்படும். உச்சம், ஆட்சி, நட்பு, பகை, நீசம் ஆகியவற்றுள் உச்சம் அதிக பெலமுள்ளதாயும் மற்றைய முறையே பெலம் குறைந்தும்; நீசம் அதிக பெலவீன முள்ளதாயும் இராக்கும். இதன் விபரத்தை அநுபந்தத்தில் காணலாம்.

இலக்கினப்புடம் எவ்விராசியில் அமைகின்றதோ அவ்விராசிக்குரிய கிரகம் இலக்கினாதிபதி எனப்படுவர். இவர் இருக்கும் இராசியினால் இவருக்கமையும் பலன்களுள் பொருத்தமானவற்றையும் இலக்கின பாவ ஆராய்ச்சியிற் செறித்துப் பலன் காணவேண்டும். எட்டாம் பாவ காரகங்களுள் விழுகையும் ஒன்றாகும். மேட இலக்கினாதிபதியாகிய செவ்வாய் எட்டாம் பாவத்திலிருப்பின் கீர்த்திக்குரிய சாதகமாயினும் இடையிடையே கீர்த்திப்பங்கமுஞ் சம்பவிக்கும். இவருக்கு இவ்விராசி ஆட்சி விடாதலின் பின்னாலியாதேனும் நன்மையின் பொருட்டு முன்னால் விழுகை சம்பவிக்கலாம். பத்தாம் பாவகாரங்களுட் புகழும் ஒன்றாகும். செவ்வாய்க்குப் பத்தாம் பாவம் திக்குவீரியமாகும். செவ்வாய் பத்தில் இருப்பின் புகழ் வானளாவும். இது தானபெலத்தினால் அமைந்தபெலனாகும். மேடவிலக்கினத்திற்குப் பத்தாம் பாவம் செவ்வாயின் உச்சவீடாகும். செவ்வாய் இதிலிருப்பின் கீர்த்திமென்மேலும் பெருகும். இதுதான பெலத்தினாலமையும் பலனாகும். இவ்விலக்கினத்துக்கு நான்காம் பாவம் செவ்வாயின் நீச வீடாகும். செவ்வாயிதிலிருப்பின் நற்பலன்களின் வலிமை குன்றும். இலக்கின காரகமாகிய தேகசுகங்குன்றும்; துன்பந்தருஞ் சூழல் அமையும். சனவசியம் குன்றும். இதுதான பெலவீனத்தினாலமையும் பலனாகும். நான்காம் பாவம் நீர்க்கீழ் எனப்படும். செவ்வாய் இதிலிருத்தலால் புகழ் பாதாள பரியந்தம் மறைதற்கு இடமுண்டாகும். இதுதான பெலவீனத்தினால் அமையும் பலனாகும். இந்த நான்காம் பாவம் சலவிராசியாகிய கற்கடகத்திலமைதலினாலும், இதிலிருக்குஞ் செவ்வாய் இலக்கினாதிபனேயன்றி அட்டமாதிபனுமாய் அமைதலினாலும் இலக்கின காரகமாகிய விபத்து சலத்தினால் ஏற்பட இடமுண்டு என அறிக. இதுதானபலவீனத்தினாலே அமையும் பலனாகும்.

மேடலக்கினத்திற் செவ்வாய் ஆட்சியடையின் இவரின் காரகமாகிய மல்யுத்த விருப்பும், போர்த்திறமையும், வனசஞ்சாரவிருப்பும் அதிகரிக்கும்.

யாம் இங்கே கூறியவை பொதுவகை ஆராய்ச்சியாகும். சிறப்பு வகையாகப் பலனறிதற்குவிரிவான ஆராய்ச்சி வேண்டப்படும் என்பதனை மனதிலிருத்திக் கொள்க.

ஒரு இராசியிலுள்ள முப்பதுபாகையையும் நூற்றைம்பது பாகமாகப் பிரித்து வரும் ஒவ்வொரு பாகமும் ஒரு நாடி எனப்படும். 30 பாகை = $30 \times 60 = 1800$ கலை. $1800 \div 150 = 12$ கலை. ஆகவே ஒரு நாடியில் பன்னிரண்டு கலை உண்டு. ஒருநாடியின் முன்னரையாகிய ஆறு கலையும் பூர்வபாகம் எனவும், பின்னரையாகிய ஆறு கலையும் உத்தரபாகம் எனவும் அழைக்கப்படும் பூர்வம் - முன், உத்தரம் - பின்.



இந்நாடிகள் இலக்கினத்தின் நாடி அம்சங்களாகும். ஒரு இராசியை ஒன்பது கூறிட்டது நவாம்சம் என்றாற்போல முந்நூறு கூறிட்டது நாடியம்சம் எனப்படும். இவ்வம்சங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர்கண்டு இவற்றைச் சிற்சில கிரகநிலைகளோடு தொடர்புபடுத்தி நுண்ணிய பலன்கள் பலவற்றை விரிவாய் நாடி சாத்திரங்கள் எடுத்தியம்பும். இப்படியாக ஒரு நாடியம்சத்திற்குக் கூறப்பட்டிருக்கும் பலனைக் கீழே காண்க.

மேடத்தில் பதினெட்டுப்பாகை பன்னிரண்டு கலைதொடக்கம் பதினெட்டுப்பாகை இருபத்துநான்கு கலைவரையுமுள்ள நாடி மங்களாம்சம் எனப்பெயர் பெறும். சென்ம இலக்கினம் மேடம், மங்களாம்சமாகிப் பூர்வபாகத்திற் பிறந்தவனுக்கு ஒன்பதாம் பாவாதிபதி குரு மேஷாம்சத்தில் நின்று ஒன்பதாம் பாவத்தைப் பார்த்தால் சாதகனுடைய பிதா பணமுடையவன், ஞானமார்க்கத்தில் ஆராய்ச்சியுடையவன், பாலயத்தில் தாமதமானகாரியத்தைச் செய்பவன்; மத்திம அந்தியவயதுகளில் சாத்விகமும் சுகமும் உள்ளவன்; தர்மம் செய்பவன். அநேக சிநேகிதர்களையுடையவன் எனப் பலன் கூறப்பட்டிருக்கிறது. ஒரு பாகை உதித்த நேரந்தொடங்கி அடுத்தபாகை உதிக்கும் நேரம்வரை செல்லும் நேரம் நான்கு மினிற்றாகும். ஆகவே நாடியம்சங்களின் ஒவ்வொரு பாகமும் இருபத்துநான்கு செக்கனுக்கு ஒன்றாக உதிக்கும். செனன நேரம் எனக்கொடுபடும் நேரம் இந்த இருபத்து நான்கு செக்கன் எல்லை தவறினால் நாடி மாற்றங்காரணமாக மேலே குறித்த பலன்களிற் சிலபொருந்தினும் பலபொருந்தா.

இலக்கின நிச்சய கணித ஆற்றலுள்ளார் இலக்கினங்களின் நாடியம்சத்தினை அறிந்து கொள்வர். சாதக பலனைச் சிறப்பு வகையாக அறிதற்குப் பலன்பாகம், கணிதபாகம் இரண்டிலும் நுண்மதிவேண்டும். ஆதலால் சாதகபலனிற் சிலவற்றைப் பொதுவகையாக அறிந்தமாத்திரத்தே பலன் காண்படலம் முற்றிற்று எனக்கருதிவிடலாகாது என்பதனை ஈண்டுவலியுறுத்துகிறோம்.

## இரண்டாம் பாடம்

## தனபாவம்

ஒரு இராசியின் எத்தனையாவது பாகை இலக்கின மத்தியமாகுமெனக்கண்டு, அடுத்த இராசியின் அத்தனையாவதுபாகை இரண்டாம் பாவ மத்தியமாகுமெனவும், மூன்றும் இராசியின் அத்தனையாவதுபாகை மூன்றும் பாவ மத்தியமாகுமெனவும் முதலாம் பாடத்திற் படித்தோம்.

இந்தப்புடங்கள் மத்திமப்புடங்களாகும். சுத்தப்புடங்கணிப்பதற்குக் கணிதவிதிகள் பலகற்கவேண்டும். ஆரம்ப சோதிடம் கற்போருக்கு மனக்கலைப்பினைக் கொடுக்கும் என்றகாரணத்தினல் அக்கணித விதிகளை ஈண்டுப் புகுத்தாது விட்டிருக்கிறேம். மத்திமப்புடங்களை வைத்துக்கூறிய விடயங்களைத் தெளிந்து கொண்டு கணிதவல்லாரால் பாவப்புடங்களைக் கணிப்பித்து ஆரம்பத்தில் பலன் அறியப்பழகுதல் நன்றாகும். சுத்தப்புட கணிதமுறைகளைப் பின்னுற்கற்றுக்கொள்ளலாம்.

இராசி மண்டலம் தீர்க்கவட்ட வடிவினதாயில்லாமல் நீள்வட்ட வடிவினதாய் அமைந்திருப்பதனுல் எல்லாவிராசிகளும் ஒரேயளவினவாயில்லை. யாழ்ப்பாணத்தில் மேடவிராசியின் ஆரம்பம் உதிக்கும் நேரந்தொடங்கி இடபவிராசியின் ஆரம்பமுதிக்கும் வரைசெல்லும் நேரம் நான்கு நாடி முப்பத்து நான்கு விநாடியாகும். இது மேடத்தின் இராசிமானம் எனப் பெயர் பெறும். மானம் - அளவு. இடபவிராசியின் ஆரம்பம் உதிக்கும் நேரந்தொடங்கி மிதுனவிராசியின் ஆரம்பம் உதிக்கும்வரையுள்ள நேரம் ஐந்து நாடி ஆறுவிநாடியாகும். இது இடபவிராசிமானம் ஆகும். மேடவிராசிமானமும் இடபவிராசிமானமும் வித்தியாசப்படுவதுபோல ஏனைய விராசி மானங்களிலும் வித்தியாசமுண்டு.

இவ்விராசிமான பேதங்கள், பாவப்புட எல்லைகள் ஒவ்வொன்றும் முப்பது பாகையாகவமையாது கூடிக்குறைந்திருப்பதனுல் அமைந்தனவாகும். ஆதலால் பாவாரம்ப, மத்திய, அந்தங்கள் முன்னர்க்கூறிய படியன்றி இராசிதோறும் பேதப்படும் என அறிக. பாவப்புட வாய்பாட்டு வெளியீடுகளில் (**Tables of ascendants**) சுத்தபாவப்புடம் கணிக்கும் விதிகளைக் காணலாம். இக்கணித விதிகளும் பலபேத முடையன. நாம் இவ்வித பேதங்களுண்டென்பதை மாத்திர மறிந்து கொண்டு முதலாம் பாடத்திற் கூறிய பாவபுடங்கணிக்கும் முறையையே பின்பற்றுவோம்.

இரண்டாம் பாவத்தின் பிரதான காரகம் தனமாகும். இப்பாவத்தைத் தனபாவமெனக் கூறுவது சோதிட நூன்மரபு. இரண்டாம் பாவத்தின் காரகங்கள் தனம், வாக்கு, குடும்பம், நேத்திரம், வித்தை, முகம் ஆதியன.



ஒருவருடைய தனபலன் எப்படியிருக்குமென அறிவதற்கு இரண்டாம் பாவத்தின் பெலாபெலம் ஆராயவேண்டும். சுபக்கிரகம் இருக்கும்பாவம் பெலமடையும் என்பது பொதுவிதி. நவக்கிரகங்களுள் பூர்வபக்கச்சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன் என்னும் நால்வருஞ் சுபர். சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது, ஆகிய ஐவரும் பாபர். அபரபக்கச் சந்திரன் பாபி. பாபரோடு கூடிய புதனும் பாபி.

சுபாவ சுபக்கிரகங்களும் அசுப ஆதிபத்தியம் பெறின் அசுப பலனைக் கொடுத்தற்கு உடன்படுவர். பன்னிருபாவங்களுள் ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய மூன்றும் அசுப பலனுக்கு உரியன என்றும், மூன்றும் பாவம் சுபாசுப பலனுக்குரியதென்றும், ஏனைய பாவங்கள் சுப பலனுக்குரியனவென்றும் பொதுவாகக் கூறப்படும். இவ்வாறே ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களுக்கு அதிபர் அசுப பலனுக்குரியவரென்றும், மூன்றுதிபன் சுபாசுப பலனுக்குரியவரென்றும், மற்றைய எட்டுப் பாவாதிபதிகளும் நற்பலனுக்குரியவரென்றும் அறிதல் வேண்டும். ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய பாவங்களினதிபதிகள் எப்பாவங்களில் நின்றாலும் அப்பாவங்களின் சுபகாரகங்கள் பழுதடையும் என்பது பொது விதி. ஆனால் ஆறு, எட்டு, பன்னிரண்டுக்குடையோர் இருந்த இராசியதிபர் சுபத்துவமடையின் கஷ்டமேற்படினும் தணிவாயிருக்குமெனவும், சுபத்துவமடையாராயின் அதிக கஷ்டமுண்டாகுமெனவும் கூறலாம்.

இலக்கினதிபன் எந்தப்பாவத்தில் நிற்கிறாரோ அப்பாவத்தின் சுபத்துவம் அதிகரிக்கும். பாபக்கிரகம் நிற்குமிடங்களின் சுபத்துவம் பழுதடைய வேண்டியிருப்பினும் இவர் இலக்கினதிபனுயின் சுபத்துவம் அதிகரிக்கும்.

ஆதிபத்திய பலன் இரண்டாம் பாவத்தில் வைத்து விளக்கப்படுவது கொண்டு அஃது அப்பாவத்துக்கு மாத்திரம் உரியதெனக் கொள்ளற்க. யாம் முன்னர்க் கூறியபடி இப்பலனும் எல்லாப் பாவங்களுக்கும் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதை மறத்தலாகாது. உதாரணமாக இலக்கினதிபன் இலக்கினத்தில் நின்றால் இலக்கினம் மிகப் பெலமடையும். ஆறெட்டுப் பன்னிரண்டாதிபர் இலக்கினத்தில் நின்றால் இலக்கினம் பெலவீனமடையும் என்றவாறு.

இலக்கினதிபன் இரண்டாம் பாவத்தில் நின்றால் சுயமுயற்சியால் தனஞ்சேரும். இரண்டாதிபன் கல்விக்குரியவனுதலால் இரண்டிலிருக்கும் இரண்டாதிபனுல் கற்றகல்வியின் பலனுகத் தனஞ் சேரும். மூன்றுதிபன் இரண்டில் நின்றால் இளைய சகோதரர்மூலம் பொருள் சேரும் அல்லது அழியும். மூன்றும் பாவகாரகங்களுள் ஒன்று இளைய சகோதரம், நான்காதிபன் இரண்டில் நின்றால் பூமிவிருத்தியாற் பொருள் சேரும்.

அல்லது பூமியாற் பொருள் நட்டம் உண்டாகும். பூமி நான்காம் பாவ காரகங்களுளொன்றாதலின். இவ்வாறே ஒவ்வொரு பாவத்தின் காரகமூலம் தனலாபநட்டங்களை அறிதல் வேண்டும். இரண்டில் நிற்பவர் ஐந்தாதிபனாயின் புத்திரர் மூலமும், ஆறாதிபனாயின் பகைவர் கள்வர் மூலமும், ஏழாதிபனாயின் களத்திரமூலமும் தனலாப நட்டஞ் சம்பவிக்கும். அட்டமாதிபன் இரண்டில் பெலமடையில் உரிமையால் அன்றிப் புதையல் மூலம் பணஞ் சேரும். பலவீனப்படில் ஏமாற்றுக்காரர் மூலம் பணமழியும். இரண்டில் இருப்பவர் ஒன்பதாதிபனாயின் பிதாமூலமும், பத்தாதிபனாயின் தன்முயற்சியாலும், பதினோராதிபனாயின் அதிட்டச்சீட்டுப் போன்றவற்றாலும் பொருள் சேரும். பன்னிரண்டாதிபன் இரண்டிலிருக்கின் வீண் காரியங்களிற் பொருள் விரையமாகும்.

கிரகங்களுக்குரிய பெலங்களில் திக்குப்பெலமுமொன்று. இலக்கினம் கிழக்குத் திக்கெனவும், நான்காம் பாவம் தெற்குத் திக்கெனவும், ஏழாம் பாவம் மேற்குத் திக்கெனவும், பத்தாம் பாவம் வடக்குத் திக்கெனவுங் கொள்ளப்படும். ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒவ்வொரு திக்கு பெலமாகவும், அதற்கு எதிர்த்திக்கு பெலவீனமாகவும் உண்டு.

குருவும் புதனும் கிழக்கில் பெலமுடையர். அஃதாவது குரு அல்லது புதன், அல்லது இருவரும் இலக்கினத்தில் அமையின் அவர்கள் திக்குப் பெலம் பொருந்துபவராவர். அவர்கள் இலக்கினத்துக்கு எதிரேயுள்ள ஏழாம் வீடாகிய மேற்குத் திக்கில் நின்றால் வலிமையிழந்தவராவர். இவ்வாறு எல்லாக்கிரகங்களுக்கும் திக்குப்பெலாபெலம் அமையும் விவரத்தை அநுபந்தத்திற் காண்க.

புதன் இரண்டாதிபதியாகித் திக்குவீரியம் பொருந்தினால் தனபலன் அதிகரிக்கும். இரண்டாதிபதி குருவாகித் திக்குப்பெலம் பொருந்தினால் இவர் தனபாவாதிபதியும் தனகாரகனுமாதலின் விசேட தனலாபம் சித்திக்கும். யோக சாதகமாயின் இவர்கள் தசாபுத்தி காலங்களில் புதிதுபுதிதாகக் கல்வி, செல்வம் ஆதியன உதித்துக்கொண்டிருக்கும்; கிழக்குத்திக்கு உதயமாதலின்.

திக்கு வீரியம் பொருந்திய சந்திர சுக்கிரர் தசாபுத்திகாலங்களில் ஆரம்பிக்கும் நற்காரியங்கள் பாதாள பரியந்தம் வேரூன்றி நிலைக்கும்; தெற்குத்திக்கு நீர்க்கீழாதலின்; திக்கு வீரியம் பொருந்திய சூரியன் செவ்வாய் தசாபுத்தி காலங்களில் புகழ் வானளாவும், வடக்குத் திக்கு வானத்துச்சி ஆதலின். அவ்வாறாய சனி, இராகு தசாபுத்திகாலங்களில் தூரதேச யாத்திரையில் கீர்த்தி பெருகும்; உதயத்துக்குத் தூரத்திலுள்ளது மேற்கு ஆதலின்.



இரண்டாதிபனாயமைந்த குரு அல்லது புதன் ஏழாமிடத்தில் நின்றால் அந்நிலை தனபலனுக்குப் பாதகமாயிருக்கும். இவ்வாறே எல்லாக்கிரகங்களும் திக்குப் பெலாபெலம் அடையும்போது அவரவரின் பாவாதிபத்திய காரகங்கள் செயற்படும் வகையை ஊகித்துக்கொள்ளல் வேண்டும்.

முதலாம் பாடத்திற் படித்த ஸ்தானபெலமும், இப்பாடத்திற்படித்த திக்குப் பெலமும் மேல்வரும் பாடங்களிற் கூறப்படும் இன்னும் நான்கு பெலமுமாக மொத்தம் அறுவகைப் பெலமும் பன்னிரு பாவத்திற்கும் வேண்டப்படும் என்பதனை மனதிற்கொண்டு பொதுப்பலன் காணவேண்டும்.

இரண்டாம் பாவத்துக்குப் பலன் கூறும்பொழுது இராசி மண்டலத்தின் இரண்டாம் பாவமாகிய இடபத்தின் சுபாசுபத்தையும் இயைபுபடுத்திப் பலன் காணவேண்டும்.

போசனம் இரண்டாம் பாவகாரகம். கேது மதுபானத்துக்குச் சார்பானவர். ஆகவே இரண்டில் கேதுநிற்கக் குடிவெறியில் நாட்டமுண்டாகும்.

சனி பொய்யைப் பிரேரிப்பவர். இரண்டாம் இடம் வாய்க்குரியது. ஆகவே இரண்டிற் சனிநிற்கப் பொய்பேசக் கூசாத தன்மைபொருந்தும். ஆனால் கேதுவுஞ் சனியும் இவ்வாறமைந்த எல்லாச் சாதகத்திற்கும் இப்பலன்களைப் புகுத்துதல் ஆகாது. இருதயத்தானமாகிய ஐந்தாம் பாவமும் கன்மத்தானமாகிய பத்தாம் பாவமும் சுபத்துவமடையின் இப்பலன்கள் நிகழா. இவ்வாறே தனபலன் ஆராய்ச்சியிலும் முற்கூறிய விதிகளை மட்டும் வைத்துத் தனசுகத்தை முடிவுகட்டலாகாது. தனம் பணமாயுமிருக்கலாம் அன்றி வீடு, பூமி, வாகனம், ஆடு, மாடு, முதலிய பொருள்களாகவுமிருக்கலாம். இவை நான்காம் பாவகாரகங்கள். ஆகவே ஒருவன் தனவானாயிருப்பானோ என அறிய நான்காம் பாவம், நான்காதிபதி ஆகியவற்றின் பெலங்களும் ஆராயப்படல் வேண்டும்.

பொக்கிஷாலயத்துக் கருமாதிகாரிக்கு (கச்சேரிச் சிருப்பருக்கு)த் தினந் தினம் பெருந்தொகைப் பணம் வந்துகொண்டிருக்கும். இது காரணமாக இவரை உலகம் தனவந்தன் எனக் கூறாது. ஒன்பதாம் பாவத்தாற் பெறப்படும் பாக்கிய சுகம் இயைந்தாற்றான் தனசுகம் கிட்டும். பத்தாம் பாவத்தாற் பெறப்படும் சீவன சித்தியுள்ளவருக்கே தனத் தேட்டத்திற்கிலேசமிருக்காது. பதினோராம் பாவத்தாற் பெறப்படும் இலாப சித்தியுள்ளவருக்கே தனம் நிலைக்கும்.

## மூன்றும் பாடம்

# சகோதர பாவம்

மூன்றும் பாவத்தின் மிகப்பிரதான காரகம் சகோதரராகும். இதனுல் இப்பாவம் சகோதரபாவம் எனப்படும்.

மூன்றும் பாவத்தின் காரகங்கள் சகோதரர், வீரியம், போகம், காது, கர்ணபூஷணம், போசன பாத்திரம், பிரயாணம் ஆதியனவாகும்.

கிரக பெலங்களுள் திருட்டிபெலம் பிரதானமானது. திருட்டி-பார்வை, சுபக்கிரகபார்வையாற் சுப பலனும், பாபக்கிரக பார்வையால் அசுபபலனும் உண்டாகும் என்பது பொதுவிதி. பார்க்குங் கிரகத்தின் ஆதிபத்தியதகுதியினுல் அப்பார்வை எவ்வாறு செயற்படுமென அறிதல் வேண்டும். உதாரணமாக இலக்கினுதிபன் பாபியாயினும் அவர்பார்வை நற்பலனைக் கொடுக்கும் அட்டமாதிபன் சுபரெனினும் அவர்பார்வை துர்ப்பலனைக் கொடுக்கும். குரு அட்டமாதிபனுயினும் அவர்பார்வையால் அதிக துன்பஞ் சம்பவிக்காது. சனி அட்டமாதிபனுயின் அப்பார்வை குருரபலனுக்குக் காரணமாகும். பார்வைகளைப்பற்றிய விபரத்தை அனுபந்தத்திற் காணலாம்.

கிரகங்கள் பார்வையினுல் நற்பலனுக்கோ அன்றித் துர்ப்பலனுக்கோ காரணமாதல் போலச் சேர்க்கையினுலும் அங்ஙனமாகும். முன்திருட்டி பலனிற் கூறியது போலச் சேர்க்கையிலும் ஆதிபத்திய பலன் கவனிக்க வேண்டும். ஆறெட்டுப் பன்னிரண்டுக்கு அதிபர் சுபராயினும் அவர்சேர்க்கை அசுப பலனுக்குச் சார்பாகும். இலக்கினுதிபன் பாபராயினும் அவர் சேர்க்கை சுபபலனுக்குச் சார்பாகும்.

ஒரு இராசியுள்கிரகங்களைக் கண்டவுடன் சேர்க்கைப் பலன் கூறக் கூடாது. பதினைந்து பாகை தூர எல்லைக்குள்ளிருக்குங் கிரகங்களுக்கே சேர்க்கைப்பலன் கூறவேண்டும். ஒருகிரகம் மற்றெரு கிரகத்திலிருந்து எவ்வளவு சமீபிக்கிறதோ அவ்வளவுக்குச் சேர்க்கைப்பெலம் அதிகரிக்கும். சந்திரனுடன் குஜாதிபஞ்சக்கிரகங்கள் ஒரே நவாம்சத்திற் சேரும்போது யோகபெலம் உண்டாகும். குருவுஞ் சந்திரனும் இராசிநிலையில் ஒரே வீட்டிலிருந்து நவாம்சநிலையிலும் ஒரேவீட்டிலிருந்தால், அது குரு சந்திரயோகமாகும். இவ்வாறு சந்திரனுஞ் செவ்வாயும் கூடியிருப்பின் சசிமங்களயோகமாகும். சந்திரனுஞ் சனியுங் கூடியிருப்பின் சந்திரசனி சமாகமமாகும். யோகம் சமாகமம் என்பன ஒருபொருட்சொற்கள். இந்த யோகங்கள் நற்பலனுக்குரியன. சூரியனுடன் குஜாதி பஞ்சக்கிரகங்கள் மேற்காட்டியவாறு கூடியிருப்பின் இக்கிரகங்கள் மூடாத்தமனமாகி அசு



பத்துவமடைவர். இராகு கேதுக்களுடன் இக்கிரகங்கள் மேற்காட்டியவாறு சேரின் இச்சேர்க்கை கிரகணமெனப்பட்டுக் கிரகவலிமையைக் கெடுக்கும்.

மூன்றும் பாவாதிபதியும், மூன்றும் பாவத்திலுள்ள கிரகமும், மூன்றும் பாவமும் பாபக்கிரகங்களின் திருட்டிசேர்க்கைகளினுல் பழுதடைகின்றன என வைத்துக்கொள்வோம். இதனுல் இனைய சகோதர பலன் குன்றும். இராசி மண்டலத்தில் மூன்றும் இராசியாகிய மிதுனமும், மிதுன அதிபதியாகிய புதனும் பாபக்கிரக சம்பந்தமுற்றிருந்தால் இங்குக் கூறிய பெலவீனமதிகரிக்குமென்றும், சுபக்கிரக சம்பந்தம் பெற்றுல் தோஷசாந்தியமையுமென்றும் அறியவேண்டும்.

இராகு கேதுக்கள் பாம்பு உருவினர். இவை சில குறிப்பிட்ட பாவங்களிலிருந்தால் அப்பாவகாரகங்கள் பழுதடையும். இப்பழுது நாகசாபமெனப்படும். மூன்றும் பாவத்தில் இராகு அல்லது கேது நிற்பின் நாகசாபத்தால் அச்சாதகிக்குச் சகோதரபலன் குன்றும். இவ்விருவரிலொருவர் ஐந்தாம் பாவத்தில் நின்றுல் நாகசாபத்தாற் புத்திரபலன் குன்றும். புத்திரபலன் ஐந்தாம் பாவகாரகங்களுள் முக்கியமானது. ஏனைய பாவங்களிலும் இவ்வாறே இராகு கேதுக்களின் பலன் ஆராய்தல் வேண்டும்.

ஒருபாவத்திற்கு இருபுறமுமுள்ள பாவங்களிற் பாபர் இருப்பின் அப்பாவம் பாபர் மத்தியமாகிப் பழுதடையும். அப்பாவத்திலுள்ள கிரகங்களும் பழுதடைவர். ஒரு இராசிக்கு இருபுறமுமிருப்பதாக மேற்கூறிய பாபருளொருவர் வலஞ்சுழியாகவும், ஒருவர் இடஞ்சுழியாகவும் ஒருவரை ஒருவர் நோக்கி கர்த்தரிக்கோல் நறுக்குவது போல அணுகினுல், இது பாபகர்த்தரி யோகமெனப்படும். இது ஒரு அவயோகம், துர்ப்பலனுக்கேயுரியது. இந்த அவயோகம் மூன்றும் பாவத்துக்கு அல்லது மூன்றும் பாவாதிபதிக்கு அமையின் பிற்சகோதர அரிட்டங்கூறலாம்; பிறந்து சாகினும் சாகலாம்; சகோதரபிரிவு சம்பவிக்கினுஞ் சம்பவிக்கலாம். குருவின் பார்வையால் இத்தோஷம் சாந்திப்படலாம். சகோதரகாரகனுகிய செவ்வாய் பெலமடைவதும் தோஷத்தைச் சாந்திசெய்க்கலாம். இவ்விரும் பழுதடையின் தோஷம் மிகக் கூடுமென அறிக. இப்புத்தகத்தில் கூறப்படாதிருக்கும் அட்டவர்க்கம், தசவர்க்கம் ஆதியனவற்றின் வலிமைகளும் தோஷசாந்தியை அமைக்கலாம். தோஷசாந்திக் கிடமின்றெனப் பூரணமாக அறிந்தபின்பே சகோதரமின்மை கூறல்வேண்டும்.

இராசி மண்டலத்தில் மேடம் முதலாவது இராசியாகும். இது ஒற்றை இராசியெனப்படும். இடபம் இரண்டாவது இராசியானபடியால் இரட்டை இராசி எனப்படும். பன்னிரு இராசிகளிலும் மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய ஆறும் ஒற்றையிராசிகள்; ஒற்றையிராசி

13500

கள் ஆண் இராசிகள் எனப்படும். இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறும் இரட்டைபிராசிகளாகிய பெண் இராசிகளாகும். ஆண்தன்மையால் ஆணிராசிகள் எனவும், பெண் தன்மையால் பெண்ணிராசிகளெனவும் அவற்றிற்கு அப்பெயர்களமைந்தன. ஆணிராசி இலக்கினமாய் அமையுஞ் சாதகருக்கு ஆண்தன்மையும், பெண்ணிராசி இலக்கினமாயமையுஞ் சாதகருக்கு பெண்தன்மையும் அதிகமாகவமையும். காலவோரை, முக்குணவேளை, கோட்கூறு ஆதியாய பிற ஏதுக்களும் ஒத்துவருமாயின் ஆணிராசி ஆண்செனனத்திற்கும், பெண்ணிராசி பெண் செனனத்திற்கும் இசைவுடைத்தாகும். மூன்றும்பாவம் ஆணிராசியாயமைவது ஆண்சகோதரப் பேற்றிற்கும், பெண்ணிராசியாயமைவது பெண்சகோதரப் பேற்றிற்கும் சார்பாகும்.

ஆண் இராசியின் முற்பதினைந்து பாகை ஆண் ஓரையும், பிற்பதினைந்து பாகை பெண் ஓரையும் ஆகும். ஆணோரை ஆண்தன்மையையும், பெண்ணோரை பெண்தன்மையையும் மிகுவிக்கும். ஆணிராசி ஆணோரையும், பெண்ணிராசி பெண்ணோரையுமானால் அவ்வத்தன்மை மிக அதிகரிக்கும்.

மூன்றும் பாவ மத்தியம் ஆண்இராசி, ஆணோரையாகி, அவற்றில் ஆண்கிரகமிருப்பின் சாதகியின் இளையசகோதரர் ஆண் எனவும், அது பெண்ணிராசி, பெண்ணோரையாகி அதில் பெண் கிரகமுமிருப்பின் பெண்ணெனவும் அனுமானிப்பது பொருத்தமாகும். இதனோடு மூன்றுதிபனையும் இவ்வாறு இயைபுபடுத்தி ஆராய்ந்து பலன் கூறல்வேண்டும். மூன்றிலிருக்குங் கிரகம் அல்லது மூன்றுதிபன் அலிக்கிரகமாயின் சகோதரகருப்பசேதம் அமையலாம்.

**ஆண் கிரகங்கள்:-** சூரியன், செவ்வாய், குரு.

**பெண் கிரகங்கள்:-** சந்திரன், சுக்கிரன், இராகு.

**அலிக்கிரகங்கள்:-** புதன், சனி, கேது.

மூன்றும் பாவத்தை ஆண்கிரகம் பார்க்கின் அல்லது மூன்றுதிபன் ஆண் கிரகத்துடன் சேரின் ஆண் சகோதரப் பேறும், அலிக்கிரகம் பார்க்கின் அல்லது சேரின் சகோதர கருப்ப சேதமும் பலனாகலாம்.

ஒருவரின் இளைய சகோதரரில் ஆண்களெத்தனை, பெண்களெத்தனை, எனக் கணிப்பதற்கு அட்டவர்க்கபலன் பிரதானமானது. பொதுப்பலன் மாத்திரம் காணும் முறையை விளக்கும் இந்நூலில் அவ்விஷயம் ஆராயப் பட முடியாது. அட்டவர்க்கப்பலன் போன்ற பிரதான விஷயங்கள் படிக்கு



முன், இதுவரை காட்டிய சில காரணங்களைமாத்திரங் கொண்டு சகோதர பலனை அறுதியிட்டுத் தீர்மானித்தல் கூடாதென்பது நினைவிலிருத்தல் வேண்டும்.

வீரியம் மூன்றும் பாவ காரகங்களுளொன்று. வீரியம் - வீரத்தன்மையும் சுக்கிலமுமாகும். மூன்றும் பாவம், மூன்றுதிபதி, மூன்றில் நிற்கும் கிரகங்கள் ஆதியன பெலவீனப்படின் அச்சாதகி வீரியத்தளர்ச்சி மூலம் நோய்கொள்வதோடு, சோம்பற்குணமு முடையராவர். மேற்கூறிய காரணங்களிற் குறையொன்றுமின்றிப் பெலமுண்டெனில் சுக்கில பெலத்தாலுண்டாகும் ஆர்வம், கெம்பீரம் ஆதியனவும், தொடுத்த காரியங்களில் வெற்றி பெறுவதற்குரிய மனோதிடமும் உண்டாகும்.

இங்கு விளக்கிய காரகங்களைப் போலவே ஏனைய காரகங்களையுமாராய்ந்து பலன் காணல் வேண்டும்.

135007

## நான்காம் பாடம்

# மாதுரு பாவம்

மாதுரு, மாதா என்பன ஒருபொருட் சொற்கள். மாதா நான்காம் பாவத்தின் பிரதான காரகமாகையால் நான்காம்பாவம் மாதுருபாவம் எனப் பெயர்பெறும்.

இப்பாவத்தின் காரகங்கள் மாதா, கை, தோள், வீடு, வாகனம், பூமி, தேகசுகம் சுற்றம், பாற்பசு, வித்தை, கிணறு, சலம் முதலியன வாகும்.

கிரகபெலங்களை ஆறுவகுப்பாகச் சோதிடநூல்கள் வகுக்கும். அவை சட்பெலம் எனப்படும். இச்சட் பெலங்களுள் தானபெலம் முதலாம் பாடத்திலும், திக்குப்பெலம் இரண்டாம் பாடத்திலும், திருட்டிபெலம் மூன்றும் பாடத்திலும் விளக்கப்பட்டிருக்கின்றன. பாடமுறையையும் வசதியையும் நோக்கி ஒரு பாடத்திலொன்றாக இவை விளக்கப்படுகின்றன; ஆனல் சட் பெலங்களெல்லாம் எல்லாப்பாவங்களிலும் வைத்து ஆராயப்படவேண்டும். இப்பாடத்தில் காலபெலம் என்பதை விளக்கி அப்பெலம் நான்காம் பாவ பலனை எவ்வாறு செயற்படுத்துமென்பதனை விசேடமாக ஆராய்வாம்.

இராப்பகல், ஓரை, வாரம், சுக்கிலபட்சம், கிருட்டினபட்சம், மாதம் ஆதியனகாலங்களாம். பிரதமை தொடங்கிப் பூரணைவரை உள்ள காலம் சுக்கிலபட்சமாம். பிரதமை தொடங்கி அமாவாசை வரை உள்ள காலம் கிருட்டின பட்சமாம். சுக்கிலபட்சம் பூர்வபட்சமெனவும், கிருட்டினபட்சம் அபரபட்சமெனவும்படும். இவை முறையே வளர்பிறை, தேய்பிறை எனவும் படும்.

ஒரு தினத்தில் சூரிய உதயம் முதல் ஒருமணித்தியால காலம் எக் கிரகத்தின் ஓரையாகுமோ அத்தினம் அக்கிரகத்தின் பெயரால் அழைக் கப்படும். ஒரு தினத்தில் இருபத்து நான்கு ஓரைகளுண்டு. சூரிய ஓரையை முதலாகக்கொண்டது ஞாயிற்றுக்கிழமை. சூரியன் - ஞாயிறு. ஞாயிற்றுக்கிழமைக்குரிய இருபத்துநான்கு ஓரைகளும் நிகழ்ந்துமுடியச் சந்திர ஓரை ஆரம்பிக்கும். இது அடுத்த நாளின் முதல் ஓரையாகும். இந்த நாள் திங்கட்கிழமை எனப்படும். சந்திரன் - திங்கள். சந்திர ஓரை முடியச் சனியின் ஓரை முதலாக இருபத்து நான்கு ஓரைகளும் நிகழும். இதுவே போல ஒவ்வொரு வாரத்திலும் முதலோரை அந்தந்த வாராதிபருக் குரியதாகும். அடுத்த ஓரைகள் ஒரு குறித்த ஒழுங்கின்படி ஏனைய கிரகங் களுக்கு அமையும். கிரக கால ஓரையின் விபரத்தைப் பஞ்சாங்கங்களிற் காணலாம்.



ஒருபிள்ளை சந்திரகாலவோரையிற் பிறந்தால் அப்பிள்ளைக்கு நிகழும் பலன்களில் சந்திராம்சம் அதிகமாக விரவும். இவ்வாறே வாராதிபனின் குணமும் அதிகம் விரவும்.

சந்திரன், செவ்வாய் இருவரும் இரவிலும், சூரியன், குரு, சுக்கிரன், சனி, பகலிலும், புதன் இரவிலும் பகலிலும் பெலமுடையர். இது காலபெல மாகும். இரவிற் பிறந்தபிள்ளையின் சாதகத்தில் சந்திரன், செவ்வாய், சனி மூவரும் பெலவான்களாவர். பகற் சென்ன சாதகத்தில் சூரியன், குரு, சுக்கிரன் மூவரும் பெலவான்களாவர். சந்தியா கால சாதகத்தில் புதன் பெலவானவர். சந்திரன் இரவு மாதுருகாரகன், சுக்கிரன் பகல் மாதுருகா ரகன் எனவும், சூரியன் பகல் பிதிர்க்காரகன், சனி இரவு பிதிர்க்காரகன் எனவும் அழைக்கும் மரபு ஈண்டு நோக்கத்தக்கது.

சுக்கிலபட்சத்தில் சுபக்கிரகங்களும், கிருட்டின பட்சத்திற் பாபக் கிரகங்களும் பெலமடைவர். ஒருபிள்ளை பிறந்த மாதத்துக்கு அதிபதி யாகிய கிரகம் அம்மாத அதிபரென்ற முறையிற் பெலமுடையவராவர்.

நான்காமிடத்திலுள்ள கிரகங்கள், அக்கிரகங்களையும் அப்பாவத்தை யும், பார்க்குங்கிரகங்கள் அல்லது அக்கிரகங்களுடன் கூடும்கிரகங்கள் அப்பாவாதிபதியைப் பார்க்குங்கிரகங்கள் அல்லது கூடுங்கிரகங்கள் ஆதி யோர் சுபராயிருப்பின் மாதாவுக்கு நற்பலனும், பாபராயிருப்பின் துர்ப் பலனும் பொதுப்பலனாகக் கூறலாம். முன்னர்க் கூறியவண்ணம் இலக் கினாதிபதிபாபரெனினும் சுபரைப் போலப் பலன் செய்வரென்பதும் கிர கங்களின் ஆதிபத்தியத்திற்கியைய நற்பலன், துர்ப்பலன் கூறவேண்டு மென்பதும் நினைவிலிருத்திக்கொள்க.

நான்கிற் சந்திரன் ஆட்சியாயிருந்தால் இவர் தான பெலத்துடன் திக்குப் பெலமும் பொருந்துவர். பிறந்த மாதம் இவருக்குரிய ஆடிமாத மாயின் மாதபெலமும், பிறந்த ஓரை சந்திர ஓரையாயின் ஓராபெலமும், வாரம் திங்கட்கிழமையாயின் வாரபெலமும், சுக்கிலபட்சமாயின் பட்சபெல மும் ஆகிய பெலங்கள் இந்தச் சந்திரனுக்குண்டென்பதைக் கவனித்துப் பலன் காணல்வேண்டும். இதனைப்போலவே சந்திரனுக்கு அமையும் குறைவு பாடுகளையும் இயைபுபடுத்திப் பலன்காண்க.

நான்காம் பாவம் பலவகைச் சுகத்திற்கு முரியதாதலின் இப்பாவம் எவ்வளவுக்கு வலிமையடைகின்றதோ அவ்வளவிற்குப் பலவகைச் சுகமுங் கிட்டும்.

சந்திரன் மேற்காட்டியவாறு நான்கிற்பெலமடைந்த சாதகர் கூரிய புத்தியும், தெளிந்த அறிவுமுடையராவர்; இவை சந்திரனின் காரகங்களா

தலின். விடயங்களை அகழ்ந்து கிளறி ஆராயும் ஆற்றல் இவர்பால் மிளிரும். நான்காம் பாவம் நீர்க்கிறாதலின்; இவர்கள் சிந்தனையில் அமிழ்ந்திருக்கும் வேளைகளில் பிற பிரவிருத்திகளின் சேட்டைகள் ஒடுங்கிவிடும்; சந்திரன் இரவில் வலியவனாதலின்.

பன்னிரு இராசிகளும் சர திர உபயமென மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. சரம்—அசையுந்தன்மை; திரம—அசையாத் தன்மை; உபயம்—அசைதலும் அசையாமையுங் கலந்த தன்மை.

| சரவிராசிகள் | திரவிராசிகள் | உபயவிராசிகள் |
|---|---|---|
| மேடம் | இடபம் | மிதுனம் |
| கர்க்கடகம் | சிங்கம் | கன்னி |
| துலாம் | விருச்சிகம் | தனுசு |
| மகரம் | கும்பம் | மீனம் |

சாதகங்களில் சதுரவடிவாக அமைக்கப்பட்டிருக்கும் இராசிச்சக்கரத்தில் நான்கு மூலைகளிலுமமைந்த விராசிகள் உபயவிராசிகள் எனவும், இவற்றிற்கு அடுத்துள்ள இராசிகள் சரவிராசிகள் எனவும், இச்சரவிராசிகளுக்கு அடுத்துள்ளவிராசிகள் திரவிராசிகள் எனவும் மனப்படத்திற் கற்பித்துக்கொள்ளலாம்.

சரவிராசிகளிலொன்று இலக்கினமாயமையின் அச்சாதகி ஒரேயிடத்திலிருக்க விரும்பாதவராவர். திரவிராசி இலக்கினமாயின் இடமாற்றத்தை விரும்பாதவராவர். உபயவிராசி இலக்கினமாயின் சிலகாலத்துக்கு ஒரே இடத்தில் இருக்கும் விருப்பும், சிலகாலத்துக்கு இடமாற்ற விருப்பும் பொருந்துபவராவர்.

இரண்டாம் பாவம் சரவிராசியிலமையின் அசைவுள்ள தனமும், திரவிராசியிலமையின் அசைவற்ற தனமும், உபய விராசியிலமையின் இவ்விருதிறப்பட்ட தனமும் சாதகிக்குச் சித்திக்குமெனக் கொள்ளலாம்.

மூன்றாமிராசி சரவிராசியாயின் சாதகருக்குப்பிரயாண சுபாவமும், திரவிராசியாயின், ஒரேயிடத்தில் நிலைத்திருக்கும் விருப்பும் அமையும். உபயவிராசியாயின் இவ்விருதன்மையுங் காலததுக்குக்காலம் மாறிமாறி அமையும்.

நான்காம் பாவத்துக்கும், நான்காதிபதிக்கும் சரவிராசித் தொடர்பிருப்பது இப்பாவத்தின் காரகமாகிய பூமி, வீடு, வாகன மாற்றங்களுக்கு ஏதுவாகும். திரவிராசியின் தொடர்பு இவற்றை நிலைக்கச் செய்யும். உபயவிராசியானால் இவை வருவதும், போவதுமாகவமையும். இவ்வாறு இராசித் தொடர்பு எல்லாப் பாவங்களிலும், எல்லாக் கிரகங்களிலும் இயைபுபடுத்திப் பலன் காணல்வேண்டும்.



இலக்கினம் சரவிராசியாயின் பதினோராமிராசியும், திரவிராசியாயின் ஒன்பதாமிராசியும், உபயவிராசியாயின் ஏழாமிராசியும் பாதகத்தானங்களாகும். பாதகத்தானமும், அந்தத் தானத்துக்கு அதிபதியாயுள்ள பாதகாதிபதியும் துர்ப்பலனுக்குரியவராவர். பாதகாதிபதி திரிகோணமேறின் தோஷசாந்தியுண்டு. சாதகம் என்பதன் மறுதலை பாதகம்.

பாதகாதிபதி இருக்கின்ற அல்லது அவராற் பார்க்கப்படுகின்ற பாவத்தின் காரகங்கள் பழுதடையும். சந்திரன் பாதகத்தானத் தொடர்பு பொருந்தினல் மாதாவுக்குத் தேகசுகக்குறைவு முதலிய கஷ்டபலனுண்டாகும். நான்காம் பாவம் பாதகத்தானத் தொடர்பு பெறுவதும் இதுபோன்ற கஷ்டபலனுக்குச் சார்பாகும். பாதகத்தானத் தொடர்பு பிரதானமாக மனப்பீடையை உண்டாக்கும். பாதகத்தானத் தொடர்பு அடைந்த கிரகங்களின தசாபுத்தி காலங்களில் காரணமில்லாமல் மனங்கலங்குதல், சொப்பனபயம் ஆதியனபோன்ற மனப்பீடைகள் அதிகரிக்கும்

நான்காம் பாவகாரகங்களுள் புத்திக்கூர்மை யொன்றுதலின் இப்பாவம் பெலமடைவது கல்வித் தேர்ச்சிக்கு அத்தியாவசியமாகும். எவ்விடயத்துக்கும் இலக்கினபாவம பெலமடைய வேண்டுமென முன்னர்ப் படித்துள்ளோம். வாக்குப் பெலத்துக்கும், வாய்ச்சாலத்துக்கும் இரண்டாம் பாவம் பெலமடைய வேண்டும். காதுக்கும் கேள்விஞானத்துக்கும் மூன்றாம் பாவம் பெலமடைய வேண்டும். வித்தைக்கும் பொதுஅறிவுக்குமுரியது நான்காம் பாவம். இந்த நான்கு பாவங்களும், வித்தைகாரகனாகிய புதனும் பெலமடைவது பூரண கல்வித் தேர்ச்சியைக் கொடுக்கும்.

இப்பாவங்களின் தொடர்புபெற்ற கிரகங்கள் நீசம் முதலாய தோஷங்கள் அடைவாராயின் மேலான கல்வித் தேர்ச்சிக்கு இடமின்று. பாதகத்தானத் தொடர்பு அமையின் மனச்சஞ்சலமூலங் கல்விக் குழப்பம் உண்டாகும். இராகு அல்லது கேதுவின் தொடர்பு அமையின் மறதிக்குணத்தால் கல்வி முன்னேற்றந் தடைபடும். ஆறு எட்டுக்குடையோர் தொடர்பு நோய்களாலும், விபத்துக்களாலும் கல்வி வளர்ச்சியைக் குன்றச்செய்யும்.

இதுகாறும் இந்நான்காம்பாவ ஆராய்ச்சிக்குக் கையாளப்பட்ட விதிகளை இப்பாவகாரகங்களாகிய வீடு, வாகனம், நீர்ச்சுகம், கைகள், பாற்பசு ஆதியவற்றிற்கும் இயைபுபடுத்தி ஆராய்க.

## ஐந்தாம் பாடம்

# புத்திர பாவம்

ஐந்தாம் பாவத்தின் பிரதான காரகம் சந்தானம். சந்தானம் - புத்திர புத்திரிகள் இக்காரணம்பற்றி இப்பாவம் புத்திரபாவம் எனப் பெயர் பெறும்.

ஐந்தாம் பாவகாரகங்கள் சந்தானம், இருதயம், பூர்வபுண்ணியம், மந்திரம் ஆதியன.

புத் - புத் என்னும் நரகம். ரன் - காப்பவன். புத் என்னும் நரகந்தி லழுந்தாமற் காப்பவன் புத்திரனாதலின் ஒருவனுக்குப் புத்திரபாக்கியமே மிகச்சிறந்த பாக்கியமாகும். நம் சரீரத்திலுள்ள அங்கங்களுள் இருதயம் பிரதானமான ஒன்று. இருதயம் என்னுஞ்சொல் இரத்தாசயத்தினையும் மனத்தினையுங் குறிப்பிடுவது. தேகத்தின் உறுப்புக்களுக்கெல்லாம் இராச உறுப்பு இருதயம். இது நோயின்றிச் சுகநிலையில் இருப்பது பெரிய பாக்கியமாகும். தெளிவுந் தூய்மையுமுடைய இருதயம் சித்திப்பது புண்ணியமேலீட்டினாலாகும்.

உறுதிப்பாடான சிந்தனையும் சிந்தித்தவற்றை நிலைபெறச் செய்கையும் மந்திரத்தின்பாற்படும். மந் - நினைவு, திரம் - காப்பது. இது ஐந்தாம பாவ வலிமையாற் பெறப்படுவது. இராசிமண்டலத்தில் ஐந்தாதிபன்சூரியனுவர்! இங்குக் கூறியவற்றிற்கும் சூரியனுக்கும் சம்பந்தம் உளவாதலை ஊகத்தா லறிக. இவ்வாறே சந்திரன், புதன், குரு என்னுங் கிரகங்களும் ஐந்தாம் பாவகாரகங்களுடன் தொடர்புடையனவாகும். இதுவல்ல அது; அதுவல்ல இது; இதுவும் அதுவும் அல்லவேறு; வேறும் அல்லவெனத் தருக் கிப்பர் புதன்; இவர் நைசர்க்கிக ஆருதிபனாதலின். சிந்தனை சிதருத ஒருமைப்பாட்டைக்கொடுப்பர் சந்திரன்; இவர் நீர்க்கீழிலும், இரவுப் பொழுதிலும் வலியராதலின். நீர்க்கீழ் - நான்காம் பாவம். நைசர்க்கிக நான்காம் பாவாதிபன் சந்திரனுவர். புத சந்திரர் சமாகம யோகம் அடைவது ஐந்தாம் பாவவலிமையை மிகுவிக்கும்.

ஐந்தாம் பாவத்திலுள்ள கிரகங்கள், இவற்றையும் இப்பாவத்தையும் பார்க்குங் கிரகங்கள், ஐந்தாதிபதியுடன் சேருங்கிரகங்கள், இவ்வதிபதியின் பெலாபெலம் ஆதியவற்றைக் கருத்திற்கொண்டு புத்திரபலனை ஆராய்தல் வேண்டும்.



கிரக பெலங்களுட் சேட்டா பெலமொன்று. சேட்டை - அசைவு. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்வதுபோலத் தோன்றுங் காலம் உத்தராயனம். உத்தரம் - வடக்கு. அயனம் - போக்கு. சூரியன் தெற்கு நோக்கிச் செல்வதுபோலத் தோன்றுங்காலம் தட்சிணுயனம். தட்சிணம் - தெற்கு. தைமாதம் முதலாந் திகதி தொடக்கம் ஆறுமாதம் உத்தராயண காலமும், ஆடி மாதம் முதலாந் திகதி தொடக்கம் ஆறுமாதம் தட்சிணுயன காலமுமாகும். உத்தராயணத்திற் சூரியனும், தட்சிணுயனத்திற் சந்திரனும் பெலமுள்ளவராவர்.

கிரகங்கள் ஆகாயவீதியில் கிழக்கு நோக்கி நட்சத்திர வரிசையாக நகராது மேற்கு நோக்கி அவ்வரிசைக்கு எதிராகச் செல்லுதல்போலத் தோற்றுதல் வக்கிரகதி எனப்படும். இத்தோற்றந் சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் செல்லுங்கதியைக் காட்டிலும் பூமி செல்லுங் கதி கூடியிருக்குங் காலத்திலேற்படும். கிரகங்கள் வக்கிரகதியில் அதிகபெலமுள்ளவராவார்கள். நீசக்கிரகங்கள் வக்கிரகதியிலிருக்கும்போது நீசதோஷம் நிவிர்த்தியடையும் என்பர்.

§ 1 சுஜாதி பஞ்சக்கிரகங்கள் ஒருவரோடொருவர் ஒரே நவாம்சத்திற் சேர்க்கை பொருந்துவது கிரகயுத்தமாகும். இந்த யுத்தத்தில் வென்றாரின் காரகங்கள் வலிமையுறும். தோற்றாரின் காரகங்கள் வலிமைகுன்றும்.

நைசர்க்கிக பெலம் அதிகரிக்கப்பெற்ற கிரகம் யுத்தவெற்றி பெறும், கிரகங்களின் இயல்பான பெலம் நைசர்க்கிக பெலமாகும். சனி, செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சந்திரன், சூரியன் இவர்கள் முறையே ஒருவரைவிட மற்றவர் நைசர்க்கிக பெலங் கூடியவராவர். இவர்களின் ஒளியின் ஏற்றத்தாழ்வுகொண்டு எவரும் இப்பெலத்தின் ஏற்றத் தாழ்வுகளை அறியலாம். சனிக்குஞ் செவ்வாய்க்கும் யுத்தமுண்டாயின் செவ்வாய் நைசர்க்கிக பெலத்தால் வெல்லச் சனி தோற்பர். இவ்வாறே சனியையும், செவ்வாயையும் புதன் வெற்றிகொள்வர். சனி, செவ்வாய், புதன் மூவரையும் வியாழன் வெல்லுவர்- வியாழனுட்பட இந்நால்வரையும் சுக்கிரன் வெல்லுவர். ஆனால், வக்கிரத்திலுள்ள கிரகம் எதுவாயினும் அதுவெல்லும். சூரிய சந்திரருக்கு யுத்தமில்லை.

---

§ 1 செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி.

சனி அலிக்கிரகம் - இவர் ஐந்தாதிபனுவது புத்திரதோஷத்திற்கு ஏதுவாகும். ஆனல் இவர் சந்திரசமாகமம் முதலியவற்ருற் சுபத்துவமடையின் புத்திரப்பேற்றுக்கு அனுகூலமாயிருப்பர்.

இராகு, கேதுக்கள் ஐந்திலிருப்பது புத்திரதோஷத்திற்கு ஏதுவாகும் என்பது மூன்ரும் பாடத்திற் காட்டப்பட்டது. இதுபோலவே ஐந்தாதிபனுடன் இராகு கேது சேருவதும் புத்திரதோஷத்திற்கு ஏதுவாகும்.

இங்குக் கூறிய பல காரணங்களோடு இராசி மண்டலத்தில் ஐந்தாவது இராசியாகிய சிங்கமும், சிங்கத்துக்கு அதிபதியாகிய சூரியனும் அடைந்திருக்கும் பெலாபெலங்களை ஆராய்ந்த பின்னரே புத்திரபாக்கியம் உண்டோ இல்லையோ என்பதனையும், உண்டெனில் சற்புத்திரரோ அன்ரேல் என்பதனையும் பிறந்து பால்யபருவத்தில் இறப்பரோ அன்றேல் பூரண ஆயுள் உடையவராவரோ என்பதனையும் தீர்மானித்தல்கூடும். இப்பாவ பெலமறிவதற்கும் பின்னுற் படிக்கவேண்டிய அட்டவர்க்க, தசவர்க்க பெலங்கள் ஆராய்வது அவசியமென முன்னர்க் கூறியதை ஞாபகத்தி லிருத்துதல் வேண்டும்.

ஒரு கிரகத்தின் பெலம் ஆராயும்பொழுது அக்கிரகம் நிற்கும் நட்சத்திரத்துக்குரிய மகாதசை எதுவோ அத்தசாநாதனுடைய பெலாபெலமும் ஆராயப்படல்வேண்டும். ஒரு கிரகம் மேடத்தில் அசுவினி நட்சத்திரத்தில் நிற்கிறதெனக் கொள்வோம். கேது பொதுவாக நற்பலனுக்குரியவரல்லர். ஆதலின் அசுவினி நட்சத்திரத்தில் நிற்பவர் பெலமடைந்த சுபக்கிரகமாயினும் அசுவினி நட்சத்திரத்தின் தசாநாதன் கேது அதிக நற்பலனைக் கொடார். பரணியில் ஒரு கிரகம் நிற்பின் பரணியின் தசாநாதன் சுக்கிரனுதலின் அக்கிரகம் பாபராயினும் நற்பலனுக்கு உடன்படுவர். ஆனுற் சுக்கிரன் ஆதிபத்தியம் முதலியவற்ருற் பழுதடைந்திருப்பாராயின் மேற் குறிப்பிட்ட பரணியிலிருக்கும் கிரகம் சுபராயினும் சுபத்துவங் குன்றப் பெறுவர். இக்கிரகம் நிற்கும் இராசி மேடமாதலின் இதனதிபதியாகிய செவ்வாயின் பெலவீனமும் இக்கிரகத்தின் சுபத்துவத்தைக் குன்றச் செய்யும்.

- கீழ்க்காணும் சக்கரங்களிலுள்ள கிரகநிலைகளைக்கொண்டு ஐந்தாம் பாவத்துக்குரிய புத்திரபலனை ஆராய்வாம்.



குறிப்பு:-ஆராய்ச்சிக்குத் தேவையான கிரகங்கள் மாத்திரமே சக்கரத்தில் எழுதப்பட்டுள்ளன.

கார்த்திகை

பூரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| குரு. | | சூரி. | சுக். |
| | | | |
| | | | இல |
| | | | |

இச்சாதகத்தில் இலக்கினுதிபதியாகிய சூரியன் பத்தாமிடத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் இருக்கின்ருர். கார்த்திகை நட்சத்திரத் தசாநாதன் சூரியனுவர். சூரியனுக்குப் பத்தாமிடம் திக்குப்பெலம் உடையது. இவர் நின்ற இராசிநாதன் இலாபத்தானமாகிய பதினேராம் வீட்டில் இருக்கின்ருர். புத்திரகாரகனுகிய குருவே ஐந்தாதிபனுகிருர். ஐந்தாதிபன் குரு தன் சொந்தவீடுகளில் ஒன்ருகிய மீனத்தில் நிற்கிருர். மீனம் எட்டாமிடம். அட்டமாதிபன் எட்டில் ஆட்சியாய் நிற்பது யோகபெலத்தைக் கொடுக்கும்.

ஆறெட்டுப் பன்னிரண்டாதிபர் எவ்விடத்தில் நின்ருலுந் துர்ப்பலனுக்குரியர். ஆனுல் அவர்கள் ஆட்சியாய் நிற்கும்போதும் தங்களுட் பரிவர்த்தன யோகம்பெற்று நிற்கும்போதும் தங்களுக்குட்பார்வை சேர்க்கை பெறும்போதும் நற்பலனுக்குரியராவர்.

குருயோக பெலத்துடன் ஆட்சியாய் நிற்பதுவும் அவருக்கு விசேட பெலத்தைக் கொடுக்கும். இக்காரணங்கள்பற்றி இச்சாதகருக்குச் சிறப்புடைய புத்திரிருப்பரெனப் பலன் கூறலாம்.

இப்பாடத்திற் காட்டிய பலன் காணும்முறை ஆரம்பத்திற் கடினமாகவிருக்கும். எல்லாப் பாடங்களையும் ஒருமுறை வாசித்து அனுபந்தத்திலுள்ள கிரக பெலாபெலங்களையும் ஆராய்ந்தபின் உதாரண விளக்கத்திற் கொடுத்திருக்கும் பலனைப் படிக்கவேண்டும். இரண்டாம்முறை பாடங்களை

வாசிக்கும்பொழுதே தருக்கமுறைப்படி பலன்காணுதல் இரசிக்கத்தக்க தென்பது தெரியும்.

உத்தரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | இல |
| | | | |
| குரு | | | |
| | | | |

இச்சாதகத்தில் ஐந்தாதிபன் சுக்கிரன் உச்சமாயினும், அவர்

(அ) ஆருதிபனாகிய செவ்வாய் சேர்க்கை பெறுதலாலும்.

(ஆ) அட்டமாதிபனாகிய சனியின் நட்சத்திரமாகிய உத்தரட்டாதி யில் நிற்பதாலும்,

(இ) தன்திக்கு வீரிய ஸ்தானமாகிய நான்காம் இடத்துக்கு எதிர் வீடாகிய பத்தில் நின்று திக்குப் பெலவீனமுறுவதாலும்.

(ஈ) இவர் நின்ற இராசிநாதனாகிய குரு எட்டில் நீசமடைவதாலும்,

மிகப் பெலவீனமடைகிறார் ஆகவே இச்சாதகிக்குப் புத்திரப் பொருத்தமில்லை யெனலாம். பிள்ளைப்பேறுண்டாயினும், ஒருமகன் பிறந்தானென்றும், அவன் மேட்டிலிருந்து விழுந்திறந்தானென்றுஞ் சொல்லப் படும் மாத்திரையளவில் அமையும். ஐந்தாதிபனின் உச்சபலன பிள்ளைப் பேற்றைக் கொடுக்க, அவரது பெலவீனம் மரணத்துக்கு ஏதுவாக, உச்சமாயிருப்பினும் திக்குவீரிய பெலமற்ற இராசியில் விபத்துக்குக் காரகனும் மாரகனுமாய ஆருதிபன் செவ்வாய் சேர்க்கை பெற்றுநிற்பது மேட்டிலிருந்து விழச்செய்ய மரணம் நேரிட்டது. மாரகம் - மரணம்.

இராகுவை ஐந்தில் கண்டவுடன் புத்திரின்மை கூறக்கூடாது. நாக சாப நீக்கத்துக்குச் சார்பான காரணங்களிருப்பின் புத்திரப்பேறு பொருந்துவது சாத்தியமாகும்.

மேடம், இடபம், கடகலக்கினம் 5 இல் இராகு விரைவில் புத்திரப்பேறு கொடுக்கும் எனக்கூறும் நூல்களுமுள.



## ஆறும் பாடம்

## சத்துருபாவம்

இப்பாவத்தின் பிரதான காரகம் சத்துரு ஆதலின் இப்பாவம் சத்துருபாவ மெனப் பெயர்பெறும்.

இப்பாவத்தின் காரகங்கள் சத்துரு, வயிறு, ரோகம், விரணம், சிறை, துக்கம், வழக்கு, பந்துசனவிரோதம், திரவியநாசம் ஆதியனவாகும்.

சத்துருத்தானாதிபன் சத்துருக்கள்மூலந் தொல்லை கொடுத்தற்குரியர். உயிரும், உடலும் இலக்கினகாரகமாதலின் ஆருதிபன் இலக்கினத்திலிருப்பது சாதகியின் உயிரும் உடலும் சத்துருக்களாற் றுன்புறுத்தப்படுதற்குச் சார்பாகும்.

ஆருதிபன் ஏழில் அல்லது பத்தில் நிற்கப் பிறந்தவர்களுக்குச் சத்துருக்கள் மிகவுளரெனச் சோதிடநூல்கள் கூறும். ஏழில்நிற்கும் ஆருதிபன இலக்கினத்தைப் பார்ப்பது சாதகிக்குத் துன்பம் அதிகரிக்கச் செய்யும். பத்தாமிடம் கீர்த்திக்குரியது. பத்தில் சத்துருத்தானாதிபன் நிற்பது கீர்த்தியைக் குன்றச்செய்து மனதில் வெறுப்பையுந் துன்பத்தையும் வளரச் செய்யும். ஆறுமிடத்திற் பாபக்கிரகங்களிருப்பதும் சத்துருக்களுண்டாவதற் கேதுவாகும்.

மூன்று, ஆறு, பத்து, பதினோராம் இடங்கள் உபசெயத் தானங்களெனப்படும். இந்த உபசெயத் தானங்களிற் பாபர்நிற்பது நற்பலனுக்குச் சார்பாகும். இது இவ்வாறயின் ஆறுமிடத்திற் பாபக்கிரகங்கள் நிற்பது சத்துரு துன்பமாகிய துர்ப்பலனுக்குரியதாகுமென்பது எப்படிப் பொருந்துமென்ற கேள்விக் கிடமுண்டு.

கிரகங்கள் ஒரேயிடத்திலிருந்து சிலகாரணம்பற்றி நற்பலனையும், வேறு சில காரணம்பற்றித் துர்ப்பலனையும் கொடுப்பர். குரு சுபக்கிரகமாதலின் பொதுவாக அவருக்கு நற்பலன் கூறுவோமெனினும், அவர் ஆருதிபனுயமையின் நோயைக் கொடுக்குந் துர்ப்பலனையுஞ் செய்வரென் போம். அதுபோல ஆறுமிடம் இருதிறப்பட்ட பலனைக் கொடுக்கும். ஆருதிபதி பெலமடைந்திருப்பின் ஆறுமிடம் உபசெயத்தானமாகி நற்பலனைக் கொடுக்கும். அவர் பெலவீனப்பட்டிருப்பின் இப்பாவம் மறைவுத் தானமாகித் துர்ப்பலனைக் கொடுக்கும். அட்டமாதிபன் அல்லது பன்னிரண்டாதிபனோடு ஆருதிபன் பரிவர்த்தனஞ்செய்யின் பரிவர்த்தனயோக பெல

மடையும். இன்னும் அட்டமாதிபன் அல்லது பன்னிரண்டாதிபன் இவரைப் பார்த்தால்

"கெட்டவன் கெட்டிடக்
கிட்டிடு மிராசயோகம்"

என்றபடி இவர் யோகபலமடையலாம். இவ்வாறு சட்பலங்களில் ஒன்றே பலவோ இவருக்குப் பொருந்துவது சத்துருசெயம் உண்டாவதற்கு ஏதுவாகும்.

நோய் ஆறுமிடத்தின் காரகங்களுளொன்று. இலக்கினம் பலமடைவதுடன் மேலே காட்டிய பலங்கள் ஆறுதிபனுக்கிருப்பின் நோயற்றவாழ்வு உண்டெனலாம். இலக்கினமும் சுகத்தானமாகிய நான்காமிடமும் பலவீனப்படின் எக்கிரகம் நோய்கொடுப்பதற்குத் தொடர்புபட்டிருக்கிறதோ அக்கிரகத்தின் காரகமாயுள்ள நோய் சாதகிக்குண்டெனக் கூறலாம்.

நான்காதிபதி பலவீனப்படச் சலவிராசியிலிருக்குஞ் சந்திரனைச் செவ்வாய் பார்க்கில் தொய்வுநோய்க்கேற்ற தேகம் அமையுமெனல் பொருந்தும். தொய்வு இல்லாவிடில் பீனிசமாவது அமையும். செவ்வாய் நெருப்புக்கிரகம். சந்திரன் சலக்கிரகம். இதுகாரணமாகச் செவ்வாய் பார்த்த சந்திரன் உடம்பிற் சளித்தன்மையைக் கூட்டித் தொய்வு அல்லது அது போன்ற நோய்களை உண்டாக்குவர்.

இராசிமண்டலத்தில் ஆறுமிராசி கன்னியாகும். ஆகவே எச்சாதகத்திலும் நோயை ஆராயும்பொழுது கன்னியா விராசியுமாராயப்படல் வேண்டும். கன்னியாவிராசியிற் குரு சனி இராகு மூவருமிருக்குஞ் சாதகர் பலருக்குக் கசரோக பயமேற்பட்டமை அனுபவத்திற் காணக்கூடியதாகவிருந்திருக்கிறது. குரு இரத்தசம்பந்த ரோகத்துக்குரியவர். சனி நரம்பு சம்பந்தமான ரோகத்தைக் கொடுப்பவர். இராகு, விஷநீர், சுவாச சம்பந்தமான ரோகங்களுக்குரியவர். இம்மூன்று கிரகங்களும் நோய்க்குரிய இடமாகிய கன்னியிலிருக்கச் சுகத்தைக் கொடுக்கும் சந்திரனும், நான்காதிபனும் பலவீனமடையின் தேகமெலிவுண்டாக, மூச்சுநோய் அல்லது கசரோக முண்டாகுமெனல் பொருந்தும்.

ரோகத்தானம் சலவிராசியாய் அதிற் சந்திரன் பழுதடைந்திருக்க அல்லது ஆறுதிபன் சலவிராசியிலிருந்து புதனது தொடர்புபெற்றிருக்கச் சாதகனுக்குச் சலாசய சம்பந்தமான வியாதி தோன்றும்.



## ஏழாம் பாடம்

## களத்திர பாவம்

ஏழாம் பாவத்தின் பிரதான காரகம் களத்திரமாகையால் இப்பாவம் களத்திரபாவம் எனப் பெயர்பெறும்.

ஏழாம் பாவகாரகங்கள் களத்திரம், போகம், விவாகம், பந்து, சமூகம், இராசசன்மானம், வியாபாரம், சிநேகிதம் ஆதியனவாகும்.

ஏழாதிபதி பகை, நீசம், மூடமடைந்திருப்பினும், ஆறுதிபனோடு கூடினும், பாபக்கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை பொருந்தினும், ஏழாமிடத்திற் பாபக்கிரகங்களிருப்பினும் இவ்விடத்தையும், இதிலிருக்கும் கிரகங்களையும் பாபக்கிரகங்கள் நோக்கினும் சாதகிக்கு விவாகவிஷயத்திற் பல கஷ்டங்களுண்டாகும். செவ்வாயின் சேர்க்கை, பார்வைகள் விவாக சம்பந்தமாக அதிகதீமைகளுக்குரியன. சனியின் தொடர்புமிவ்வாறும். செவ்வாயின் தொடர்பு விவாகப் பேச்சிற் குழப்பத்தையும், விவாக காலத்திற் கலகத்தையும் விசேடமாகக் கொடுக்கும்.


சனியின் தொடர்பு குலம், வயது ஆதியவற்றில் கிரமக் குறைவு அமைந்த விவாகத்தை யமைக்கும். நெருங்கிய சுற்றத்தாரின் மனக்கருத்தைத் தழுவாது தம்மனப்போக்கின்படி யமைத்துக்கொள்ளும் விவாகத்திற்கும் சனியின் தொடர்பு காரணமாகும். இத்தொடர்பு விவாக சம்பந்தமான வஞ்சகச் சூழ்ச்சிகளுக்கு ஆளாகவும் வைக்கும். விவாக பலன் ஆராயும்பொழுது களத்திரகாரகனாகிய சுக்கிரனின் பலாபலத்தையுஞ் சேர்த்து ஆராயவேண்டியது மிக அவசியமாகும்.

ஏழாம் பாவமேனும், ஏழாதிபனேனும் சுக்கிரனேனும் பாபர் மத்தியத்திலிருப்பது விவாக சம்பந்தமான தொல்லைகளையும், களத்திர துன்பத்தையுங் கொடுக்கும். இத்தோஷத்தோடு செவ்வாய்தோஷமு முண்டெனின் விவாகப் பொருத்தம் பார்க்கும்பொழுது அதிககவனம் எடுத்தல் வேண்டும். களத்திரமாரகம் நிகழ்வதற்குப் பலகாரணங்க ளிருப்பினும், பொருத்தம் பார்க்கத் தெரியாத போலிச்சோதிடரின் அறியாமை அக்காரணங்களுள் முதன்மையானதாக வமைந்துவிடும். ஏழாமிராசியிலிருக்குஞ் செவ்வாய் துவாதசபாவப்புடப் பிரகாரம் சில சாதகங்களில் ஆறும்பாவமாகவும் அமையக்கூடும். கணிதம் அறியாத சோதிடர் இந்தச் செவ்வாயையும் ஏழிற் செவ்வாயாகக் கருதிப் பொருந்தக்கூடிய சாதகங்களையும் பொருந்தாதெனக்கூறி விவாகத்தைக் குழப்பிப் பழியேற்பதுமுண்டு.

இலக்கினம், ஏழு, எட்டு, இரண்டு, நான்கு, பன்னிரண்டு ஆகிய இடங்களிற் செவ்வாயிருப்பது களத்திர விடயமான குற்றமாகும். செவ்வாய் இந்த இடங்களிலிருக்க ஏழாதிபன் * திரிகத்தானங்களில் இருந்து பழுதடையச் சுக்கிரனும் பலவீனப்பட்டிருக்கப் பிறந்தவனின் களத்திரம் மாரகமடையக்கூடும். அல்லது நீடித்தரோகத்தால் வருந்தவும் கூடும்.

ஏழாமிடத்திற் சுபக்கிரகங்களிருக்கவும், ஏழாதிபதி கேந்திர திரிகோணங்களில் நட்பாட்சியாதிய சட்பெலமடைந்து அட்டவர்க்க நசவர்க்க பெலமும் பெற்றிருக்கவும், சுக்கிரனுமிவ்வாறு பெலமடைந்திருக்கவும் அமைந்த சாதகிக்கு, நற்களத்திரமும், களத்திரமூலம் சகலவித மேன்மைகளும் வந்து சேரும்.

ஒரு சாதகிக்குச் சித்திக்குங் களத்திரத்தின் திக்கு, நிறம், இடம், பந்துவோ அல்லவோ என்பனபோன்ற விடயங்கள் ஏழாம்பாவம், அதிலிருக்குங் கிரகம், ஏழாதிபதி, ஏழாதிபன் நவாம்சாதிபன் ஆகியவற்றைக் கொண்டு அறியவேண்டும். ஏழாமிராசிக்குரிய நிறத்தை இராசிகளின் நிறத்தைக்கூறும் அட்டவணையிற் காணலாம். இவ்வாறே கிரகநிற அட்டவணையிற் கிரகங்களின் நிறத்தையறியலாம்.




குறிப்பு:- இவ்விடய ஆராய்ச்சிக்குத் தேவையில்லாத கிரகங்கள் குறிக்கப்படவில்லை.

மேலே இருக்கும் இராசி, நவாம்ச சக்கரங்களிற் காணப்படும் கிரகநிலையைக்கொண்டு இச்சாதகியின் களத்திர விஷயத்தையாராய்வாம்.

* ஆறு, எட்டு, பன்னிரண்டு.



துலாம் இலக்கினமாக, இலக்கினநவாம்சம் மிதுனத்திலமைகிறது. துலாத்திற்கு மிதுனம் ஒன்பதாம் நவாம்சராசியாகும். இதனால் இலக்கினம் இருபத்தாறு பாகை நாற்பது கலைக்கு அப்பாலிருக்கிறது என்பது பெறப்படும்.

(1) நிறம்:

ஏழாமிராசி மேடம். இதன் நிறம் சிவப்பு.
ஏழில் நிற்கும் கிரகங்கள் ... செவ்வாய் இதன்நிறம் சிவப்பு.
சூரியன் இதன்நிறம் அக்கினி.
சுக்கிரன் இதன்நிறம் வெள்ளை.
ஏழாதிபதி செவ்வாய் இதன் நிறம் சிவப்பு
ஏழாதிபன் நவாம்சாதிபன் செவ்வாய் இதன்நிறம் சிவப்பு

மேலே கண்ட எல்லா நிறங்களையுஞ் சேர்த்துப் பார்க்கும்பொழுது சிவப்பு நிறமுள்ள களத்திரஞ் சித்திக்குமென்பது வெளிப்படுகிறது. ஏழாதிபன் நவாம்சாதிபதியின் நிறத்தைப் பிரதானமாகக் கவனித்து ஏனையவற்றோடு சேர்க்கப் பலநிறங்கள் சந்திப்பின் பொதுநிறமெனவும், கருமை நிறங்கள்கூடின் கறுப்புநிறமெனவும் அனுமானிக்க வேண்டும்.

(2) ஏழாதிபனாகிய செவ்வாய் சூரியனோடு சேர்ந்திருக்கிறார். சூரியன் பிதாவழியைக் காட்டும். ஏழாதிபன் நவாம்சாதிபனும் செவ்வாயாகிச் சூரியசம்பந்தம் பெறுதல் பிதாவழிச் சம்பந்தத்துக்குச் சார்பாகும்.

(3) ஏழாதிபன் நிற்கும் இராசி சரராசி. சரராசி அசைவுள்ளது. ஏழாதிபன் நவாம்சாதிபன் செவ்வாய் நிற்குமிராசியுஞ் சரராசி. சுக்கிரனுஞ் சரராசியில் நிற்கிறார். இக்காரணங்கள்பற்றி அன்னிய தேசத்தில் இருக்கும் களத்திரம் அமையுமென அனுமானிக்கலாம்.

(4) ஏழாதிபன் மேடத்தில் நிற்கிறார். ஏழாதிபன் நவாம்சாதிபனும் செவ்வாயாகி மேடத்தில் நிற்கிறார். மேடத்துக்குரிய திக்கு கிழக்கு. ஆகையால் இச்சாதகிக்குக் கிழக்குத்திக்கிலிருந்து களத்திரம் சித்திக்கும் எனலாம்.

இங்குக் காட்டியவாறு சுக்கிரன் நிற்குமிராசி, அவ்விராசிநாதன், அவனுடன் சேர்ந்த கிரகம், அவரைப் பார்த்த கிரகம், அவருடைய நவாம்ச இராசிநாதன் ஆகியவற்றின் நிறம் திக்கு முதலியவற்றையுமாராய்ந்து, முன்னர் ஆராய்ந்தவற்றையும் அவற்றோடு சேர்த்துப் பலன்காணல் முறையாகும். இங்குக் காண்பவை ஒன்றோடொன்று முரண்படின் கூடியபெல

முள்ள கிரகங்களைக்கொண்டு பொருத்தமுள்ளதெதுவென நிச்சயித்தல் வேண்டும். இதற்குப் போதிய அனுபவம் வேண்டும்.

இரண்டாம் வீடு பந்துசனத்தொடர்பிற்குரியது. ஆதலின் களத்திர விடயத்தை ஆராயும்பொழுது இரண்டாம் பாவத்தையும் இயைபுபடுத்தி ஆராய்தல் வேண்டும். இரண்டாதிபதி பகை நீசம் பெறுவது ஆறெட்டுப் பன்னிரண்டில் மறைவது முதலிய குற்றங்கள் பொருந்துவாராகில் ஏழாம்பாவம் குற்றமின்றி யமையினுங் களத்திரபலன் மத்திமமாகவே யமையும். குடும்பவாழ்க்கை பந்துசனமூலம் சீர்கேடுறும்.

பாவபலனை ஆராயுங்கால் பாவதிபர் நிற்கும் நட்சத்திரத்தையுந் தொடர்புபடுத்திப் பலன் ஆராயவேண்டும் என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பலன்காணும் முறையையமைத்து இவ்வேழாம் பாவபலனை ஆராய்வாம்.

கிரகங்கள் அவற்றின் குணம்பற்றிச் சாத்துவீகக் கிரகம், இராசதக் கிரகம், தாமதக்கிரகம் என முத்திறப்படும்.

குருவும், சந்திரனும், சாத்துவீகக் கிரகங்கள்.

சூரியன், புதன், சுக்கிரன் மூவரும் இராசதக் கிரகங்கள்.

செவ்வாய், சனி, இராகு, கேது ஆகிய நான்கும் தாமதக் கிரகங்கள்.

ஒரு கிரகம் நிற்கும் நட்சத்திரத்தின் தசாநாதன் சாத்துவீகக் கிரகமாயின் அக்கிரகத்துக்கு உத்தமபலனும், இராசதக் கிரகமாயின் மத்திம பலனும், தாமதக்கிரகமாயின் அதமபலனும் கூறவேண்டும். சூரியன் அசுவினி நட்சத்திரத்தில் நிற்பதாகக் கொள்வோம். அசுவினிக்குத் தசாநாதன் கேது. இவர் தாமதக்கிரகமாதலின் சூரியன் பெலவீனப்பட்டதாகக் கொள்ளல்வேண்டும். சூரியன் பரணியில் நின்ருல், பரணியின் தசாநாதனுகிய சுக்கிரனின் இராசதகுணத்தை இவர் அடைந்து மத்திம பலனைக் கொடுப்பர். சூரியன் உரோகிணியிலிருந்தால் அதன் தசாநாதனுகிய சந்திரனது சாத்விக குணத்தை இவர் பெற்று உத்தம பலனைக் கொடுப்பர். இப்படி நட்சத்திர தசாநாதனது குணத்தைப் பார்ப்பதோடு அவரது ஆதிபத்தியம், அவர் நிற்குந் தானம் ஆகிய இரண்டையுஞ் சேர்த்துப் பெலாபெல மறியவேண்டும். அக்கிரகம் - சாத்துவீக குணக் கிரகத்தின் நட்சத்திரத்தில் நிற்பினும் நட்சத்திரநாதன் மறைவுத் தானுதிபதியாய் அமையின் பெலவீனப்படுவர். தாமதக் கிரக நட்சத்திரத்தில் நிற்பினும் நட்சத்திரநாதன் இலாப கேந்திர திரிகோணுதிபனுயமையின் அதிக பழுதடைந்ததாகக் கொள்ளக்கூடாது.



கிரகம் நிற்கும் நட்சத்திரத்தின் தசாநாதன் சீவக்கிரக மெனப்படுவர். இச்சீவக்கிரகம் எந்த நட்சத்திரத்தில் நிற்கிறதோ அந்த நட்சத்திரத்தின் தசாநாதன் முன்னர்க் கூறிய கிரகத்தின் சரீரக்கிரகம் எனப்படுவர். ஒரு கிரகத்தின் சீவக்கிரகம் சரீரக்கிரகம் இரண்டும் பெலமடைந்து ஆதிபத்திய பெலமுமுண்டாயின் அக்கிரகத்துக்குப் பூரணபெலமுண்டெனலாம்.

முன்னர் எடுத்த உதாரணத்தில் உரோகிணி நட்சத்திரத்திற் சூரியன் இருப்பதாகக் கொண்டோம். உரோகிணியின் தசாநாதன் சந்திரனுகையாற் சூரியனின் சீவக்கிரகம் சந்திரனுகும். இனி, இச்சந்திரன் புனர்பூச நட்சத்திரத்தில் நிற்பதாகக் கொள்வோம். புனர்பூசத்தின் தசாநாதனுகிய குரு சூரியனது சரீரக்கிரகமாகும். சீவக்கிரகமாகிய சந்திரனும், சரீரக் கிரகமாகிய குருவும் சாத்விக கிரகங்களாயமைவது சூரியனுக்குப் பெலத்தைக் கொடுக்கும். இதனேடு இவ்விருவரும் ஆதிபத்தியம் முதலானவற்றிற் பெலம்பெறின் சூரியன் உத்தமபெல மடைந்திருப்பதாகக்கொண்டு பிதா முதலிய சூரியனின் காரகங்கள் விசேட பலனுக்குரியன வெனக் காணல்வேண்டும். இச்சூரியன் ஏழாதிபனுயமையின் உத்தம களத்திரத்தைக் கொடுப்பர்.

சீவ சரீர கிரகங்கள் எவ்வாறு ஏழாம் பாவபலனைப் பாதிக்கு மென்பதைக் கீழ்க்காணும் உதாரணத்தால் விளக்குவோம்.

அசுவினி

உத்தரட்டாதி

திருவோணம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சந் | குரு | |
| சூரி | | | கேது |
| புத ராகு | இராசிநிலை | | |
| இல / செவ் | | சனி | |

இச்சாதகத்தில் இலக்கினம் தனுவாக ஏழாதிபன் புதன் இரண்டில் திருவோண நட்சத்திரத்தில் இருக்கிருர். திருவோண நட்சத்திரத்துக்குத்

தசாநாதன் சந்திரன். ஆகவே, புதனின் சீவக்கிரகம் சந்திரனாகும். சந்திரன் சாத்துவிகக் கிரகமாயினும் அட்டமாதிபனாயமைகிறார். சந்திரன் அசுவினியிலிருப்பதால், அசுவினியின் தசாநாதனாகிய கேது புதனின் சரீரக் கிரகமாயமைகிறார். இச்சரீரக்கிரகம் தாமதக் கிரகமாதலின் இவர் மூலம் புதன் பழுதடைகிறார். இவ்வளவோடமையாது ஏழாதிபனுடைய சீவக்கிரகமாகிய சந்திரன் சனி திருஷ்டி பெறுகிறார். ஏழாதிபன் பாபர் மத்தியமடைகிறார். களத்திரகாரகன் சுக்கிரன் உச்சபெலத்துடன் நிற்பினும் அவர் சனியுடைய நட்சத்திரமாகிய உத்தரட்டாதியில் நிற்பதனாலும், செவ்வாய் திருஷ்டி பெறுவதனாலும் பெலவீனமடைகிறார். இங்குக் காட்டிய பல குற்றங்களோடு, செவ்வாய் உதயத்திலிருக்குங் குற்றமுஞ் சேர இந்தச் சாதகம் இருதார குற்றமுடைய சாதகமாகு மெனத் துணிந்து கூறலாம்.

களத்திரபலன் பார்ப்பதுபோல வியாபாரபலனும் ஏழாமிடத்தைக் கொண்டு பார்க்க வேண்டும். ஏழாம் பாவத்தின் பெலாபெலத்தையும் வியாபாரத்துக்குக் காரகக் கிரகமாகிய புதனின் பெலாபெலத்தையுஞ் சேர்த்துப் பார்த்துப் பலன் தெளியவேண்டும். இன்னொருவனோடு கூட்டுவியாபாரஞ் செய்ய விரும்புபவன் அவனுக்குந் தனக்குஞ் சாதகப் பொருத்த முண்டோ வென்பதை அறிந்து வியாபாரந் தொடங்கல் வேண்டும்.

முன்னர்க் கூறியவண்ணம் இப்பாடத்தில் விசேடமாக விளக்கிய சீவ சரீரக் கிரகபலன் எல்லாப் பாவத்துக்கும் பார்க்க வேண்டிய ஒன்றென்பதும், சாதாரணமாகச் சோதிடம் பார்ப்போர் இதைக் கவனியாது விடுவதாற் சரியான பலன் காணமுடியாது இடர்ப்படுகின்றனரென்பதும் மற்றப் பாவங்களில் விசேடமாக விளக்கிய விதிகள் இப்பாவத்திலும் ஆராயப்படவேண்டுமென்பதும் மனத்திலிருத்திக் கொள்க.



## எட்டாம் பாடம்

# ஆயுட் பாவம்

இப்பாவத்தின் முதன்மையான காரகம் ஆயுளாதலின் இது ஆயுட் பாவமெனப் பெயர்பெறும்.

இப்பாவத்தின் பிரதான காரகங்கள்: ஆயுள், மரணம், பிணி, துக்கம், இரணம், பகை, திரவியநாசம், மரணசாதனம், உரிமையால் வரும் பொருள் ஆதியனவாகும்.

ஒரு சாதகத்தில் எட்டாமிடத்தில் சுபக்கிரகங்கள் பெலமுற்றிருத்தலும், எட்டாம் பாவமும் அதிலிருக்குங் கிரகங்களும் அட்டமாதிபதியும் சுபர்சேர்க்கை பார்வை பொருந்தலும், ஆயுள் காரகனாகிய சனி பெலமடைதலும் சுகத்துக்குக் காரகராயுள்ள சூரிய சந்திரராகிய இரு இராசக் கிரகங்களும், இலக்கினமும், இலக்கினாதிபனும் பெலமடைதலும் பூரண ஆயுட் பேற்றுக்கு ஏதுக்களாகும்.

“இலக்கினாதிபதி பாபக்கிரகங்களுக்கிடையே யிருக்கவும், இலக்கினத்திற் பாபக்கிரகங்களிருக்கவும், சூரிய சந்திரர் பெலவீனமடைந்திருக்கவும் பிறந்தவன் தன் ஆயுள் முழுவதும் நோயிலேயே அழுந்திக்கிடந்து உயிர் துறப்பன்” எனக்கூறும் சந்தான தீபிகை.

கிரகங்க ளெல்லாங் கேந்திரங்களிலிருப்பது பூரண ஆயுளுக்குச் சார்பாகும்.

பன்னிரு இராசிகளும் கேந்திரம், பணபரம், ஆபோக்லிபம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய நான்கு இராசிகளும் கேந்திரங்களாகும். இரண்டு, ஐந்து, எட்டு, பதினொன்று ஆகிய நான்கும் பணபர இராசிகளாகும். மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டு ஆகிய நான்கும் ஆபோக்லிபராசிகளாகும். ஆபோக்லிபம், பணபரம், கேந்திரம் ஆகிய மூன்றும் முறையே ஒன்றுக்கொன்று ஏற்றமான பெலமுள்ளன. இதுபற்றியே எல்லாக் கிரகங்களும் கேந்திரத்தான மேறின் ஆயுட்பெலம் அதிகரிக்குமென மேலே கூறப்பட்டது. எல்லாக் கிரகங்களும் பணபரத்தில் நிற்பது மத்திம ஆயுளுக்கும், ஆபோக்லிபத்தில் நிற்பது அற்ப ஆயுளுக்கும் சார்பாகும்.

அட்டமாதிபன் நிற்கும் நட்சத்திரத்தின் தசாநாதன் தாமதக் கிரகமாய்ப் பகை நீச இராசிகளில் தீய திருட்டி ஆதிய குற்றங்களோடு


நிற்க, ஆயுள்காரகன் சனி பழுதடைய, சந்திரனும் அவ்வாருக, அச்சாதகம் அற்ப ஆயுட் சாதகமாகலாம்.

சீவசரீர கிரகங்கள் நட்பாதிய பெலம் பெற்றிருக்க சனியும், அட்டமாதிபதியும், இலக்கினமும், இலக்கினுதிபதியும் மத்திமபெலமடையின் அச்சாதகம் மத்திம ஆயுட்சாதகமாகலாம்.

சீவ சரீரக்கிரகங்கள் சாத்துவிக குணமுள்ளனவாய் ஆட்சி அல்லது உச்சம் பெறவும் எட்டாம் பாவம் சுபர்திருட்டியாதியவற்ருற் பெலமுறவும், சனியும் அட்டமாதிபதியும் பாபர்திருட்டிக்கு விலகிச் சுபர் திருட்டி பெறவும், சூரிய சந்திரர் பெலமடைந்து நிற்கவும் பொருந்திய சாதகத்தினைப் பூரண ஆயுட் சாதகமெனலாம்.

அற்பாயுள் முப்பத்துமூன்று வயதினுள்ளும், மத்திம ஆயுள் அறுபத்தாறு வயதினுள்ளும், பூரண ஆயுள் அறுபத்தாறு வயதின்மேலும் மரணத்தைக் கொடுப்பவை.


கார்த்திகை




இச்சாதகத்தில் சனி எட்டில் நீசமடைவதாலும், அட்டமாதிபதி செவ்வாய் நிற்கும் நட்சத்திரமாகிய கார்த்திகையின் தசாநாதன் சூரியன் ஆறில் பகை வீட்டிலிருப்பதாலும், சந்திரன் நீசமடைவதோடு சனியின் நட்சத்திரத்தில் நின்று செவ்வாய் திருட்டி பெறுவதாலும் சாதகி அற்பாயுளுடையவரெனல் பொருந்தும்.



ஆயினும் அட்டவர்க்க வலிமையால் இதற்குச் சாந்தியேற்படின் மத்திம ஆயுட்சாதகமாகலாம். அட்டவர்க்க, தசவர்க்க பெலம் சிறிதுமின்றேற் பிறந்தவுடன் மரணம் நேரிடலாம். சந்திரன் பெலவீனப்பட நான்காதிபதியும் பழுதடைத்திருந்தால் தாயும், பிள்ளையும் பிறந்தவீட்டில் மரணமடையலாம்.




விசாகம்

இச்சாதகத்தில் ஆயுள் காரகன் சனி பதினொன்றில் உச்சமாய்க் குருவின் நட்சத்திரமாகிய விசாகத்தில் நிற்றலாலும், அட்டமாதிபன் சந்திரன் இலக்கினத்திற்குங் குருவுக்குங் கேந்திரமாகித் தன்சொந்த நட்சத்திரமாகிய அத்தத்தில் நிற்றலாலும் இலக்கினத்திலே குரு ஆட்சியாய்த் திக்கு விரிய பெலத்தோடு *சனி திருட்டிக்கு விலகிநிற்றலாலும் இச்சாதகிக்குப் பூரண ஆயுள் சித்திக்கு மெனலாம். முன்னே காட்டியவாறு அட்டவர்க்க தசவர்க்க பெலமும் ஆராய்ந்தே தீர்க்கமான முடிவு காண வேண்டுமென்பது ஞாபகத்திலிருத்தல் வேண்டும்.

பிராணதேகப் புடங்களின் கூட்டுத் தொகை மிருத்தியுப் புடத்தைக் காட்டிலும் அதிகரிப்பது நீண்ட ஆயுளுக்கு ஏதுவாகும்.

**சென்மலக்கினப் புடத்தை ஐந்தாற் பெருக்கிக்**
**குளிகப்புடத்தைக் கூட்டப் பிராணப் புடமும், சந்திரப்**
**புடத்தை எட்டாற் பெருக்கிக் குளிகப்புடத்தைக் கூட்டத்**
**தேகப்புடமும், குளிகப்புடத்தை ஏழாற்பெருக்கிச் சூரியப்புடத்தைக்**
**கூட்ட மிருத்தியுப் புடமும் வரும்.**

* சனிக்கு 3 இல் குருநிற்பினும் இவரின் கால்பார்வைக்கு விலகிக் குரு நிற்கலாமென்பது பின்னல் அநுபந்தத்தில் விளக்கப்படும்.

**அட்டமனிரா ரௌன்பானணி திரியேகநூறு**
**எட்டுடன் பன்னொன்றைந்தி லிருந்திடி லெழுபத்தைந்து**
**விட்டவாறு மிடத்திளில் மேவிடில் நூறிற்பாதி**
**மட்டிலா நாலுபத்தேழ் வயதுமேயற்ப மாகும்**

என்பது ஆயுள்பற்றிய செய்யுளாகும்.

அட்டமாதிபதி: 12, 9, 2, 3, 1 இல் இருந்தால் வயது 100.
8, 11, 5 இல் இருந்தால் வயது 75.
6 இல் இருந்தால் வயது 50.
4, 10, 7 இல் இருந்தால் வயது அற்பம் ஆகும்.

ஒரு சாதகிக்கு ஆயுள் பூரணமோ, மத்திமமோ, அற்பமோ எனக் கணக்கிட்டறிந்தபின், மரணத்தைக் கொடுப்பதற்குச் சார்பான கிரகம் எதுவென அறிந்து, அதன் தசையிலோ, புத்தியிலோ அன்றிச் சித்திரத்திலோ மரணம் சம்பவிக்குமெனக் கணித்தல் வேண்டும். மாரகம், மிருத்து, மரணம் என்பன ஒரு பொருளன.

அட்டமாதிபனும் இவருடன் சம்பந்தப்பட்டவருமேயன்றி மரணத்தைக் கொடுப்பதற்கு ஏதுவான பிற கிரகங்களின் விபரத்தைக் கீழே காண்க.

இரண்டாம், ஏழாம் வீடுகள் மாரகஸ்தானங்கள் ஆகும். இரண்டாதிபன், ஏழாதிபன் ஆகிய இருவரிலும் பார்க்க, இரண்டாம் ஏழாம் வீட்டிலிருப்பவர்கள் மாரக வலிமையிற் கூடியோராவர். மாரகத்தானதிபர் சேர்க்கைபெற்றவர்கள் இவர்களைக் காட்டிலும் கூடியமாரக வலிமையுடையர்.

பாபக் கிரகங்களினதும், இலக்கினத்தினதும் நவாம்சாதிபர் மிருத்துக்களெனப்படுவர். அவற்றின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| இராகுவின் | நவாம்சாதிபன் | பாவமிருத்து. |
| சூரியனின் | நவாம்சாதிபன் | அவமிருத்து. |
| சனியின் | நவாம்சாதிபன் | அதிமிருத்து. |
| இலக்கினத்தின் | நவாம்சாதிபன் | காலமிருத்து. |
| செவ்வாயின் | நவாம்சாதிபன் | விரணமிருத்து. |

இங்குக் கூறிய ஐந்தும் பஞ்சமிருத்துக்களெனப்படும். சிலர் கேதுவின் நவாம்சாதிபன் தோஷமிருத்து வெனக்கொண்டு ஆறு மிருத்துக்களுண்டென்பர்.



அற்பாயுட் சாதகமாயின் மூன்ரும் தசையும், மத்திமாயுட் சாதகமாயின் ஐந்தாந்தசையும். தீர்க்காயுட் சாதகமாயின் ஏழாந்தசையும் மாரகஞ்செய்யும். இன்னும், மூன்ருந்தசை நீசமடைந்தவன் தசையாகவும்,

| | | |
|---|---|---|
| நான்காம்தசை | சனி | தசையாகவும் |
| ஐந்தாம்தசை | செவ்வாய் | அல்லது அத்தமடைந்தவன் தசையாகவும் |
| ஆரும்தசை | குரு | தசையாகவும் |
| ஏழாந்தசை | சத்துரு | தசையாகவும் |

அமையின் இத்தசைகள் மாரகத்துக்கு இயைபுடையனவாக அமையும்.

இவைகள் எல்லாவற்றையுஞ் சேர்த்துப் பார்க்குமிடத்துப் பெரும்பாலும் எல்லாக்கிரகங்களுக்கும் யாதேனும் ஒருதுறையிலாயினும் மிருத்து சம்பந்தமிருக்கக்கூடுமென்பது புலனுகின்றது. ஆதலின் எட்டாமிடப் பலனை மாத்திரம் ஆராய்ந்து மரணகாலம் நிச்சயிப்பது, அரியகாரியம் என்பதையும் திரோதானசத்தியின் தொழிற்பாடு பெரும்பாலும் சோதிடருக்கு மரணகாலம் வெளிப்படாவண்ணஞ் செய்துவிடுமென்பதையும் கருத்திற்கொண்டு மரணகாலத்தை அறுதியிட்டுக் கூறுவதற்கு எத்தனிக்காதுவிடல் நலம்.

எனினும், மேற்கூறிய மாரகத்திற்குடன்பாடான தசாபுத்தியாதியன பொருந்திய காலத்தில் சாதகருக்குக் கடினநோயுங் காணப்படின் சாதகரின் சென்மத்திரய வதைவைநாசிக நாள்களுளொன்றில் மரணம் சம்பவிக்குமெனக்கூறின் அக்கூற்றுப் பெரும்பாலும் சரிவரக்கூடும்.


## ஒன்பதாம் பாடம்

# தன்ம பாவம்

ஒன்பதாம் பாவத்தின் மிகப் பிரதான காரகம் தன்மமாதலின் இது தன்ம பாவமெனப்படும்.

இப்பாவத்தின் பிரதான காரகங்கள் தன்மம், பிதா, பிதிர்ப்பரம்பரை, பிதிர்ச்சொத்து, பூர்வபுண்ணியபலன், உபதேசம், பாக்கியம், கடற் பிரயாணம், அன்னியநாட்டுத் தொடர்பு ஆதியனவாம்.

ஒரு சாதகத்தில் தன்மத்துக்குச் சாதகமாகிய குருவும், ஒன்பதாமிடமும், ஒன்பதாதிபதியும் பூரணபெலமடைந்திருப்பின் அச்சாதகி மிகு தன்மசிந்தையுள்ளவராயும், பிதிர்ச்சொத்து உள்ளவராயும் பிதாவுக்குக் கீழ்ப்படிவுள்ளவராயும், மிகுபாக்கியசாலியாயும் விளங்குவர். குருபெலவீனப்படின் இக்காரகங்கட்கு மத்திமபலனே கூறல்வேண்டும். இத்துடன் ஒன்பதாம் பாவமும், ஒன்பதாதிபதியும் பெலவீனப்படின் அச்சாதகி பலவித கஷ்டங்களுக்குள்ளாகித் தன்மசிந்தை யற்றவராயும், பிதிர்ச் சொத்தை வீணிற்செலவு செய்பவராயும், நிர்ப்பாக்கியராயும், பாவச்செயலில் ஈடுபடுபவராயும் இருப்பர். ஒன்பதாம் பாவத்துடன் தொடர்புபட்ட கிரகங்களின் சீவ, சரீரக்கிரக பெலாபெலங்களையுமாராய்தல் பிரதான மென்பதை மறத்தலாகாது.




இச்சாதகத்தில் ஒன்பதாதிபன் சனி மூலத்திரிகோணவிராசியில், திரிகோண பெலத்துடன் நிற்பினும், அவர் செவ்வாயின் நட்சத்திரமாகிய அவிட்டத்தில் நிற்றலால் சாதகியின் பிதா கடனாளியாய் நீதிஸ்தல வழக்கில் தொடர்புபடநேர்ந்தது. சனிநின்ற நட்சத்திர தசாநாதனாகிய செவ்வாய் ஆறுதிபனாக, ஆறும் பாவகாரகமாகிய கடன் தொல்லை யுண்டானது. ஆனால், இந்த ஒருகாரணம் பற்றியே இப்பலன் நடந்ததெனக் கூறல் பிழைபடவுங்கூடும். பலகாரணங்களுமாராயப்படல் வேண்டும். முன்னர்ப் பலமுறை கூறியவாறே இலக்கினத்தினதும், இலக்கினாதியனதும் பெலாபெலமும் ஆராயப்படல்வேண்டும்.



ஒரு பாவத்துக்குப் பலன் பார்க்கும்பொழுது அப்பாவத்தை இலக்கினமாகவைத்து, அவ்விலக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களிற் சுபர் பெலமடைந்திருப்பின் அப்பாவத்துக்குச் சுபத்துவம் அதிகரிக்குமெனவும், இதற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் பாவக்கிரகங்கள் பழுதடைந்திருப்பின் இதன் காரகங்கள் பழுதுறும் எனவுங் கொள்ளல்வேண்டும். ஒன்பதாம் பாவத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் கிரகங்களில்லாது, கேந்திர திரிகோணங்களில் கிரகங்கள் வலிமையடைந்திருப்பின் இவ்வலிமை பிதாவழிச்சிறப்பு, பாக்கியசித்தி, நல்லசகவாசம், தயவுடைமை, குடும்பச் சிறப்பு ஆதியன அமைதற்குச் சார்பாகும்.

இப்பாவம் எந்தவிராசியில் அமைகின்ற தென்பதனையும், இப்பாவத்தில் எந்தக் கிரகங்களிருக்கின்றன வென்பதனையுங் கவனித்து அவ்விராசிக்கும் அக்கிரகங்களுக்குமுரிய காரகங்களையும் இயைபுபடுத்திப் பலன் காணல்வேண்டும்.

பாக்கிய விருத்திக்கு இடமுள்ள ஒரு சாதகத்தில் ஒன்பதாம் பாவம் மேடத்திலமைந்தால் மேடத்தின் காரகமாகிய தங்கச் சுரங்கங்கள்மூலம் பாக்கியசித்தி உண்டாம். இடபவிராசியாயின் மாடமாளிகைச் சிறப்பு அமையும். மிதுனவிராசியாகில் போகநுகர்ச்சிக்குரிமை அதிரிக்கும். கடகமாகிற் செழிப்பான வயல்மூலம் பாக்கிய விருத்தி உண்டாம். இவ்வாறே ஏனைய விராசி காரகங்களையுங் கவனித்து அக்காரகங்கள்மூலம் பாக்கிய சித்தி காணல் வேண்டும்.

சூரியன் ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் பிதாவுக்குத் தீர்க்காயுள் உண்டாம்.

சந்திரன் ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் தேவபக்தி அமையும்.

செவ்வாய் ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் பிதாவுக்குப் பிதிர்ப்பரம்பரைச் சிறப்பு உண்டாகும்.

புதன் ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் வேதசாத்திர பாண்டித்தியமுண்டாகும்.

குரு ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் மந்திரித்துவம் அமையும்.

சுக்கிரன் ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் வாகனச் சிறப்புண்டாகும்.

சனி ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் சமய சமரச மனப்பான்மை யுண்டாகும்.

இராகு ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் பலகாரியப் பிரவிருத்தி குன்றும்.

கேது ஒன்பதாம் பாவத்தில் சுபத்துவமடையின் தருமகாரியத்தின் பொருட்டுச் சத்துருநிக்கிரகம் அமையும்.


இவ்வாறே ஒவ்வொரு பாவத்திலுமிருக்குங் கிரகங்களுக்குரிய பலனை அவதானித்து நன்மை தீமைகொள்ளல் வேண்டும்.

பெண் சாதகத்தில் ஏழாம்பாவத்தைப் புத்திரபாவமாகவும், எட்டாம் பாவத்தைக் களத்திரபாவமாகவும், ஒன்பதாம் பாவத்தைப் பர்த்துருபாவமாகவும் வைத்தும் பலன் பார்ப்பதுண்டு.

ஏழாம் பாவத்தோடு பர்த்துருஸ்தானமாகிய ஒன்பதாம் பாவமும் பெலமடைந்திருப்பின் உத்தம களத்திரபலன் அமையும். ஒன்பதாம் பாவமும் அதிபதியும் பாபகர்த்தரி யோகம் முதலாய குற்றங்கள் அமையப்பெறின் ஏழாம் பாவம் குணமடைந்திருப்பினும் களத்திரபலன் மத்திமமாகவே இருக்கும்.

ஏழு, ஒன்பது ஆகிய இருபாவங்களும், இவற்றினதிபதிகளும் பெலவீனமடையின் விவாகப்பேறு இல்லாமற் போகவுங்கூடும். விவாகம் கைகூடினும் குடும்பவாழ்க்கை சிறக்காது. விவாகமாகிச் சிலகாலஞ் சென்றபின் குடும்பப்பிரிவு சம்பவிக்கவுங்கூடும். அன்றி ஒருவருக்கொருவர் மனமொத்த ஆதரவின்றித் தன்தன் நலத்தின் பொருட்டு ஆதரவு காட்டும் வியாபார முறையான குடும்பசீவியம் அமையவுங்கூடும். அராநட்பு அமையினும் அமையும். ஒருவரை யொருவர் விழுங்குந் தருணத்தை முன்னிட்டுக் கொள்ளும் நட்பு அராநட்பு.






இப்பெண் சாதகத்தில் ஏழாதிபனுகிய புதனையும், நீசப்பட்ட பர்த்துருத்தானுதிபனுகிய சூரியனையும் செவ்வாய் பார்க்க, இரண்டில் நீசனிருக்க, இரண்டாதிபன் தன்விட்டுக்கு எட்டில் மறைய, களத்திரகாரகனுகிய சுக்கிரனும் நீசமடைய இச்சாதகருக்கு விவாகப்பேறு இல்லையெனவே கூறலாம். மாங்கல்யத்தானுதிபன் சகடயோகம் பெறுவதோடு சனி சேர்க்கையும் பெறுவதால் அரிதில் விவாகம் கைகூடினும் வெகுசீக்கிரத்தில் குடும்பப்பிரிவு, அல்லது இருவரிலொருவருக்கு மரணம் ஏற்படக்கூடும்.

---

13500

## பத்தாம் பாடம்

# கன்ம பாவம்

பத்தாம் பாவத்தின் தலையாய காரகம் கன்மம் ஆகும். கன்மம், உத்தியோகம், தொழில், சீவனம் என்பன ஒருபொருளன. கன்மம் யாகமுமாம்.

இப்பாவத்தின் காரகங்கள் கன்மம், கீர்த்தி. தயை, சௌக்கியம், எசமான், இராச்சியம் ஆதியனவாகும்.

பத்தாமிடத்திற் பாபக்கிரகமிருக்கவும், பத்தாதிபன் திரிகத்தான குற்றம், பகைநீசமூடகுற்றம் ஆதியன பொருந்தவும் அமைந்த சாதகியாதொரு தொழிலுமற்றவனுய்ப் பிறர்மனையிற் சாப்பிட்டுத்திரிந்து வாழுனை வீணிற் கழிக்க நேரிடும்.

பத்தாம் பாவத்திற்குத் திரிகத்தானங்களில் சனி, செவ்வாயிருப்பின் இப்பாவத்தின் நன்மை குன்றும்.

பத்தாதிபன் சட்பெலமடையவும், பத்தாம் பாவத்திற்குக் கேந்திர திரிகோணங்களிற் சுபரிருக்கவும், பத்தாதிபனின் சீவசரீரக் கிரகங்களிரண்டும் பெலமுறவும் அமைந்த சாதகி கீர்த்திப் பிரபலம் அமைந்த சீவனம் நடாத்துவள்.

பத்தாமிடத்திலிருக்குங் கிரகம், இவ்வீட்டதிபதி, இவரைப் பார்க்குங் கிரகம். இவருடன் சேர்க்கை யடையுங் கிரகம் ஆதியவற்றுள் எக்கிரகம் வலிமையதிகரிக்கப் பெறுகின்றதோ அக்கிரகத்தின் காரகத்துறையான தொழிற்சித்தி பெரும்பாலும் அமையும். இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் சமபெலமடையின், அக்கிரகங்களின் காரகத்துறையான தொழில்கள் ஒருமித்து அமையும். பத்தாதிபனிருக்கு மிராசி காரகம். பத்தாதிபனிருக்கும் நட்சத்திரநாதனின் காரகம் என்பனவும் தொழில் அமைவுக்கு இயைபுபடும்.

இவை யெல்லாவற்றையும்விடப் பத்தாதிபன் நவாம்சாதிபனின் காரகங்களே தொழில் அமைவுக்கு மூலகாரணமாய் இயைபுபடும். இக்கூற்று மற்றைய பாவபலன்கள் விடயத்திலும் பொருந்தும். இலக்கினதிபன் நவாம்சாதிபதியும் பார்வை சேர்க்கையால் இவரோடு தொடர்புபடுங் கிரகமும் சாதகியின் தேகநிற அமைவுக்கு உரிமைகொள்ளும். இலக்கினதிபன் நவாம்சாதிபன் குருவாகி, இவர் சந்திரன், செவ்வாய், சுக்கிரன், என்போரின் சேர்க்கை யடையப்பெறும் சாதகர் பொன்னிற மேனியுடையராதலையும், இந்நவாம்சாதிபன் சனியாகிப் புதன், இராகு சேர்க்கையையும் பொருந்தப்பெறும் சாதகர் கருநிறமேனி யுடையராதலையும் அனுபவத்திற் காணலாம். செம்மை கருமைநிறக் கிரகங்களின் கலப்புச் சேர்க்கை பொதுநிற மேனிக்கு ஏதுவாகும்.



இரண்டாதிபன் நவாம்சாதிபனின் காரகத்துறையினல் தனம்சேரும். மூன்றாதிபன் நவாம்சாதிபன் சகோதர விடயத்தைக் காட்டும். ஏழாதிபன் நவாம்சாதிபனின் நிறம், திக்கு, சாதி ஆதியவற்றோடு இயைபுபட்ட களத்திரஞ் சித்திக்கும். பத்தாதிபன் நவாம்சாதிபன் சூரியனாகித் திக்கு வீரியம் முதலிய சட்பெலமடைந்து இவர் புதனுடன் யோக சேர்க்கையும் பொருந்துவாராகில் வைத்தியத்துறையில் உன்னதநிலைமை சித்திக்கும்.

1. தொழிலைக் கொடுப்பதற்குச் சார்பாயுள்ள கிரகம் சூரியனாயின் அரசாங்க சேவையிலமர்வதற்கு மிகச்சார்புண்டு. அரசாங்க சேவையிலும் வைத்தியப்பகுதி கூடியபொருத்தமுள்ளதாகும். சூரியன் - பெலங்குறைந்தவராயின் உத்தியோகமும் அதற்குத் தகுந்த தரமுடையதாகும். மருந்துக்கடை, பவுண் அல்லது இரத்தின வியாபாரம் ஆதியனவும் சூரியனின் சீவனகாரகங்களாகும். பிதிர்வழிச் சொத்தைக்கொண்டு சீவனஞ்செய்தலும் பொருந்தும்.

2. அக்கிரகம் சந்திரனாகில் விவசாயப்பகுதித் தொழில், திரவப்பொருள் வியாபாரம் ஆதியன அமையும். மாதாவழிச் சொத்தைக் கொண்டு சீவனஞ் செய்தலும் பொருந்தும்.

3. அக்கிரகம் செவ்வாயாகில் நகர்காவலர் பகுதியில் தொழில், விவசாயம், தொழில் நுட்பக் கல்வித்துறை ஆதியன அமையும். சகோதர வர்க்கத்தினரின் பொருளைக்கொண்டு சீவனஞ் செய்தலும் பொருந்தும்.


4. அக்கிரகம் புதனாகில் போக்குவரத்துப் பகுதி, தபாற்பகுதி, கல்விப்பகுதி ஆதியனவற்றின் தொடர்புள்ள தொழில் அமையும்.

5. அக்கிரகம் குருவாகில் அரசாங்க சேவை, நீதிபரிபாலனத்துறை, பணத்தொடர்புடைய வங்கி முதலாய பகுதிச்சேவை, ஆசிரியத்தொழில் ஆதியன அமையும்.

6. அக்கிரகம் சுக்கிரனாகில் தரகுவேலை, வங்கிச் சேவை, வியாபாரம், அலங்கார வேலைப்பகுதி, சங்கீத நாட்டியத்துறை முதலியவற்றுற் சீவனம் பொருந்தும்

7. அக்கிரகம் சனியாகில் எண்ணெய் வியாபாரம், புகைவண்டி மோட்டார்வண்டிச் சாரதித்துவம், கூலிவேலை பொருந்தும்.

இராகுவுக்குச் சனியின் பலனையும். கேதுவுக்குச் செவ்வாயின் பலனையுங் கொள்ளலாம்.




பூராடம்

இச்சாதகத்தில் பத்தாதிபனாகிய குரு பத்தில் ஆட்சியாய் இருக்கவும், தொழில் விஷயத்திற் சாதகிக்குக் கஷ்டமேற்பட்டது. இதற்குப் பிரதான காரணம் பத்தாதிபனிருந்த நட்சத்திர தசாநாதன் சுக்கிரன் மூன்று எட்டுக்கு அதிபனாய் அமைந்தமையாம். இந்த ஒருகாரணம் மாத்திரம் இப்பலனைக் கொடுத்ததாகத் தீர்ப்பது சரியல்ல. இது பிரதான காரணமாயமைய, தொழில் விஷயத்துக்குத் தொடர்புள்ளதென முன்னர்ப் படித்த வேறு காரணங்களும் பாதகமா யமைந்து இக்கஷ்டபலன் நடந்ததென அறியவேண்டும்.

மேற்கூறிய சுக்கிரன் இச்சாதகத்தில் நான்கில் நிற்பாராயின் இலக்குக்குத் திக்குவீரியமும், குருதிருட்டி பெலமும் அமையும். இவரிருந்த நட்சத்திர தசாநாதன் (உடற்கிரகம்) குருவாகி அட்டவர்க்க தசவர்க்க வலிமையடையவும், பத்தாதிபனாகிய குருவின் நவாம்சாதிபன் பாபக்கிரகத் தொடர்பின்றிச் சட்பெலமடையவுங் கூடுமானால் தொழிற்கஷ்ட மேற்பட வேண்டியதில்லை. இடையிடையே தொழில்மூலம் மனச்சலனமேற்படுத்தும் மாத்திரையில் அவ்வட்டமாதிபத்தியதோடம் நின்றுவிடும். இப்படி ஆராயும்பொழுது சில சமயங்களில் மிகப் பிரதான காரணம் ஆராய்பவரின் கவனத்துக் கெட்டாவிடின் அவ்வாராய்ச்சின் முடிபு திருப்தியுள்ளதாயிராது.

ஒரு சாதகத்தில் தொழில் ஆராய்ச்சி நிகழ்த்தும்பொழுது சாதகி வசிக்கும் சுற்றுடல், அவருடைய நாட்டங்கள், அவருடைய பிதாவின் நிலைமை ஆதியவற்றையும் இயையுபடுத்தி ஆராய்தல் வேண்டும்.

தனபாவமும், பத்தாம் பாவத்திற்குத் தனபாவமாயமையும் இலாபபாவமும் பெலவீனப்படின் தொழில்மூலம் அதிகதனம் சேராது. பாக்



கியத்தானம் பெலவீனப்படில் மேலான தொழிலமைந்தாலும் தொழிலில் மனச்சாந்தி அமையாது.

இரண்டு, ஒன்பது, பதினொன்று ஆகியமூன்று பாவங்களும் பழுதற்றிருக்கப் பத்தாம் பாவம் பெலமடையின் தொழில்மூலம் பொருள்வரவு. கீர்த்திப் பிரபலம், மனச்சந்தோஷம் ஆதியன அதிகரிக்கும்.

கேந்திர திரிகோணாதிபர் சேர்ந்து சுபத்தானத்தில் நிற்பது இராசயோகமாகும். இந்த யோகத்திலும் ஒன்பது பத்துக்குடையோர் சேர்க்கையானல் விசேட இராசயோகமாகும். தன்மவழியாற் பொருள்சேரும். தன்மப்பிழையின்றிக் கன்மம் நடக்கும். தன்ம கன்மம் இரண்டும் முறைப்படி நடப்பதற்கேதுவான இந்தயோகம் ஒருவனுக்குப் பொருந்துமாயின் அவன் மிகுபாக்கியசாலி என்பதைத் துணிவுடன் கூறலாம்.

---

## பதினோராம் பாடம்

# இலாப பாவம்

பதினோராம் பாவத்தின முதன்மையான காரகம் இலாபமாதலின் இது இலாப பாவமெனப்படும்.

இப்பாவத்தின் பிரதான காரகங்கள் இலாபம், காது, காதணி, இராச வித்தை, ஏவலர், மூத்தசகோதரம், துக்கநிவிர்த்தி, சிநேகிதர், சூழல், வர்த்தகம், சலப்பிரயாணம் ஆதியனவாம்.

ஏனைய பாவங்களுக்கும் இதற்கும் ஒரு பிரதான வித்தியாசமுண்டு. இப்பாவத்தில் சுபர், பாபர் யாரிருந்தாலும் அவர்கள் நற்பலனையே கொடுப்பர்.

இரண்டாம் ஏழாம் இடங்கள் நற்பலனுக்குரியன எனினும் அப் பாவங்கள் மாரகசம்பந்தமுடையனவென முன்னர்ப் படித்தோம். இரண்டாம், ஏழாமிடங்களைப்போலக் கடினமான மாரகத்தன்மை இன்றெனினும் மூன்றும் பதினோராம் பாவங்களும் மாரக சம்பந்தமுடையவையென அறிதல் வேண்டும். இப்பாவங்களில் நிற்குங் கிரகங்களும், இப்பாவாதிபதிகளும், இப்பாவாதிபதிகளைச் சேர்ந்தவரும், இப்பாவாதிபதிகளாற் பார்க்கப் பட்டவரும் மாரக சம்பந்த முடையவராவர்.

மேலும் சரராசி இலக்கினங்களுக்குப் பதினோராம் பாவம் பாதகஸ் தானமாகும். அவ்வாறுனல் இப்பாவமும் பாதக பலனுக்குரியதாகும். பாதகத்தான சம்பந்தபலன் விவரம் நான்காம் பாடம் 14-ம் பக்கத்திற் காண்க.

கோசர சஞ்சாரத்தில் பதினொன்றில் எக்கிரகம் நிற்பினும் சுபர், பாபர் என்ற பேதமின்றி அந்நிலைக்கு நற்பலனே கூறல்வேண்டும்.

எக்காலத்தில் நிகழும் பலன் ஆராயப்படுகின்றதோ அக்காலத்திற் கிரகங்கள் சஞ்சரிக்கும் தானங்களுக்குரிய பலன் கோசரபலன் எனப்படும்

| | | | |
|---|---|---|---|
| கோன் | சரம் | — | கோசரம் |
| கோள் | சாரம் | — | கோட்சாரம் |

சென்மலக்கினம், சந்திரலக்கினம் என்ற இரண்டனுள் சந்திரலக்கினத்தை ஆதியாகக்கொண்டு கிரகங்கள் அவ்வக்காலத்திற் சஞ்சரிக்கும் இடங்களின் பலனை நிதானித்துக் கோசரபலன் கூறப்படும். சென்மலக்கினத்தை ஆதியாகவைத்து அரைப்பங்கு கோசரபலன் கூறலாம். இந்த இரண்டுவித கோசரபலனுடனும் அவ்வக் காலத்தசாபுத்தி பலனையுஞ் சேர்த்து ஒருவரின் காலபலனை நிச்சயித்தல் வேண்டும். தசாபுத்திபலன், கோசரபலன், இரண்டும் நன்றாயிருப்பின் உத்தமபலனும், ஒன்று மாத்திரம் நன்றாயிருப்பின் மத்திமபலனும் இரண்டும் பழுதாகின் அதமபலனுங் கூறல்வேண்டும்.



அனுபந்தத்திலுள்ள அட்டவணைகளிற் கோசரபல அட்டவணையையுங் காணலாம். பலன் பார்க்கும்பொழுது அட்டவணையை வைத்துப் பார்க்க.

பதினோராம் பாவத்திலுள்ள கிரகமெல்லாம் நற்பலனையே கொடுக்கும் என் மேலே கூறியது தானபலனை மாத்திரமே எனக் கொள்க.

ஆதிபத்தியம், திருட்டி ஆகியவற்றின்மூலம் உண்டாகும் பெலவீனங்கள் பதினோராமிடத்திலுள்ள கிரகங்களைப் பாதிக்கமாட்டா எனக் கொள்ளக்கூடாது. இலாபத் தானத்தில் நிற்பதால் அத்தோஷங்கள் அதிக கஷ்டத்தைச் செய்யாவெனக் கொள்ளலாம்

சோதிட பலன் பாகங்கூறும் நூல்களில் சாதாரணமாகத் தசாபுத்தி பலன்களைக் காணலாம். அங்குக் கூறப்பட்டிருப்பது பொதுக்காரகங்களாகும். நற்பலன், தீப்பலன் இரண்டையும் அங்குக்காணலாம். நாம் பலன் பார்க்க எடுத்துக்கொண்ட சாதகத்தின் பெலத்தையும், பெலவீனத்தையும் விரிவாக ஆராய்ந்து அவற்றிற்குப் பொருத்தமாகவுள்ள காரகங்களை எடுத்துக்கொண்டு அல்லாதவற்றைத் தவிர்த்துவிடல் வேண்டும்.

ஒரு சாதகத்தில் புத்திரகாரகனாகிய குருவும் புத்திரத் தானமாகிய ஐந்தாமிடத்ததிபதியும் பெலமடைந்திருப்பின், இவர்களின் தசாபுத்தி காலங்கள் புத்திரப் பேற்றுக்குச் சார்பானவையாக அமையும். ஆனால், குறித்த தசாபுத்திகள் சாதகியின் பாலப்பருவத்தில் நிகழ்ந்தால் அக்காலத்திற் புத்திரப்பேறு அசம்பாவித மென்பதை மறந்து பலன் கூறக்கூடாது.

முப்பது வயது வரைக்கும் விவாகத் தடைக்குரிய ஏதுக்களமைந்த ஒரு பெண்ணின் சாதகத்தில், அக்காலத்துக்கு முன்னர் நடக்குந் தசாபுத்திகள் புத்திரபேற்றுக்குச் சார்பான காரகங்கள் அமைந்தனவாக விருப்பினும் இக்காலத்திற் புத்திரப் பேற்றைக் கூறக்கூடாது.

பதினோராம் பாவத்துக்குரிய சிலபலன்கள் அவற்றிற்குரிய ஏதுக்களுடன் கீழே தொகுத்துக் காட்டப்படும்.

1. இலாபாதிபதி உச்சமாயிருந்தாலும், கேந்திர கோணங்களி லிருந்தாலும், இலாபத்தானம் சுபர் மத்தியமா யிருந்தாலும் தனலாபமுண்டாகும்.

2. பத்தாதிபன் சுபனுகி, சுபனுகிய பதினேராதிபனேடு கூடிச் சுபத்தானத்திலிருந்தாற் சாதகன் தன்சொந்த முயற்சியாற் பணமீட்டித் தனவானுவான்.

3. இலாபாதிபனின் நவாம்சாதிபன் சுபனுகிச் சுபர்மத்தியம் பெற்ருல் சாதகன் தனலாபவானுவன்.

4. இரண்டாம், நான்காமிடங்களின் அதிபதிகளினுல் இலாபாதிபதி பார்க்கப்பட்டுப் பாக்கியாதிபதியுடன் கூடியிருந்தால் சாதகன் வீடு வாகனச் சிறப்புடைய தனவானுவன்.

5. இலாபாதிபன் இருக்குந் திரேக்காணுதிபன் சுபனுகிப் பத்தாதிபனின் பார்வை பெற்ருல் அதிகசிரமமின்றித் தனலாபஞ் சித்திக்கும்.

6. இலாபாதிபன் அல்லது தனுதிபனுக்குரிய திக்கிலிருந்து சாதகனுக்குப் பொருள் சேரும்.

7. இலாபத்தானத்திற் பாபக்கிரகமிருக்க இலாபாதிபதியும் பாபர் சம்பந்தமுறின் இலாபத்தடை யுண்டாகும்.

8. பதினேராமிடம் பெலமடைந்தால் மூத்தசகோதரருக்கு நன்மையுண்டு. அது பெவீனமடைந்தால் மூத்தசகோதரருக்குக் கஷ்டமுண்டாகும்.

9. பதினேராதிபதியும் மூன்ருதிபதியும் பெலவீனமுறின் காதுநோய் உண்டாகும்.

---



பன்னிரண்டாம் பாடம்

## விரய பாவம்

பன்னிரண்டாம் பாவத்தின் பிரதான காரகம் விரயமாதலின் இது விரய பாவமெனப் பெயர்பெறும். விரயம் - செலவு.

இப்பாவத்தின் முக்கிய காரகங்கள் விரயம், இடது நேத்திரம், இரண்டு பாதங்கள், அதர்மம், சயனசுகம், தானம், தியாகம், யாகம், சதி என்பனவாகும்.

விரயாதிபதி பாபியானுலும், விரயத்தானத்திற் பாபரிருந்தாலும், இப்பாவத்தைப் பாபர் பார்த்தாலும் சாதகன் வீண்வழிகளில் பொருளை விரயஞ் செய்வான்.

விரயாதிபன் நவாம்சாதிபன் சுபனுகிச் சுபர் நவாம்சத்தில், சுபர் மத்தியிலிருந்தால் சாதகன் நற்கருமங்களிற் பொருளைச் செலவு செய்வான்.

இப்பாவத்தின் நவாம்சாதிபதியைப் பற்றி இங்குக் காட்டியதுபோல எல்லாப் பாவத்துக்கும் நவாம்சாதிபரின் நிலையைத் தொடர்புபடுத்திப் பலன் காணல்வேண்டும்.

இலக்கினத்தின் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் நிறம் ஆதிய தன்மைகளும், இரண்டாதிபன் நவாம்சாதிபனைக் கொண்டு சாதகியின் பொருள்நிலை ஆதியனவும், மூன்ருதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் சகோதரசுகம் ஆதியனவும், நான்காதிபன் நவாம்சாதிபனைக் கொண்டு சாதகியின் மாதுருசுகம் ஆதியனவும், ஐந்தாதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் புத்திரசுகம் ஆதியனவும், ஆருதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் ரோகம் ஆதியனவும், ஏழாதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் களத்திரசுகம் ஆதியனவும், அட்டமாதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் ஆயுட்பெலம் ஆதியனவும், ஒன்பதாதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் பிதிர்ச்சுகம் ஆதியனவும், பத்தாதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் தொழிற்சித்தி ஆதியனவும், பதினேராதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் இலாபம் ஆதியனவும், பன்னிரண்டாதிபன் நவாம்சாதிபனைக்கொண்டு சாதகியின் விரயம் ஆதியனவும் அறிதல் வேண்டும்.

ஒரு கிரகம் நவாம்சம் பெற்றிருக்கும் வீட்டின் அதிபதி பெலமடைந்திருக்கிருரோ அன்றே என நிச்சயிக்க வேண்டியதன் அவசியம் மேலே கூறியவாற்ருல் நன்கு விளங்கும். இது இவ்வாருக இராசிநிலையை மாத்

திரங்கொண்டு பலன் சொல்ல எத்தனித்தல் அப்படிச் செய்பவரின் அறியாமையைப் புலப்படுத்துவதோடு சோதிட சாத்திரத்துக்கும் இழுக்குண்டாக்குவதா யிருக்கும்.

விரயாதிபதி பலவீனனாகி மூன்றாதிபதியுடன் கூடின் அல்லது அவரின் திருட்டிபெறின் சகோதரர்மூலந் தனவிரயம் ஏற்படும். சகோதரகாரன் செவ்வாயின் தொடர்பும் இப்பலனைக் கொடுக்கும். நான்காதிபன் தொடர்பு மாதாமூலமும், ஐந்தாதிபன் தொடர்பு புத்திரர்மூலமும், ஆறாதிபன் தொடர்பு சத்துருமூலமும், ஏழாதிபன் தொடர்பு களத்திரமூலமும். அட்டமாதிபன் தொடர்பு சோரர்மூலமும், ஒன்பதாதிபன் தொடர்பு பிதாமூலமும் தனவிரய முண்டாவதற்கு ஏதுக்களாகும்.

விரயத்தானத்தில் இராகு, குளிகனாதியோரிருந்து ஆறாதிபன் அல்லது அட்டமாதிபன் திருட்டி அல்லது சேர்க்கைபெறின் சாதகன் மறுமையில் துன்பப்பிறவி எடுக்கநேரிடும்.

கிரகங்களின்நிலை இராசிநிலை, நவாம்சநிலை ஆகியவற்றுடன் ஓரைநிலை, திரேக்காணநிலை, துவாதசாம்சநிலை, திரிம்சாம்சநிலை ஆகியவற்றைச் சேர்த்துச் சட்டவர்க்கநிலை சோதிட நூல்கள் கூறும். இவற்றுடன் சப்தாம்சநிலை, தசாம்சநிலை, சட்டியம்சநிலை ஆகிய மூன்றுநிலைகளைச் சேர்த்து நவவர்க்கநிலை கூறும் நூல்களுமுள. இவற்றுடன் கலாம்சநிலையைச் சேர்த்துத் தசவர்க்கநிலை கூறுஞ் சோதிட நூல்களுமுள. இவற்றுடன் சதுர்த்தாம்சநிலை, பஞ்சமாம்சநிலை, சட்டமாம்சநிலை அட்டமாம்சநிலை, ஏகதசாம்சநிலை, நாடியம்சநிலை ஆகிய ஆறுநிலைகளைச் சேர்த்துச் சோடசவர்க்கநிலை கூறும் நூல்களுமுள. இவற்றுள் தசவர்க்கநிலை கொண்டு பலன்காண்பது பெரும்பாலார் வழக்காக இருக்கின்றது. சாதகங்களில் இத்தசவர்க்கநிலைகள் சக்கரங்களுள் அமைக்கப்பட்டிருக்கும்.

கிரகங்கள் இராசிகளில் நிற்கும் நிலையைக் காட்டுவது இராசிநிலைச் சக்கரம். இவற்றின் நவாம்சராசிகளில் இவற்றை யடைத்துக் காட்டுவது நவாம்சநிலைச்சக்கரம். இராசியை இரண்டாகப் பிரித்துக் காட்டுவது ஓரைநிலைச்சக்கரம். இவ்வாறே மூன்று கூறாக்குவது திரேக்காணாம்சம். ஏழு கூறாக்குவது சப்தாம்சம். பத்துக் கூறாக்குவது தசாம்சம். பன்னிரண்டு கூறாக்குவது துவாதசாம்சம். பதினாறு கூறாக்குவது கலாம்சம். முப்பது கூறாக்குவது திரிம்சாம்சம். அறுபது கூறாக்குவது சட்டியம்சம் ஆகும்.

கிரகங்கள் இப்பத்துச் சக்கரங்களிலும் பகை நீசவிராசிகளை யடையாமலிருப்பது நன்று. பகை, நீசமின்றிய ஏகாதிபத்திய விராசிகளின் அம்சங்கள் சுபவர்க்கமாகக் கொள்ளப்படும். ஏகாதிபத்தியமாயினும் பகை



நீச அம்சங்கள் விலக்கப்படும். ஆனால், இராசி நவாம்ச மிரண்டிற்கும் அதிபதி ஒருவராயின் அவை சுபவர்க்கமாகக் கொள்ளப்படும்.

நான்கு கிரகங்கள் சுபவர்க்கமேறினால் கோபுராம்சம் எனப்படும். வாகனபலன் சித்திக்கும்.

ஐந்து கிரகங்கள் சுபவர்க்கமேறினால் சிம்மாசனாம்சம் எனப்படும் செல்வம் சித்திக்கும்.

ஆறு கிரகங்கள் சுபவர்க்கமேறினால் பராவதாம்சம் எனப்படும் வித்தை, செல்வம் கீர்த்தி சித்திக்கும்.

ஏழு கிரகங்கள் சுபவர்க்கமேறினால் தேவலோகாம்சம் எனப்படும் சேனாதிபதித்துவம் சித்திக்கும்.

எட்டுக் கிரகங்கள் சுபவர்க்கமேறினால் வைசேடிகாம்சம் எனப்படும் லோகாதிபதித்துவம் சித்திக்கும்.

ஒன்பது கிரகங்கள் சுபவர்க்கமேறினால் ஐராவதாம்சம் எனப்படும் அட்டைசுவரியம் சித்திக்கும்.

பத்துக் கிரகங்கள் சுபவர்க்கமேறினால் தேவேந்திராம்சம் எனப்படும் இந்திரபோகம் சித்திக்கும்.

இத்தசவர்க்கம் ஒவ்வொன்றும் தமக்கென வெவ்வேறு தன்மைகளையும் உடையனவாயிருக்கும். இவ்விபரம் பின்னாற் படிக்கலாம்.

எமது மரணத்தின்பின் நாம் அடையும் கதிபேதத்தைத் தீர்மானிப்பதற்குப் பன்னிரண்டாம் பாவஆராய்ச்சி பிரதானமானதாகும். இப்பாவம் இப்பாவாதிபதி இப்பாவத்திலிருக்குங் கிரகங்களாகியவை சுபர் திருட்டியாதிய பெலமடைந்தும் பாபர் சம்பந்தமின்றியு மிருப்பின் நற்கதியமையும். இப்பலன் பார்ப்பதற்குச் சிறப்பாகத் திரேக்காண சக்கரத்தின்நிலை கவனிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறே தசவர்க்க சக்கரத்தில் ஒவ்வொரு சக்கரமும் ஒவ்வொரு துறையில் விசேட பலன்காண்பதற்குத் தேவையானதாகும்.

## அநுபந்தம் 2.

## சட்பெலம்

### 1. ஸ்தான பெலம்:

உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி, நட்பு இராசிகளிலிருக்கும் கிரகங்கள் பெலமுள்ளன. பகைநீச இராசிகளிலுள்ள கிரகங்கள் பெலமற்றன. நவாம்சமாதிய ஏனைய வர்க்கங்களிலும் இதேபோலப் பெலமும் பெலவீனமுங் காண்க.

குறிப்பு: நட்பாட்சி உச்சமாதிய விபரங்களைப் பஞ்சாங்கங்களிற்காணலாம். அவ்விபரங்களின் பிரதியொன்று கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| சூரிய நட்பு<br>சந்திர சமம்<br>செவ் நட்பு<br>புதன் 15 நீசம்<br>வியா ஆட்சி<br>வெள் 27 உச்சம்<br>சனி சமம்<br>ரா-கே நட்பு | சூரி 10 உச்சம்<br>சந் சமம்<br>செவ் 18 மூல. 12 ஆட்<br>புத சமம்<br>வியா நட்பு<br>வெள் சமம்<br>சனி 20 நீசம்<br>ரா-கே பகை | சூரி பகை<br>சந் 3 உச் 27 மூல<br>செவ் சமம்<br>புத நட்பு<br>வியா பகை<br>வெள் ஆட்சி<br>சனி நட்பு<br>ரா-கே நீசம் | சூரி சமம்<br>சந் நட்பு<br>செவ் பகை<br>புதன் ஆட்சி<br>வியா பகை<br>வெள் நட்பு<br>சனி நட்பு<br>ரா-கே நட்பு |
| **கும்பம்**<br>சூரி பகை<br>சந் சமம்<br>செவ் சமம்<br>புதன் சமம்<br>வியா சமம்<br>வெள் நட்பு<br>சனி 20 மூல 10 ஆட்சி<br>ரா-கே பகை | | | **கடகம்**<br>சூரி நட்பு<br>சந் ஆட்சி<br>செவ் 28 நீசம்<br>புதன் பகை<br>வியா 5 உச்சம்<br>வெள் பகை<br>சனி பகை<br>ரா-கே பகை |
| **மகரம்**<br>சூரிய பகை<br>சந்திர சமம்<br>செவ் 28 உச்சம்<br>புதன் சமம்<br>வியா 5 நீசம்<br>வெள் நட்பு<br>சனி ஆட்சி<br>ரா-கே நட்பு | உச்ச<br>நீசசத்துரு ராசிகள் | | **சிங்கம்**<br>சூரிய 20 மூல 10 ஆட்சி<br>சந் நட்பு<br>செவ் நட்பு<br>புதன் நட்பு<br>வியா நட்பு<br>வெள் பகை<br>சனி பகை<br>ரா-கே பகை |
| **தனுசு**<br>சூரிய நட்பு<br>சந்திர சமம்<br>செவ் நட்பு<br>புதன் சமம்<br>வியா 13 மூல. 17 ஆட்சி<br>வெள்ளி சமம்<br>சனி சமம்<br>ரா-கே நட்பு | **விருச்சிகம்**<br>சூரி நட்பு<br>சந் 3 நீசம்<br>செவ் ஆட்சி<br>புதன் சமம்<br>வியா நட்பு<br>வெள் சமம்<br>சனி பகை<br>ரா-கே உச்சம் | **துலாம்**<br>சூரி 10 நீசம்<br>சந் சமம்<br>செவ் பகை<br>புதன் நட்பு<br>வியா பகை<br>வெள் 10 மூல 20 ஆட்சி<br>சனி 20 உச்சம்<br>ரா-கே நட்பு | **கன்னி**<br>சூரி சமம்<br>சந் நட்பு<br>செவ் பகை<br>புதன் 15 உச். 5மூல 10 ஆ<br>வியா பகை<br>வெள் 27 நீசம்<br>சனி நட்பு<br>ரா-கே நட்பு |



**2. திக்குப் பெலம்:**

புதனுங் குருவும் இலக்கினத்தில் பெலமுடையர்
சந்திரனுஞ் சுக்கிரனும் நான்காமிடத்தில் பெலமுடையர்
சனி ராகு ஏழாமிடத்தில் பெலமுடையர்
சூரியன் செவ்வாய் பத்தாமிடத்தில் பெலமுடையர்

கிரகங்கள் இத்தானங்கட்கு ஏழாமிடங்களி லிருந்தாற் பெலவீனப் படுவரெனக் கொள்க.

**3. காலபெலம்:**

சனி சந்திரன் செவ்வாய் இரவிற் பெலமுடையர்
சூரியன் குரு சுக்கிரன் பகலிற் பெலமுடையர்
புதன் இரவிலும் பகலிலும் பெலமுடையர்

சுக்கில பட்சத்தில் சுபக்கிரகங்களும், கிருஷ்ணபட்சத்தில் பாபக் கிரகங்களும் பெலமுடையர்.

**4. சேஷ்டா பெலம்:**

உத்தராயணத்தில் சூரியன் பெலமுடையர்
தட்சிணயணத்தில் சந்திரன் பெலமுடையர்
ஏனைய கிரகங்கள் வக்கிர கதியிற் பெலமுடையர்

**5. திருஷ்டி பெலம்:**

சுபக்கிரகங்களாற் பார்க்கப்படுங் கிரகங்கள் திருஷ்டி பெலமடைகின்றன. பாபக்கிரகங்களாற் பார்க்கப்படுங் கிரகங்கள் திருஷ்டிபெலவீனப்படுகின்றன. சுப ஆதிபத்தியமுள்ள கிரகங்களின் பார்வை பெலத்தையும், அசுப ஆதிபத்தியமுள்ள கிரகங்களின் பார்வை பெலவீனத்தையுங் கொடுக்கும் என்பதையுஞ் சேர்த்துத் திருஷ்டிபெலமறிய வேண்டும். பாபியாயினும் இலக்கினதிபனது திருஷ்டி பெலமுடையது என அறிக.

சனி தானிருக்கும் ஸ்தானத்திலிருந்து மூன்றும் பத்தாம் இடங்களையும், குரு ஐந்தாம் ஒன்பதாம் இடங்களையும் செவ்வாய் நான்காம் எட்டாம் இடங்களையும், எல்லாக் கிரகங்களும் ஏழாமிடத்தையும் பார்ப்பர். ஏழாமிடப் பார்வை தவிர்ந்த மற்றைய இடங்களின் பார்வைகளிற் சனிக்குக் காற்பார்வையும் செவ்வாய்க்கு அரைப் பார்வையும், குருவுக்கு முக்காற் பார்வையும் அமையும்.

**காற்பார்வை விபரம்:**

சனி ஒரு இராசியில் ஒன்பதாம் பாகையில் நிற்பதாகக் கொள்வோம். இவ்விராசிக்கு மூன்றும் இராசியின் ஒன்பதாம் பாகை மூன்றும்

பார்வைக்கு மத்தியமாகும். இம்மத்தியிலிருந்து முன் மூன்றே முக்காற் பாகை பின்மூன்றேமுக்காற் பாகை ஆகிய ஏழரைப் பாகையும் பார்வை அளவுக்குள் அகப்படும் பாகமாகும். இந்த ஏழரைப் பாகையும் ஒரு இராசியில் முப்பதுபாகையில் காற்பங்காதலின் இது காற்பார்வை எனப் பட்டது. இவ்வாறே பத்தாம் பார்வையும் காற்பார்வையாகும்.

ஒரு இராசியில் செவ்வாய் எத்தனையாவது பாகையில் கிற்கிறதோ, அவ்விராசிக்கு நாலாம் எட்டாம் இராசிகளில் அப்பாகை பார்வை மத்தியமாகும். மத்தியிலிருந்து முன்ஏழரை, பின் ஏழரை ஆகிய பதினைந்து பாகையும் செவ்வாயின் பார்வைக்குள்ளகப்படும். பதினைந்து பாகை ஒரு இராசியின் அரைப்பங்காதலின் இது அரைப்பார்வை எனப் படும்.

இவ்வாறே குரு ஒரு இராசியில் எத்தனையாவது பாகையில் நிற் கிறரோ அவ்விராசிக்கு ஐந்து ஒன்பதாம் இராசிகளில் அத்தனையாவது பாகை பார்வை மத்தியாகும். அம்மத்தியிலிருந்து முன் பதினொன்றே கால், பின் பதினொன்றேகால் ஆகிய இருபத்திரண்டரைப் பாகையும் குருவின் பார்வைக்குள் அகப்படும். இருபத்திரண்டரை ஒரு இராசியின் முக்காற் பங்காதலின் இப்பார்வை முக்காற் பார்வை எனப்படும்.

ஏழாம் பார்வை எல்லாக் கிரகங்களுக்கும் முழுப்பார்வையாகும். ஒரு கிரகம் மேடத்தில் இருபது பாகையிலிருப்பதாகக் கொள்வோம். மேடத்துக்கு ஏழாம் இராசியாகிய துலாத்தின் இருபது பாகை பார்வை மத்தியமாகும். இம்மத்தியிலிருந்து முன் பதினைந்து, பின் பதினைந்து ஆகிய முப்பது பாகையும் பார்வை எல்லைக்குள் அகப்படும். அதாவது துலாத்தின் ஐந்தாம் பாகை தொடங்கி விருச்சிகத்தின் ஐந்தாம் பாகை வரை பார்வை செல்லும்.

மேடத்தில் இருபதாம் பாகையிலிருக்கும் கிரகத்தின்பார்வை விருச் சிகத்தின் முதல் ஐந்து பாகைவரையுஞ் செல்வதைக் கவனிக்கும் பொழுது கிரகஸ்புட மில்லாமல் திருஷ்டி பெலமறிய முடியாதென்பது வெளிப்படும்.

### 6. நைசர்க்கிக பெலம்:

| | | | |
|---|---|---|---|
| 1. சனி | 3. புதன் | 5. சுக்கிரன் | 7. சூரியன் |
| 2. செவ்வாய் | 4. குரு | 6. சந்திரன் | — |

இவர்கள் முறையே ஒருவரைவிட மற்றவர் ஒளியால்கூடிய பெல முள்ளவராவர். இது நைசர்க்கிக பெலம் எனப்படும். நைசர்க்கிகம் இயல்பாக உள்ளது.



## அநுபந்தம் 3.

# பிரதான யோகங்களுட் சில சுபயோகங்கள்

### 1. பஞ்ச மகாயோகங்கள்:

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய பஞ்சகிரகங்கள் ஆட்சி அல்லது உச்சம் பெற்றுக் கேந்திரத்திலிருப்பின் அவர்கள் முறையே பின்வரும் பெயர்களைப் பெற்று அவற்றிற்குரிய பலன்களைக் கொடுப்பர்.

1. ருசக யோகம்: சூரத்தனம், ஆயுள்விருத்தி, தனலாபம்.
2. பத்திர யோகம்: வித்துவான், அரச சன்மான முடையோன்.
3. அம்ச யோகம்: சாது, சுகதேகி.
4. மாளவ யோகம்: பலவான், களத்திர, புத்திர, பாக்கிய விருத்தி யுடையோன்.
5. சசயோகம்: வேலையாட் சுகமுடையோன், பலவான், அதி காரி, ஆனற் கெட்டநடை யுடையோன்.

### 2. ஆசிரிய யோகம்:

ஒரு பாவத்தில் சுபன் இருக்க அல்லது அதைப் பார்க்க, அப்பா வாதிபன் நட்பாட்சி உச்சமாகிய ஸ்தானபெலம் பெற்று, மூடாஸ்தமன மாகிய பெலவீனமின்றி யிருப்பது ஆசிரிய யோகமாகும். இப்படிப் பன் னிரு பாவங்களுக்கும் பன்னிருயோக மேற்படும். இலக்கினமாதியாய பன்னிரு பாவங்களுக்குமுரிய இப்பன்னிரு யோகங்களுக்கும் பலன் முறையே பின்வருமாருகும்.

| | | |
|---|---|---|
| 1. தீர்க்காயுள் | 5. புத்திமான் | 9. பாக்கியசாலி |
| 2. சுகபோசனம் | 6. விவாதசீலன் | 10. சர்வசன இரட்ச |
| 3. கீர்த்தி | 7. தாரசுகமுள்ளோன் | 11. இலாபவான் [கன் |
| 4. வாகனவிருத்தி | 8. தரித்திரன் | 12. விரயசீலன். |

### 3. அதியோகம்:

இலக்கினத்துக்கு அல்லது சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டில் பாபக் கிரகத் தொடர்பின்றிச் சுபக்கிரகங்கள் நிற்பது அதியோக மெனப்படும்.

இதன் பலன் சேனுதிபத்தியம், மந்திரித்துவம், அரசசன்மானம், தீர்க்காயுள், ஐசுவரியம் என்பன.

**4. மகாபாக்கிய யோகம்:**

சூரியன், சந்திரன், இலக்கினம் இவை ஒற்றைஇராசியில் இருக்கப் பகலிற் புருஷனுகச் செனித்தாலும், இவை இரட்டைராசியில் நிற்க இரவில் ஸ்திரீயாகச் செனித்தாலும் மகாபாக்கிய யோகமுண்டாம்.

இந்த யோகமுள்ளோர் பல துறையிலும் நற்பலனையடையும் பாக்கியசாலிகளாவர்.

**5. கேசரி யோகம்:**

குருவிற்குக் கேந்திரத்திற் சந்திரனிருந்தாற் கேசரி யோகமாகும். இதன்பலன் தீர்க்காயுசு, அதிககீர்த்தி, சாமர்த்திய புத்தி ஆதியனவாகும்.

**6. வசுமத் யோகம்:**

இலக்கினத்துக்கு அல்லது சந்திரனுக்கு உபசெய ஸதானங்களில் எல்லாச் சுபக்கிரகங்களு மிருந்தால் வசுமத் யோகம் ஆகும்.

தன்வீட்டில் எப்போதுமதிக திரவியத்தோடு கூடியிருத்தலே வசுமத் யோக பலனுகும்.

**7. இலட்சுமி யோகம்:**

பாக்கியேசனும் சுக்கிரனும் சுயக்ஷேத்திரத்திலாவது உச்சத்திலாவது கேந்திர திரிகோணம் பெற்றிருந்தால் இலட்சுமி யோகமாம்.

இலட்சுமி கடாட்சம், வாகனசுகம், இராசசன்மானம், கொடை ஆதியன இலட்சுமி யோகத்தின் பலன்களாம்.

**8. கிரகமாலிகா யோகம்:**

இலக்கினம் முதல் ஏழு இராசிகளில் இடைவிடாமற் கிரகங்களிருந்தாற் கிரகமாலிகா யோகமாகும்.

சனுதிகாரம், தருமச்செயல், நல்லறிவு. சுகானுபவம் இதன் பலனுகும்.

**9. சக்கரயோகம்:**

இலக்கினம் முதல் எல்லா ஒற்றை இராசிகளிலும் தவருமல் கிரகங்கள் நின்ருல் சக்கர யோகமாம.

கிரகமாலிகா யோகபலன் இந்த யோகத்துக்கும் பொருந்தும்.



**10. சுபமாலா யோகம்:**

எல்லாக் கிரகங்களும் ஐந்து, ஆறு, ஏழு ஆகிய மூன்று தானங்களிலு மிருந்தால் சுபமாலா யோகமாம்.

புத்திர களத்திரசுகம், அரசசன்மானம், பரோபகாரம் ஆதியன இதன் பலனுகும்.

**11. நீசபங்கராச யோகம்:**

ஒரு கிரகம் நீசமாகுல் நீசன்நின்ற இராசிநாதன் அல்லது அந்த இராசிக்குரிய உச்சக்கிரகம் ஆட்சியாய்ச் சந்திரகேந்திரம் பெறின் நீசபங்க ராசயோக முண்டாகும்

சில நூல்கள் சந்திரகேந்திரம் பெறுவதே இந்த யோகத்தைக் கொடுக்கும் என்றும், ஒருகிரகம் நீசபங்கமான சாதகத்தில் வேறும் நீசக்கிரகங்க ளிருப்பின் அவையும் நீசபங்கமடையு மென்றும் கூறும்.

இதன் பலன் நீசக்கிரகங் கொடுக்குங் கஷ்டபலன் சாந்திப்படுவதோடு அக்கிரகங்களுக்குரிய காரகங்கள்மூலம் சாதகன் மேனிலை யடைவான்.

**12. பர்வத யோகம்:**

உதயலக்கினத்திலும் அதற்குக் கேந்திரத் தானங்கள் மூன்றிலும் கிரகங்கள் நின்ருற் பர்வதயோக மெனப்படும்.

இதன்பலன் கீர்த்தி, வாகனபலன், சுகானுபவம், ஸ்திரீசுகம் ஆதியனவாம்.

**13. சிவயோகம்:**

ஐந்தாதிபன் ஒன்பதிலிருக்க, ஒன்பது பத்தாதிபர்கள் ஐந்தி லிருப்பது சிவயோகமாகும்.

**14. தன்மகன்மாதிபர் இருவரும் சேர்ந்து நல்லபாவங்களிலிருத்தல் இராசயோகமாகும்.**

கீர்த்தி, பாக்கியவிருத்தி, தேவபத்தி, சற்கரும விருப்பு இதன் பலனுகும்.

கேந்திராதிபராயுள்ள எவரும் திரிகோணுதிபராயுள்ள எவரோடும் சேர்ந்து துர்க்கிரக சம்பந்தமின்றி நல்ல பாவங்களிலிருத்தலை இராச யோகம் என்பாருமுளர்.

வெகுசனமரியாதை, சகலதுறைகளிலும் முன்னேற்றம் இதன் பலனாகும்.

**15. பரிவர்த்தன யோகம்:**

இரு கிரகங்கள் ஒருவருக்கொருவர் வீடுகொடுத்து மாறியிருப்பது பரிவர்த்தன யோகமாகும்.

மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்கள் தவிர்ந்த ஏனைய வீட்டதிபர்கள் வீடுகொடுத்து மாறியிருப்பது பரிவர்த்தன மகாயோகமாகும்.

இதன் பலன் இலட்சுமி கடாட்சம், தனப்பெருக்கம், அரசருதவி, வாகனலாபம், புத்திரச்சிறப்பு ஆதியனவாம்.

மூன்றும் வீட்டதிபர் ஆறு, எட்டு, பன்னிரண்டு தவிர்ந்த ஏனைய வீட்டதிபரோடு பரிவர்த்தனஞ் செய்தல் கலயோகமாகும். இது மத்திய பலனுக்குரியது.

## அசுப யோகங்கள்

**1. பரிவர்த்தன யோகம்:**

ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களின் அதிபர்கள் ஏனைய அதிபதிகளோடு பரிவர்த்தனஞ் செய்வது தைந்நியயோகம் எனப்படும்.

மூர்க்கத்தனம், சத்துருதுன்பம், சஞ்சலபுத்தி, காரியத்தை ஆரம்பிக்கும் போதே விக்கினமுண்டாகுந் தன்மையுடைமை இத்தைந்நிய யோக பலனாகும்.

**2. காலசர்ப்ப யோகம்:**

இராகு கேதுக்களுக்கு ஒருபுறத்தில் எல்லாக் கிரகங்களுமிருப்பது. சீவியகாலம் முழுவதும் ஏதாவதொருதுறையில் மனச்சஞ்சலம் ஏற்பட்டுக்கொண்டிருப்பது இதற்குப் பலனாகும்.

ஆயின் ஒருகிரகம் மாத்திரம் இராகு கேதுக்களுக்கு ஒருபுறத்திலும், ஏனைய கிரகமெல்லாம் மறுபுறத்திலும் நிற்பது இராசயோகமாகும். தனித்து ஒருபுறத்தில் நிற்குங் கிரகமூலம் பலவித நன்மையும் உண்டாகும்.

**3. சகட யோகம்:**

குருவுக்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் சந்திரனிருப்பது சகட யோகமாகும். சந்திரன் இலக்கினத்திற்குக் கேந்திரத்திலிருந்தாற் சகட யோக பங்கமுண்டாகும்.



பாக்கியத்தைச் சிறிது சிறிதாக இழந்து மீண்டும் அவ்வண்ணமே அதைப் பெறுவதும் தீர்க்க முடியாத மனச்சஞ்சல முடையோனாவதும் இதன் பலனாம்.

**4. கேமத்துரும யோகம்:**

இலக்கினத்திலும், அதற்கிருபுறங்களிலும் அல்லது சந்திரனுடனும் அவனுக்கிருபுறங்களிலும் கிரகங்களில்லாமலிருப்பது கேமத்துரும யோகமாகும்.

துக்கத்தோடு தனித்த வாழ்க்கை அமைவது இதன் பலனாகும்.

**5. பாபகர்த்தரி யோகம்:**

ஒருபாவம் அல்லது ஒருகிரகம் இருபாபக் கிரகங்கட்கிடையி லிருப்பின் அது பாபர்மத்தியமாகும், இவற்றுள் ஒருகிரகம் வலஞ்சுழியாகவும் ஒருகிரகம் இடஞ்சுழியாகவும் குறிப்பிட்ட தானத்தை நோக்கிவரின் இது பாபகர்த்தரி யோகமாகும்.

இந்த யோகத்தினாற் பாதிக்கப்படும் பாவத்தினதும், கிரகத்தினதும் காரகங்கள் மிகப்பழுதடையும்.

**6. அசுபமாலா யோகம்:**

எல்லாக் கிரகங்களும் ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருந்தால் அசுபமாலா யோகமாகும்.

துன்மார்க்கம், துக்கம், பயம், பிறர்வதம் ஆதியன இந்த யோகத்தின் பலன்களாம்.

**7. கோளக யோகம்:**

எட்டுக் கிரகங்களும் ஒருவீட்டிற் சேர்ந்திருப்பது கோளக யோகமெனப்படும்.

இதன் பலன் தரித்திரம்.

ஸ்தானபெலம், ஆதிபத்தியபெலம் ஆதியவற்றால் இச்சேர்க்கை பெலமடையின் ஞானமார்க்கத்தில் நாட்டத்தைக் கொடுக்கும்.

## அநுபந்தம் 6.

சோதிடவாசகம் முதலாம் புத்தகத்தில் அனுபந்தமாக எழுதப்பட்டிருக்கும் பஞ்சாங்க விபரத்தொடர்.

முதல் 17 வினுக்களையும் விடைகளையும் முதலாம் புத்தகத்திற் காண்க.

**18. சென்மத்திரயமென்றா லென்ன?**

ஒருவர் பிறந்த நட்சத்திரம், அதற்குப் பத்தாம், பத்தொன்பதாம் நட்சத்திரங்கள் ஆகிய மூன்று நட்சத்திரங்களும் செனமத் திரயங்களாம். திரயம் - மூன்று.

குறிப்பு; நட்சத்திரங்களின் பெயர்கள் குறிப்பிட்டபொழுது அசுவினி, மகம், மூலம் என மும்மூன்றாக மனனம்பண்ணல் நலமெனக் குறிப்பிட்டிருந்தோம். இங்ஙனம் மும்மூன்ருகச் சேர்க்கப்பட்ட நட்சத்திரங்களில் ஒன்று சென்ம நட்சத்திரமாகில் அம்மூன்றும் சென்மத்திரயங்களாம்.

**19. சென்மத்திரயங்களிற் செய்யத்தகாத காரியங்களெவை?**

சீமந்தம் அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், சமாவர்த்தனம், விவாகம், ஸ்திரீசங்கமம், அப்பியங்கஸ்நானம், சிராத்தம், மருந்துண்ணல், ஆயுதாப்பியாசம், வாகனமேறல், பிரயாணம், பிரதிட்டை முதலியவை சென்மத்திரயங்களிற் செய்யலாகா.

தானதருமம், உழவு, விருந்துணவு, ராஜதரிசனம், வியாபாரம், மகுடாபிஷேகம், அணிகலம்பூணல, வித்தியாப்பியாசம, கிருகாரம்பம், கிருகப்பிரவேசம் முதலாயின செய்யத்தகும்.

**20. பகைநாளென்றா லென்ன?**

ஒருவர் பிறந்த நட்சத்திரத்திற்கு நேர்முந்திய நட்சத்திரம் பகநாளாகும். இதைப் பகைநாளென்பதுமுண்டு. நாளென்பது இங்கு நட்சத்திரத்தைக் குறிக்கும்.

**21. வைநாசிக நாளென்றால் என்ன?**

ஒருவர் பிறந்த நட்சத்திர பாதத்திலிருந்து 88 ஆம் பாதம் எந்த நட்சத்திரத்தில் அமைகிறதோ அந்த நட்சத்திரம் வைநாசிக நாளாகும்.

ஒரு நட்சத்திரத்தின் முதலாம் பாதத்திற்கு இருபத்திரண்டாம் நட்சத்திரமும், இரண்டாம், மூன்றும், நாலாம் பாதங்களுக்கு இருபத்துமூன்றும் நட்சத்திரமும் வைநாசிக நாளாக அமையும்.



**22. அட்டமராசி நாள்களெவை?**

ஒருவருடைய சந்திர லக்கினத்திற்கு (சந்திரன் நின்ற இராசிக்கு) எட்டாம் இராசிக்குரிய நட்சத்திரங்கள் அட்டமராசி நாள்களாகும். உதாரணமாக மேட இராசிக்கு எட்டாம் இராசியாகவுள்ளது விருச்சிகம். இவ்விருச்சிக இராசிக்குரிய நட்சத்திரங்கள் விசாகம் நாலாம் பாதம், அனுஷம், கேட்டை என்பதை முன்படித்த அட்டவணையிற் காணலாம். இந்நட்சத்திரங்கள் மேடராசிக்குரிய அசுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் ஆகிய நட்சத்திரங்களிற் பிறந்தவர்களுக்கு அட்டமராசி நாள்களாக அமையும்.

குறிப்பு! பகநாள், வைநாசிகநாள், அட்டமராசிநாள்களில் மங்கல காரியமேனும், அமங்கல காரியமேனுஞ் செய்தலாகாது.

இந்நாள்களில் செப, தவ, தானச்செயல்களை மேற்கொள்ளுதல் நன்று.

**23. நட்சத்திரங்களுள் அசுப நட்சத்திரங்களெவை?**

"ஆதிரை பரணிகார்த்திகை யாயிலிய முப்பூரங்கேட்டை
தீதறு விசாகஞ் சோதி சித்திரை மகமீராறும்
மாதனங்கொண்டார் தாரார் வழிநடைப்பட்டார் மீளார்
பாய்தனிற் படுத்தார் தேரார், பாம்பின்வாய்த் தேரைதானே"

குறிப்பு: முப்பூரம் = பூரம், பூராடம், பூரட்டாதி.

**24. அபிசித்து என்றால் என்ன?**

இராசி மண்டலத்திலுள்ள பிரதான நட்சத்திரங்கள் இருபத்தேழு. இத்தொகையை இருபத்தெட்டாக வைத்துக் கணக்குப் பார்க்கவேண்டிய துறைகளுமுள. அத்துறைகளில் உத்தராடத்து முடிவில் 5 நாழிகையையும் திருவோண ஆரம்பத்தில் நாலு நாழிகை நாலு விநாடியையுஞ் சேர்த்து ஒரு நட்சத்திரமாக எண்ணப்படும். இது அபிசித்து எனப் பெயர்பெறும்.

**25. அக்கினி நாளென்றா லென்ன?**

பரணி மூன்றும் நாலாம் பாதங்கள் கார்த்திகை நான்கு பாதங்கள். உரோகிணி முதலாம் பாதம் ஆகிய நட்சத்திர பாதங்கள் ஏழிலும் சூரியன் சஞ்சரிக்குங் காலம் அக்கினி நாளாகும். மேடத்திற்குரிய நட்சத்திர பாதம் ஒன்பதில் சற்றிலுள்ள மூன்று பாதங்களிலும் இடபத்திற்

குரிய பாதங்களில் முதலிலுள்ள நாலு பாதங்களிலுஞ் சூரியன் சஞ்சரிக்குங் காலம் எனவுங் கூறலாம். இந்த ஏழு பாதங்களும் ஏறக்குறைய இருபத்துமூன்று பாகை கொண்டன. சூரியன் இத்தூரத்தை ஓடி முடிக்க இருபத்துமூன்று நாட்கள் செல்லும். ஒவ்வொரு வருடப் பஞ்சாங்கத்திலும் சித்திரை மாதம் இருபத்தோராந் தேதி வரையில் தொடங்கி வைகாசி மாதம் பதின்னான்காம் தேதிவரை அக்கினிநாள்க ளெனக் குறிக்கப்பட்டிருப்பது காண்க. இந்நாள்கள் காண்டவ தகனமெனவும் பெயர்பெறும். இப்பெயர் உலகவழக்கில் காண்டாவனமென மருவி வழங்கப்படுகின்றது. இந்நாள்களில் வீடுகட்டுதல், வீடுவேய்தல் முதலிய கருமங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

## 26. அக்கினி யோக மென்று லென்ன?

ஒரு வாரத்திலுள்ள ஒவ்வொரு கிழமையோடுங் குறித்த திதிகள் கூடுவது அக்கினி யோகமாகும். ஞாயிற்றுக்கிழமையோடு துவாதசியும், திங்கட்கிழமையோடு சட்டியும், இவைபோல மற்றைய ஒவ்வொரு கிழமையுடன் குறித்த ஒரு திதியும் சேரும்பொழுது, அக்கினியோக முண்டாகும். அக்கினியாற் பீடையடையக்கூடிய கருமங்கள் அக்கினியோக நாட்களில் விலக்கப்படல் வேண்டும்.

## 27. உஷ்ணசிகை என்ருல் என்ன?

அசுவினி, பூரம் என்பவற்றின் முதற் பாதங்களும், அனுடத்தின் நான்காம் பாதமும், உத்தராடம், சதயம் என்பனவற்றின் இரண்டாம், மூன்ரும் பாதங்களும் உஷ்ணசிகையாம்.

## 28. கரிநா ளென்று லென்ன?

ஒவ்வொரு மாசத்திலும் குறித்த திகதிகள் கரிநாளாம். இவை நற்கருமங்களுக்காகாதனவாய் விலக்கப்படும்.

சித்திரை ஆரும், பதினைந்தாம் திகதிகளும், வைகாசி ஏழாம், பதிருைம், பதினேழாம் திகதிகளும் கரிநாளாகும். இவைபோல மற்றைய மாதங்களிலும் குறிப்பிட்ட திகதிகள் கரிநாட்களாகக் கொள்ளப்படும். இக்கரிநாட்கள் பஞ்சாங்கங்களிற் குறிக்கப்பட்டிருக்கும்.

## 29. மலமாச மென்று லென்ன?

ஒரு மாசத்தில் இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பூரணை வரின் அம்மாசம் மலமாச மெனப்படும். மலமாசங்கள் நன்முகூர்த்தங்களுக்காகா. ஆனல், சூரிய சந்திரரின் உச்சராசிகளாக மேட இடபங்கள் அமைதலின், இவ்விராசிகளுக்குரிய சித்திரை, வைகாசி இருமாதங்களும் மலமாதங்களாகவரின் தோஷஞ் சாந்தியாகுமெனச் சோதிட நூல்கள் கூறும்.



## 30. இராகுகால மென்பதை விளக்குக.

ஒவ்வொரு தினத்திலும் அவ்வவ்வாராதிபன் முதலாக ஏனைய அதிபர்களும் இராகுவுஞ் சேர்ந்த எண்மருள் ஒவ்வொருவருக்கும் மூன்றே முக்கால் நாழிகை உரியதாகும். இராகுவுக்குரிய மூன்றேமுக்கால் நாழிகை காலத்தில் எக்கருமமுந் தொடங்கலாகாது. ஒவ்வொரு தினத்திலும் இராகுவுக்குரிய காலம் பஞ்சாங்கங்களிற் குறிக்கப்பட்டிருக்கும். கீழே குறிக்கப்பட்டிருக்கும் பாட்டு இராகு காலத்தைக் காட்டுவதாகும்.

''அரியிருபத்தாறேகா லம்புலி மூன்றேமுக்கா
லெரிவண்ணனிருபதோடு மிரண்டரை புதன் முவைந்து
குருபதி னெட்டேமுக்கால் குளிர்வெள்ளிபதினென்றேகால்
கரியனேழரை ரசகு காலமென்றறிந்து கொள்ளே.

அரி - ஞாயிறு: அம்புலி - திங்கள்: எரிவண்ணன் - செவ்வாய்; குரு வியாழன்; கரியன் - சனி.

இங்கு சொல்லப்பட்டிருக்கும் நேரம் இராகுகாலந் தொடங்கும் நேரமாகும். குறித்த நாழிகைக்கு மேல் மூன்றேமுக்கால் நாழிகை வரையுஞ் சுபகருமங்க்ள் தொடங்குதலை நீக்கவேண்டும். பகல் மானம் முப்பது நாழிகைகொண்ட தினத்திற்கே இக்காலங்களமைந்தன. மற்றைய தினங்களுக்குப் பகல் நாழிகையின் ஏற்றத் தாழ்வுகளுக்கமைய வீதப்படுத்திக் கொள்க.

## 31. அவமா என்பதை விளக்குக.

மூன்று திதியாவது, மூன்று நட்சத்திரமாவது ஒரு நாளிற் கலந்திருப்பது அவமா ஆகும். இது தோஷமுள்ள நாளாகும்.

## 32. திரிதினஸ்பிருக்கு என்பதை விளக்குக,

ஒரு திதியாவது, ஒரு நட்சத்திரமாவது, ஒருயோகமாவது மூன்று நாள்களிற் கலந்திருப்பது திரிதினஸ்பிருக் ஆகும். இத்தினமுந் தோஷமுள்ளதாகும்.

## 33. ஆகுல மென்றுலென்ன ?

வருஷக் கடைசியிற் பதினைந்து நாளும், மாசக் கடைசியில் மூன்று நாளும், நட்சத்திர முடிவில் இரண்டு நாழிகையும் ஆகுலமாகும். இக்காலங்கள் நற்கருமங்களுக்கு விலக்கப்படல் வேண்டும்.

**34. விஷகடிகை, அமிர்த கடிகை என்பனவற்றை விளக்குக.**

ஒவ்வொரு நட்சத்திரத்திலும் குறிக்கப்பட்ட நாழிகையில் விஷ கடிகை ஆரம்பிக்கும். இந்த நேரம் முதல் நான்கு நாழிகை விஷ கடிகையாம். இதற்கு நட்சத்திரத்தியாஜ்யம் என்னும் பெயரும் வழங் கப்படும். இதன் மேல் நான்கு நாழிகை அமிர்தகடிகையெனப்படும்.

அசுவினி நாற்பத்திரண்டாவது நாழிகையிலிருந்து நாலு நாழிகை நேரம் விஷகடிகையாகும். நாற்பத்தாருவது நாழிகையிலிருந்து நாலு நாழிகை நேரம் அமிர்த கடிகையாகும், அறுபது நாழிகை கொண்ட நட்சத்திரத்திற்கே இக்கால எல்லை அமைந்தன. மற்றைய நட்சத்தி ரங்களுக்குரிய நாழிகையின் ஏற்றத்தாழ்வுகளுக்கேற்ப திரையராசிகஞ் செய்துகொள்க. இவ்வாறு திரயராசிகஞ் செய்தே பஞ்சாங்கத்தில் விஷகடிகை நேரங் குறிக்கப்பட்டிருக்கும். இது தியாஜ்யம் எனப் பஞ்சாங்கங்களிற் குறிக்கப்பட்டிருக்கும்.

விஷகடிகை முகூர்த்தங்களுக்கு விலக்கப்படவேண்டிய காலமென வும், அமிர்தகடிகை கொள்ளவேண்டிய காலமெனவும் அறிக.

**35. வீடு கட்டுவதற்குரிய நிலப் பிரமாணத்தைக் கூறுக.**

வீடுகட்டும் நிலம் ஆகக் குறைந்தது எண்பது முழநீளமும் எழு பத்தெட்டு முழ அகலமுங் கொண்டதாயிருத்தல் வேண்டும். இப்பிர மாணத்துக்குக் குறைந்த அளவுள்ள நிலத்தில் வீடுகட்டவேண்டி நேரி டின் நிலத்தின் அகலத்துக்குத்தக்க நீளத்தையும் அளந்து அவ்வளவு நிலத்தையும் புறம்பான காணியாக எல்லையிட்டு அக்காணிக்குள் வீட்டு க்கு நிலம்வகுத்தல் நலம்.

**36. எந்தெந்த மாதங்களில் எந்தெந்த வாயில் வீடுகள் கட்டத் தகுமென்பதைக் கூறுக.**

சித்திரையில் வடக்குவாயில் வீடும், வைகாசியில் வடக்குத் தெற்கு வாயில் வீடுகளும், ஆடியிற் கிழக்குவாயில் வீடும், ஆவணியிற் கிழக்கு மேற்குவாயில் வீடுகளும், ஐப்பசியில் தெற்குவாயில் வீடும், கார்த்திகையில் தெற்கு வடக்குவாயில் வீடுகளும், தையில் மேற்குவாயில் வீடும், மாசியில் மேற்குக் கிழக்குவாயில் வீடுக ளும், எழுந்திருப்பு முகூர்த்தத்தில் எல்லாவாயில் வீடுகளும் கட்டத் தகும். எழுந்திருப்பு என்பது வாஸ்து புருஷன் துயில் நீங்கியிருக்குங் காலமாகும்.



**37. எந்த மாதங்களில் வீடு கட்டலாகாது?**

ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி மாதங்களில் வீடு கட்டலா காது. ஆடி, மாசி மாதங்களும் குடிபுக, மனைகோல ஆகா வென்று சில நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றன.


**38 எழுந்திருப்பு முகூர்த்த காலங்கள் எவை?**

சித்திரை பத்தாந் தேதி ஐந்து நாழிகை தொடங்கி எட்டேமுக் கால் நாழிகை வரை, வைகாசி இருபத்தோராந் தேதி பதினாறு நாழிகை தொடங்கி பத்தொன்பதேமுக்கால நாழிகை வரை, ஆடி பதினோராந் தேதி இரண்டு நாழிகை தொடங்கி ஐந்தேமுக்கால் நாழிகை வரை, ஆவணி ஆருந் தேதி இருபத்தொரு நாழிகை தொடங்கி இருப்பத்துநான்கேமுக்கால் நாழிகைவரை (சில நூல்கள் பத்து நாழிகை தொடக்கம் பதின்மூன்றேமுக்கால் நாழிகை வரை என்னும்) ஐப்பசி பதினோராந் தேதி இரண்டு நாழிகை தொடங்கி ஐந்தேமுக்கால் நாழிகை வரை. கார்த்திகை எட்டாந் தேதி பத்து நாழிகை தொடக் கம் பதின்மூன்றேமுக்கால் நாழிகை வரை, தை பன்னிரண்டாந் தேதி எட்டு நாழிகை தொடக்கம் பதினொன்றே முக்கால் நாழிகை வரை (சில நூல்கள் இருபத்திரண்டு நாழிகை தொடக்கம் இருபத்தைந்தேமுக்கால் நாழிகை வரை என்னும்) மாசி இருபத்துமூன்றாந் தேதி எட்டு நாழிகை தொடக்கம் பதினொன்றே முக்கால நாழிகை வரை. (சில நூல்கள் இருபத்திரண்டாந் தேதி என்னும்) எழுந்திருப்பு முகூர்த்த காலங் களாகும்.


இவ்வெழுந்திருப்பு நேரத்தில் கிருகாரம்ப முகூர்த்தங்கள் அமைந் தால் அவை விசேட முகூர்த்தங்களாகும். இம்முகூர்த்தத்தில் நான்கு வாயில் வீடும் ஆரம்பிக்கலாம்,

**39. வீடு கட்டுதற்குரிய இராசிகளெவை?**


காணியின் நீளத்தையும் அகலத்தையும் நந்நான்கு கூறுகளாக்கி ஞல் பதினாறு பாகங்கள் ஏற்படும்.



நடுவிலுள்ள நாலு பாகங்களையும் நீக்கி ஏனைய பன்னிரண்டு பாகங்களும் காணியில் அமையும் பன்னிரண்டு இராசிகளைக் குறிக்கும். இதனைப் பின்வரும் படதத்திற் காண்க.





இப்படத்தில் வடகிழக்கு மூலையிலுள்ள சதுரத்துக்கு அடுத்த சதுரம் மேடராசியாகும். அடுத்துவரும் ராசிகள் இடபம் முதலிய மற்றைய இராசிகளாகும், இவ்விராசிகளில் இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஆகிய நாலு இராசிகளும் வீடுகட்டுவதற்குரிய இராசிகளாகும் அவற்றை மேல்வரும் படத்திற்காண்க.







இடபராசியில் மேற்குவாயில் வீடும், சிங்கத்தில் வடக்குவாயில் வீடும், விருச்சிகத்தில் கிழக்குவாயில் வீடும், கும்பத்தில் தெற்கு வாயில் வீடுங் கட்டலாம். இதனைப் பின்வரும் படம் விளக்குகின்றது.




மேற்குறித்த இராசிகள் நான்கிலும் பிற்பக்கமாக அரைவாசியை மூதேவிபதமென நீக்கிவிட்டு எஞ்சிய அரைவாசியிலே வீடுகட்டல் வேண்டும்.



வீட்டுக்கு இங்குக் காட்டியிருக்கும் இராசியின் பாகங் காணுவிடின் முற்பக்கத்தில் நிலத்தைக் கூட்டி எடுப்பதொழியப் பிற்பக்கத்திலுள்ள மூதேவி பதத்திற் சேர்த்தலாகாது.

**40. வீட்டுக்கு இராசிப் பொருத்தம் பார்ப்பதெவ்வாறு?**

எசமானுடைய சந்திரலக்கினத்துக்கு (அதாவது பிறக்கும்பொழுது சந்திரன் நின்ற வீராசிக்கு) மூன்றும், பத்தாம், பதினோராம் இராசிகள் மேற்குறித்த இடபம் முதலாய வீட்டுக்குரிய இராசிகளில் ஒன்ருயமைந்தால் அவ்விராசிகளில் வீடுகட்டுதல் உத்தமம். முதலாம், ஆறும் எட்டாம் பன்னிரண்டாம் இராசிகளில் வீடு கட்டலாகாது. இரண்டாம், நாலாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் இராசிகளில் வீடுகட்டுதல் மத்திமமாகும். சில நூல்கள் சென்மம், ஐந்து, ஒன்பதாமிராசி வீடு உத்தமம் எனவும், மூன்று ஏழு, பதினோராமிராசி வீடு மத்திமம் எனவும், இரண்டு நான்கு, பத்தாமிராசி வீடு அதமம் எனவும், ஆறு எட்டு பன்னிரண்டாமிராசி வீடுகள் விலக்கப்படவேண்டியன எனவும் கூறும்.

**41 வீட்டுக்கு வாயிற் பொருத்தம் பார்ப்பது எவ்வாறு?**

இடபம், மிதுனம்; கடகம் ஆகிய ராசிகளிற் சென்னமானவர்களுக்கு கிழக்கு, வடக்கு வாயில் வீடுகளும், சிங்கம் கன்னி, துலாம் ஆகிய இராசிகளிற் சென்னமானவர்களுக்கு தெற்கு, கிழக்குவாயில் வீடுகளும், விருச்சிகம், தனுசு, மகரம் ஆகிய இராசிகளிற் சென்னமானவர்களுக்கு மேற்கு, தெற்கு, வாயில் வீடுகளும், கும்பம், மீனம், மேடம் ஆகிய ராசிகளிற் சென்னமானவர்களுக்கு வடக்கு, மேற்கு, வாயில்வீடுகளும் பொருந்தும்.

**42- புதிதாகக் கட்டும் வீட்டுக்கு எத்திக்குகளில் வீடிருத்தலாகாது?**

புதிதாகக் கட்டும் மனைக்குக் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, என்னுந் திக்குகளிலே சமீபமாக வேறு வீடுகளிருப்பது தோஷம் இடையில் வழியிருப்பின் அதிக தோஷமில்லை.

**43. கிருகாரம்பம் கிருகப் பிரவேசஞ் செய்யத் தகாதகாலங்களெவை?**

மனைவி கருப்பவதியாயிருக்கும் பொழுதும், விவாகஞ் செய்த வருடத்திலும் அபரக்கிரியை செய்த வருடத்திலும் கிருகாரம்பம், கிருகப் பிரவேசம் என்பன செய்யலாகா.



**44. (அ) வீட்டுக்குக் கிணறு அமைக்க வேண்டிய இடங்கள் எவை?**

வடக்குவாயில் வீட்டுக்குக் கும்பத்திலும், கிழக்கு வாயிலுக்கு இடபத்திலும், தெற்கு வாயிலுக்குச் சிங்கத்திலும், மேற்கு வாயிலுக்கு விருச்சிகத்திலும் கிணறு அமைததல் வேண்டும். இவை வருணபாகம் எனப்படும். ஏழாமிராசி வருணபாகமாம்.

**44. (ஆ) வருணபாகம் அல்லாத மற்றைய திக்குகளிலிருக்குங் கிணறுகளின் பலாபலனெவை?**

கிணறு கிழக்குத்திசையிலிருந்தாற் செல்வமும், தென்கிழக்கிலிருந்தாற் புத்திரநாசமும், தெற்கிலிருந்தாற் களத்திரநாசமும், தென்மேற்கிலிருந்தால் மரணமும், மேற்கிலிருந்தாற் சம்பத்தும், வடமேற்கிலிருந்தாற் சத்துரு நாசமும், வடக்கிலிருந்தாற் சந்தோஷமும், நடுவிலிருந்தாற் பொருளழிவுமாம்.

**45. வீடு கட்டுவதற்கு உத்தம முகூர்த்தம் யாது?**

மதியுதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கட்டி
விதிவெள்ளி தானுதிக்க வேய்ந்து – பதிதனிலே
மந்திரிதா னுதிக்க மாடங்குடி புகுந்தால்
இந்திரன்போல் வாழ்ந்திருக்கலாம்.

**46. எத்திக்குகளிலிருந்து சென்று புதிய மனைப் பிரவேசஞ் செய்தல் வேண்டும்?**

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் சென்று புதிய மனையிற் பிரவேசித்தல் வேண்டும். அங்ஙனம் இயலாவிடத்துக் குறைந்த பட்சம் ஐந்து நாள்களாயினும் பொருத்தமான திக்கிற் குடியிருந்து புதிய மனைப் பிரவேசஞ் செய்தல் வேண்டும்.

## அனுபந்தம் 4.

## கிரக தெய்வமாதியன

| | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | சிவன் | உமை | சுப்பிரமணியர் | விஷ்ணு | தக்ஷிணாமூர்த்தி |
| 2. இரத்தினம் | மாணிக்கம் | முத்து | பவளம் | மரகதம் | புஷ்பராகம் |
| 3. தானியம் | கோதுமை | நெல் | துவரை | பச்சைப் பயறு | கடலை |
| 4. புஷ்பம் | செந்தாமரை | வெள்ளல்லி | சண்பகம் | வெண்காந்தள் | முல்லை |
| 5. சமித்து | எருக்கு | முருக்கு | கருங்காலி | நாயுருவி | அரசு |

குறிப்பு: குறித்த ஒரு கிரகத்தின் தசாபுத்தி நடக்கும்பொழுது எத்தெய்வத்தை வழிபடல்வேண்டும் என்ன இரத்தினக்கல் அணிதல் சாந்தியைக் கொடுக்கும் என்ன தா என்ன சமித்து ஓமத்துக்கு உபயோகிக்க வேண்டும் என்பவற்றை இந்த அட்டவணையிலிருந்து அறிந்து அதன்படி செய்க;

## அனுபந்தம் 5.

## கிரகநோய்

| சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
|---|---|---|---|---|---|
| இருதயத் துடிப்பு | வாதம் | சுரங்கள் | மூளை வியாதி | உள்அவயவரோகம் | இருதய எரிவு |
| மூர்ச்சை | சஷயம் | பிளேக் | ஞாபகக் குறைவு | இரத்தரோகம் | இருதயத் துடிப்பு |
| பார்வை மங்கல் | மலத்தைப்பற்றியரோகம் | உஷ்ணதோஷங்கள் | தெளிவில்லாத பேச்சு | நுரையீரல் வியாதி | சளுக்கு |
| பித்த சுரம் | திமிர்வாதம் | காமாலை | தலைவலி | சுகசன்னி | சிலேஷ்ம வாயு |
| மூளைச் சீர்கேடு | விக்கல் | நீரழிவு | கனுவாதம் | இரத்தநரம்பு ரோகம் | கண்ணோய் |
| வயிற்றில் கட்டிகள் | கண்டமாலை | நீர்க்கடுப்பு | பித்தகபம் | சிலேஷ்மகபம் | |
| தொண்டைவாய்ரோகம் | பேதி | வெந்தபுண் | வாய்வு | மூலரோகம் | |
| சிரரோகம் | சிலேற்பனம் | காயம் | கண்டமாலை | உதிரப்பாடு | |
| உஷ்ணம் | சீதம் | தலைநோய் | | | |
| வயிற்றுநோய் | | கிராணி | | | |
| அரையாப்பு | | | | | |

குறிப்பு:- ஒரு கிரகம் பகை நீசமாகிய பலவித பெலவீனமுமடைந்து ஆறு, எட்டு, பன்னிரண்டா மிடத் தொடர்புபட்டிருப்பின் அதன் தசை, அல்லது புத்திகாலத்தில், கோசர ச

| சுக்கிரன் | சனி | இராகு | கேது |
|---|---|---|---|
| மகாலட்சுமி | சாஸ்தா | துர்க்கை | விநாயகர் |
| வைரம் | நீலம் | கோமேதகம் | வைடூரியம் |
| மொச்சை | எள் | உழுந்து | கொள்ளு |
| வெண்டாமரை | கருங்குவளை | மந்தாரை | செவ்வல்லி |
| அத்தி | வன்னி | அறுகு | அறுகு |

...தானியம் தானஞ்செய்தல் வேண்டும். என்ன புஷ்பத்தால் மேற்குறித்த தெய்வத்தை அருச்சித்தல் வேண்டும்

| சனி | இராகு | கேது |
|---|---|---|
| வியர்வைத் தடை | இருதயதாபம் | விரணம் |
| குளிர்ச்சியினாலுண்டாகும் ரோகங்கள் | குஷ்டம் முதலிய | விஷபாண்டு |
| | சர்மரோகம் | குஷ்டம் |
| பைத்தியம் | விஷரோகம் | வயிற்றுவலி |
| காக்கைவலி | கால்வலி | அக்கினிகண்டம் |
| கறுப்புக்காமாலை | வாயு வலிப்பு | உதரநோய் |
| குஷ்டம் | குன்மம் | வலிப்பு |
| ஊமை, செவிடு | பிளவை | |
| நரம்புத் தளர்ச்சி | சோகை | |
| வாதம் | நஞ்சிட்டபீடை | |
| சூலை | முச்சுநோய் | |
| ஏழை | | |

...சர சஞ்சாரமும் கஷ்டபலனுக்குரியதாயிருப்பின் அக்கிரகத்துக்குரிய ஏதாவதொரு நோய்பாதகனைப் பீடிக்குமென அறியலாம்

அனுபந்தம் 1. (அ)

**இராசி விபரம்:**

| | இராசி | பால் | சர மாதியன | தாது மூதலி யன | துவார மாதியன | உதிப்பு | கால பெலம் | வருணம் | திக்கு | பூதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேடம் | ஆண் | சரம் | தாது | துவாரம் | பிருஷ்டோதயம் (அதமபலன்) | இரவு | சத்திரியன் | கிழக்கு | தேயு |
| 2 | இடபம் | பெண் | திரம் | மூலம் | வான்மிகம் | பிருஷ்டோதயம் | இரவு | வைசியன் | தெற்கு | பிருதுவி |
| 3 | மிதுனம் | ஆண் | உபயம் | சீவன் | கர்ப்பம் | சிரோதயம் (உத்தமபலன்) | இரவு | சூத்திரன் | மேற்கு | வாயு |
| 4 | கடகம் | பெண் | சரம் | தாது | துவாரம் | பிருஷ்டோதயம் (அதமபலன்) | இரவு | பிராமணன் | வடக்கு | அப்பு |
| 5 | சிங்கம் | ஆண் | திரம் | மூலம் | வான்மிகம் | சிரோதயம் (உத்தமபலன்) | பகல் | சத்திரியன் | கிழக்கு | தேயு |
| 6 | கன்னி | பெண் | உபயம் | சீவன் | கர்ப்பம் | சிரோதயம் (உத்தமபலன்) | பகல் | வைசியன் | தெற்கு | பிருதுவி |
| 7 | துலாம் | ஆண் | சரம் | தாது | துவாரம் | சிரோதயம் (உத்தமபலன்) | பகல் | சூத்திரன் | மேற்கு | வாயு |
| 8 | விருச்சிகம் | பெண் | திரம் | மூலம் | வான்மிகம் | சிரோதயம் (உத்தமபலன்) | பகல் | பிராமணன் | வடக்கு | அப்பு |
| 9 | தனு | ஆண் | உபயம் | சீவன் | கர்ப்பம் | பிருஷ்டோதயம் (அதமபலன்) | இரவு | சத்திரியன் | கிழக்கு | தேயு |
| 10 | மகரம் | பெண் | சரம் | தாது | துவாரம் | பிருஷ்டோதயம் (அதமபலன்) | இரவு | வைசியன் | தெற்கு | பிருதுவி |
| 11 | கும்பம் | ஆண் | திரம் | மூலம் | வான்மிகம் | சிரோதயம் (உத்தமபலன்) | இரவு | சூத்திரன் | மேற்கு | வாயு (ஆகாயம்) |
| 12 | மீனம் | பெண் | உபயம் | சீவன் | கர்ப்பம் | பக்கஉதயம்) மத்திமபலன் | சந்தி | பிராமணன் | வடக்கு | அப்பு |

| நிறம் | ரோகம் | அங்கம் | கால் | சஞ்சாரம் | கேந்திர பெலம் | தன்மை |
|---|---|---|---|---|---|---|
| சிவப்பு | உஷ்ணரோகம் | தலை | 4 கால் | வனம் | 10 | |
| வெண்மை | சலரோகம் | முகம் | 4 கால் | வனம் | 10 | |
| பச்சை | மேகரோகம் | கழுத்து | 2 கால் | சோலை கிராமம் சயனம் | உதயம் | மலடு |
| வெண்மை | விஷரோகம் | தோள் | பலகால் | சலம் வயல் | 4 | செழித்தன |
| புகைநிறம் | உஷ்ணரோகம் | மார்பு | 4 கால் | வனம் மலை | 10 | மலடு |
| பச்சை | வாதம் | விலா | 2 கால் | நகரம் கிராமம் தோணி | உதயம் | மலடு |
| பலநிறம் | நீர்ப்புகைச்சல் | வயிறு முதுகு | 2 கால் | கிராமம் கடை | உதயம் | |
| மஞ்சள் | விஷம் | பீஜம் | பலகால் | பள்ளம் | 7 | செழித்தன |
| பொன்மை | வாயு | தொடை சகனம் | முன் 2 பின் 4 | கிராமம் வனம் | உதயம் 10 | |
| வெண்மை கலந்த கருமை | பித்தவாதம் | முழங்கால் | முன் 4 பின்பல | வனம் சலம் | 10 4 | |
| கறுப்பு | பித்தவாதம் | கணுக்கால் | 2 கால் | கிராமம் குயவன் இருப்பிடம் | உதயம் | |
| வெண்மை | சலரோகம் | பாதம் | பல கால் | சலம் | 4 | செழித்தன |

அனுபந்தம் 1. (ஆ)

## கிரக - காரகங்கள்

| | கிரகங்கள் | பால் | தாது ஆதியன | சந்ததி | பூதம் | குணம் | முப்பிணி | தாது | சுவை | நிறம் | திக்கு | அங்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | ஆண் | மூலம் | பிதா | தேயு | இராசதம் | பித்தம் | என்பு | கார்ப்பு | தாமிரம் | கிழக்கு | சிரம் |
| 2. | சந்திரன் | பெண் | சீவன் | மாதா | அப்பு | சாத்வீகம் | சிலேற்பனம் | இரத்தம் | உப்பு | வெண்மை | வட — — மே | முகம் |
| 3. | செவ்வாய் | ஆண் | தாது | சகோதரம் | தேயு | தாமதம் | பித்தம் | மச்சை | கசப்பு | சிவப்பு | தெற்கு | மார்பு |
| 4. | புதன் | அலி | சீவன் | மாதுலன் | வாயு | இராசதம் | வாதம் | தோல் | உவர்ப்பு | பச்சை | வடக்கு | முதுகு |
| 5. | குரு | ஆண் | சீவன் | புத்திரன் | ஆகாயம் | சாத்வீகம் | வாதம் | மச்சை | தித்திப்பு | தங்கம் | வ — கி | வயிறு |
| 6. | சுக்கிரன் | பெண் | மூலம் | களத்திரம் | அப்பு | இராசதம் | சிலேற்பனம் | இந்திரியம் | புளிப்பு | வெண்மை | தெ — கி | இலிங்கம் |
| 7. | சனி | அலி | தாது | சேவகன | வாயு | தாமதம் | வாதம் | நரம்பு | கைப்பு | கருமை | மேற்கு | தொடை |
| 8. | இராகு | பெண் | தாது | பிதிர் பாட்டன் | ஆகாயம் | தாமதம் | பித்தம் | நரம்பு | புளிப்பு | கருமை | தெ — — மே | கைகள் |
| 9. | கேது | அலி | தாது | மாதுரு பாட்டி | ஆகாயம் | தாமதம் | பித்தம் | நரம்பு | புளிப்பு | சிவப்பு | தெ — — மே | கால்கள் |

| உலோகம் | வஸ்திரம் | இடம் | வர்ணம் | ருது | சாகை | ஏனைய காரகங்கள் |
|---|---|---|---|---|---|---|
| செம்பு | | | க்ஷத்திரியன் | | | 1. கீர்த்தி, சத்தியநெறி, இராசகாரியம், தேகம், சீவனம். |
| முத்து | புதிய வெண்மை வஸ்திரம் | சலசமீபம் | வைசியன் | வர்ஷ | | 2. புத்தி, நற்குணம், மனம், வீட்டுச் சிறப்பு. வாசனுதிரவியங்கள், பால் போன்ற போசனம். |
| பவளம் | சிவந்த தீப்பட்ட வஸ்திரம் | சமையலிடம் | சூத்திரன் | கிரீஷ்ம | சாம | 3. சரீரபெலம், உற்சாகம், அகங்காரம், பூமி, கடுரவசனம், சத்துரு, கடன். |
| வெண்கலம் | நூல் —-ஒதுங்கிய வஸ்திரம் | விசித்திர இடம் | சூத்திரன் | சரத் | அதர்வ | 4. கல்வி, விவேகம், வாக்குவல்லபம், பாண்டித்தியம், கணக்கு வல்லபம், வியாபாரம், வாதம், வாய்வு. |
| தங்கம் | பீதாம்பரம் | பொக்கிஷ சாலை | பிராமணன் | ஹேமந்த | இருக்கு | 5. நல்லொழுக்கம்,. மந்திரோபதேசம், மூதன்மை, ஞானசாத்திர உணர்ச்சி. வேதாகம ஆராய்வு. |
| வெள்ளி | மிருதுவான வஸ்திரம் | அந்தப்புரம் | பிராமணன் | வசந்த | யசுர் | 6. போகம், குளிர்ந்தவாக்கு, அலங்காரம், விவாகம், வஸ்திரச்சிறப்பு, வாகனுதிகள், நவரத்தினம். |
| இரும்பு | பழைய வஸ்திரம் | சேரி | சண்டாளன் | சிசிர | | 7. தீயொழுக்கம், இராசவிரோதம், சேவகர், வேளாண்மை, பசு விருத்தி, ஆயுள், தேசசஞ்சாரம். |
| | | | | | | 8. விகடம், சத்துருதுன்பம், தீர்த்தயாத்திரை, மோட்சசாதனை, மந்திரசாதனை, அந்நியதேசம், விஷம், இரணுதிகள். |
| | | | | | | 9. கீழ்த்தொழில், சித்தசுவாதீனமின்மை, மறதி, ஞானசாதனை, உதிரநோய், வலிப்பு, குஷ்டம். |

# விளம்பரம்

ஜெனனக் குறிப்பு ஒன்றற்கு வேண்டிய கணித பாகங்கள் எம்மால் வெளியிடப்பட்ட சோதிட ரசகம் 1-ம் புத்தகத்தில் அடங்கியுள்ளன.

ஜெனனக் குறிப்பு ஒன்றற்குப் பலன் காணும் முறை இவ்விரண்டாம் புத்தகத்திற் கூறப்பட்டுள்ளது. சாதாரணமாகக் காணக் கிடைக்காத பல அரிய விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

சொற்ப பிரதிகளே உள. ஆதலின் வாசகர்கள் தங்கள் பிரதிக்கு முந்திக் கொள்க.

கிடைக்குமிடம்:

**M. K. பொன்னையாபிள்ளை**

231, நொறிஸ் றோட்,

பெற்ரு,

கொழும்பு. 11

மூ. சின்னப்பு

இளைப்பாறுகைபெற்ற ஆசிரியர்

அளவெட்டி

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.